கொண்டிருந்தார்கள். யுத்தம் ஆரம்பமாகி முஸ்லிம்கள் ஆரம்பத்தில் வெற்றி யடைந்தனர். பகைவர்கள் புறங்காட்டினர். என்றாலும், மலைக் கணவாயில் நிறுத்தி வைக்கப்பட்ட அம்பு வீரர்களில் அநேகர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கட்டளையை மீறி அந்த இடத்தை விட்டகன்று பகைவர்கள் விட்டுச் சென்ற பொருள்களை எடுப்பதில் ஈடுபட்டார்கள். இதனைப் பகைவர்கள் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டனர். அவர்களது குதிரைப் படை அக்கணவாய் வழியாக வந்து, பின்புறமிருந்து பலமாகத் தாக்கியதால் முஸ்லிம்கள் பலத்த சேதத்திற்குள்ளாகிச் சிதறிப் போனார்கள். இதனைப் பற்றிய முழு விபரம் மேலே ஓரிடத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. எனவே, யுத்தம் முடிந்து முஸ்லிம்கள் மதீனமா நகருக்குத் திரும்பச் செல்லுகையில் இந்தக் கஷ்டத்தைக் குறித்துச் சிலர் “அல்லாஹு தஆலா உதவி செய்வதாக நமக்கு வாக்களித்திருக்கும் போது நமக்கு இந்தக் கஷ்டம் ஏற்பட்டது எப்படி?” என்று கூறினர். இதற்கு இறைவன் இந்த ஆயத்தில் “அல்லாஹுதஆலாவின் கட்டளைப்படி நீங்கள் பகைவர்களைப் பலமாகத் தாக்கி அடர்ந்தேறி போரிட்டுக் கொண்டிருந்தபோது அவன் தனது வாக்குறுதியை உங்களுக்கு உண்மையாக்கி வெற்றியை அளித்தான். வெற்றியைக் கண்டு பேராசையுற்று அவர்கள் விட்டுப்போன பொருட்களை எடுக்க வேண்டுமென்று எண்ணி உங்களது அபிப்பிராயத்தில் நீங்கள் கோழையராகி, மலைக்கணவாயை விட்டு அகலக் கூடாது என்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருந்த கட்டளையைக் குறித்து ஒருவருக்கொருவர் தர்க்கம் செய்து கொண்டீர்கள். நீங்கள் விரும்பிய வெற்றியை உங்களுக்கு இறைவன் காண்பித்த பிறகு நீங்கள் அக்கட்டளையை மீறி நடந்து கொண்டீர்கள். இதன் பயனாக அவனது உதவி அதன் பின்னர் உங்களுக்குக் கிடைக்காமல் நின்றுவிட்டது.எனவேதான் உங்களுக்குக் கஷ்டம் வந்தது.உங்களில் அக்கட்டளையை மீறியவர்கள் தங்கள் செய்கைக்காக வருந்தியதால் அலாஹு தஆலா அதனைப் பொறுத்துக் கொண்டான். தவிரவும், உங்களில் ஈமானின் மீது உறுதியுள்ளவர் எவர் என்பதை வெளிப்படையாகக் காண்பிப்பதற்காக உங்களை அவன்

சோதிக்க வேண்டியதுமிருந்தது. ஆதலால், உங்களுக்குக் கஷ்டம் வந்தது. மேலும், இவ்வுலகத்தைய பொருள்களை விரும்புபவர்களும் அவ்வுலகத்தை விரும்புபவர்களும் உங்களில் இருக்கிறார்கள்” என்று பதில் கூறி இருக்கிறான். مِنْكُمْ مَنْ يُرِيدُ الدُّنْيَا **இம்மையை நாடுபவர்கள் உங்களில் இருக்கிறார்கள்** என்ற வசனம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கட்டளையை மீறி மலைக் கணவாயை விட்டு வந்து, பகைவர்கள் விட்டுச் சென்ற பொருள்களை எடுப்பதில் முனைந்து நின்றவர்களையும், وَمِنْكُمْ مَنْ يُرِيدُ الْآخِرَةَ **இன்னும் மறுமையை விரும்புபவர்கள் உங்களில் இருக்கிறார்கள்** என்ற வசனம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அக்கணவாயை விட்டு அகலாமல் நின்று பகைவர்களது குதிரைப் படையின் தாக்குதலுக்கு இலக்கலாகி ஷஹீதாகி விட்டவர்களையும் கஷ்டத்திற்கு உள்ளானவர்களையும் குறிக்கின்றன.

إِذْ تُصْعِدُونَ وَلَا تَلْوُونَ عَلَىٰ أَحَدٍ وَالرَّسُولُ
يَدْعُوكُمْ فِي أُخْرَاكُمْ فَأَثَابَكُمْ غَمًّا بِغَمٍّ لِكَيْلَا
تَحْزَنُوا عَلَىٰ مَا فَاتَكُمْ وَلَا مَا أَصَابَكُمْ ۗ وَاللَّهُ خَبِيرٌ
بِمَا تَعْمَلُونَ ۝

152. அந்நேரத்தில், (நம்முடைய) இத்தூதர் உங்களுக்குப் பின்னாலிருந்து (கொண்டு என்னிடம் வாருங்கள் என்று) உங்களை அழைத்துக் கொண்டிருக்கும் போது, ஒருவரையும் நீங்கள் திரும்பிப் பார்க்காமல் (போர்க்களத்தை விட்டு) நீங்கள் சென்று கொண்டிருந்தீர்கள். ஆதலின், (நமது ரசூலின் கட்டளையை அலட்சியஞ் செய்து அவரைத்) துக்கப்படுத்தியதற்குப் பதிலாக உங்களுக்குத் துக்கத்தைக் கொடுத்தான். (ஏனெனில்) உங்களுக்குத் தவறி விட்டதன் மீதும், உங்களுக்கு நிகழ்ந்த சேதத்தின் மீதும் நீங்கள்

கவலைப்படாமலிருப்பதற்காக. மேலும் அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு அறிந்தவன்.

تُصْعِدُونَ **துஸ்இதூன** என்ற பதம் **அல்இஸ்ஆது** என்ற பதத்திலிருந்து பிறந்த நிகழ்காலத்தை அறிவிக்கும் வினைச் சொல். **அல்இஸ்ஆது** என்பதற்குச் சென்று விடல், வெகுதூரம் விலகிச் செல்லல், ஏறுதல் என்பன பொருள்களாகும். எனவே, உஹதுப் போரின் போது கணவாய் வழியாக காஃபிர்கள் வந்து முஸ்லிம்களைப் பலமாகத் தாக்கியதால் முஸ்லிம்கள் சிதறி வெகுதூரம் விலகிச் சென்று விட்டார்கள். ஆனால், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களுக்குப் பின்னாலிருந்து கொண்டு "அல்லாஹ்வின் அடியார்களே! என்னிடம் வாருங்கள்" என்று கூறிக் கொண்டிருந் தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அழைப்பைச் செவியேற்ற பிறகுதான் முஸ்லிம்கள் மீண்டும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து ஒன்று கூடினர்.

இவ்வாறு முஸ்லிம்கள் பகைவர்களுக்குத் தோல்வியை அளித்ததால் போர்க்களத்தில் பகைவர்கள் தங்கள் பொருட்களை விட்டுவிட்டுப் புறங்காட்டிச் சென்ற இந்நிலை முஸ்லிம்கள் சிதறி ஓடியதால் வேறு மாதிரியாக மாறிற்று. இதனால் முஸ்லிம்கள் அடைய இருந்த பொருட்களை அடைய முடியாமலாகி விட்டது, கிடைத்த வெற்றியும் தவறியது. இதற்குப்பதிலாக முஸ்லிம்கள் பலத்த சேதமடைந்தனர். "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள்" என்ற பொய்ச் செய்தியைக் கேள்விப்பட்டு முஸ்லிம்கள் திகைத்துக் கவலை கொண்டனர். ஆகவே, அவர்களுக்குக் கிடைத்த பிரயோஜனம் தவறிப்போனது ஒரு வருத்தம், கஷ்டத்தை அடைந்தது மற்றொரு வருத்தம். ஆகவே, இரண்டு விதமான வருத்தங்களையும் குறித்து கவலைப்பட வேண்டாம் என்றும், உங்களது கிரியைகளையும் நோக்கங்களையும் இறைவன் உணர்ந்திருக்கிறான் என்றும், இந்த ஆயத்தில் முஸ்லிம்களுக்கு ஆறுதல் சொல்லப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- பொறுமை, உறுதி, அல்லாஹு தஆலாவின் மீது பொறுப்புச் சாட்டிவிட்டு நிம்மதியாக இருத்தல் உலக அழுக்கையும் அதன் கூழங்களையும் தவிர்த்துக் கொள்ளல், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மாறு செய்யாதிருத்தல் ஆகியவற்றால் இறைவனது உதவி, வெற்றி ஆகியவைகள் உண்டாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மாறு செய்வது சோதனைக்கும், பகைவர்களை விட்டுத் திரும்புவதற்கும் காரணமாக இருக்கிறது. ஆகவே, தனது அகம்புறம் ஆகிய இரண்டிலுமுள்ள பகைவர்களை விட்டுத் தப்பித்துக் கொண்டு அவர்களை வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிர்ணயித்த பாதையை விட்டு வேறு பாதையிற் செல்லக் கூடாது. இன்னும் தனக்கு ஏற்படுஞ் சோதனையைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு அதனைப் பொருந்திக் கொள்ள வேண்டும், தனது மறுமைக்காகக் கவலை கொள்ளாமல் இம்மை மறுமைப் பேறுகளில் ஒன்றாகிய ஹக்கைத் தேட வேண்டும். அதாவது அல்லாஹு தஆலாவை அடைய வேண்டும் என்று கவலை கொள்ள வேண்டும். மார்க்க விஷயங்களில் ஏற்படுகிற கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

"முரீதின் படித்தரங்களில் மிகவும் அற்பமானது அல்லாஹு தஆலா அவரை நரகில் பிரவேசிக்கச் செய்து. அதன் வேதனை அவரைச் சூழ்ந்து கொண்டாலும் அவரது இருதயத்தில் அல்லாஹு தஆலாவின் மீது மென்மேலும் பற்று அதிகமாகிக் கொண்டே இருக்க வேண்டும். இன்னும் அவருக்கு அல்லாஹுதஆலாவின் மீது ஷவ்க்கும் ஆசையும் உண்டாகிக் கொண்டே இருக்க வேண்டும். இன்னும் சுவர்க்கம் அவருக்கு வானத்திற்கும் பூமிக்கும் மத்தியிலுள்ள கடுகுப் பிரமாணத்திற்குச் சமமாக இருக்க வேண்டும்" என்று துன்னூன் குத்திஸ ஸிர்ருஹு கூறி இருக்கிறார்கள். ஆகவே, ஸாலிக்கானவர் அதாவது மெஞ்ஞான வழியில் நடப்பவர் தன்னை வழிபாடு என்னும் உறைகல்லில் உறைத்து, தன்னை ஒப்புக் கொடுத்தல் என்ற தலைவாசலில் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அல்லாஹு தஆலாவிடத்தில் அவருக்கு ஒரு அந்தஸ்து ஏற்படும்.

ஹிக்காயத்து:- ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹூ தஆலா அன்ஹூ அவர்களிடம் ஒரு முறை ஹளரத் அலி ரலியல்லாஹூதஆலா அன்ஹூ அவர்கள் “அல்லாஹ்வின் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களது கலீஃபா அவர்களே! எங்களைத் தாங்கள் முந்தி விட்டீர்கள். எக்காரணத்தினால் தாங்கள் இந்த அந்தஸ்தை அடைந்தீர்கள்?” என்று வினவினார்கள். அதற்கு ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹூதஆலா அன்ஹூ அவர்கள் “ஐந்து காரியங்களால், 1. மனிதர்களை நான் இரண்டு விதமாகக் கண்டேன். இவ்வுலகை நாடுபவர் ஒரு வகை. மறுமையை நாடுபவர் மற்றொரு வகை. ஆனால், நான் அல்லாஹூதஆலாவை நாடுபவனாக இருக்கிறேன். 2. நான் இஸ்லாத்தைத் தழுவியதிலிருந்து இவ்வுலகின் உணவை நான் வயிறார அருந்த வில்லை. ஏனெனில், அல்லாஹூ தஆலாவை அறிதல் என்னும் மஃரிஃபாவின் இன்பம் இவ்வுலக உணவின் இன்பங்களில் எனக்குப் பற்றில்லாமற் செய்து விட்டது. 3. நான் இஸ்லாத்தைத் தழுவியதிலிருந்து இவ்வுலகின் பானங்களால் நான் தாகந்தீரவில்லை. ஏனெனில் அல்லாஹூ தஆலாவின் பால் எனக்குள்ள பற்று இவ்வுலகத்தின் பானங்களின் மீது எனக்குப் பற்றில்லாமற் செய்து விட்டது. 4. இம்மை சம்மந்தமான காரியம், மறுமை சம்மந்தமான காரியம் ஆகிய இரண்டு காரியங்கள் என் முன்னிருந்தால், இம்மை சம்மந்தமான காரியத்தைப் பார்க்கினும் மறுமை சம்மந்தமான காரியத்தைத்தான் நான் தெரிந்தெடுத்துக் கொள்வேன். 5. நான் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுடன் தோழமை கொண்டு அத்தோழமையை நன்கு நிறைவேற்றினேன். எனவேதான் நான் ஒரு கணநேரங்கூட நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருப்பதை விட்டு விடவில்லை” என்று கூறினார்கள். எனவேதான் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத்துச் செய்தபோது, ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹூதஆலா அன்ஹூ அவர்கள் “கார்” என்னும் மலைக் குகைக்குள்ளும் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுடனிருந்தேன். நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் விஷயத்தில் தமக்கு பல கஷ்டங்கள் நிகழ்ந்தன.

அவ்வாறு இருந்தும் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுடன் தமது இருதயத்தைச் சேர்ப்பதை விடவுமில்லை; நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மாறு செய்ய நினைக்கவுமில்லை.

ثُمَّ أَنْزَلَ عَلَيْكُمْ مِّنْ بَعْدِ الْغَمِّ أَمَنَةً نُّعَاسًا
يَّغْشٰى طَآئِفَةً مِّنْكُمْ وَطَآئِفَةٌ قَدْ أَهَمَّتْهُمْ
أَنْفُسُهُمْ يَظُنُّوْنَ بِاللّٰهِ غَيْرَ الْحَقِّ ظَنَّ الْجَاهِلِيَّةِ
يَقُوْلُوْنَ هَلْ لَّنَا مِنَ الْأَمْرِ مِنْ شَيْءٍ قُلْ إِنَّ
الْأَمْرَ كُلَّهُ لِلّٰهِ يُخْفُوْنَ فِيْ أَنْفُسِهِمْ مَّا لَا
يُبْدُوْنَ لَكَ يَقُوْلُوْنَ لَوْ كَانَ لَنَا مِنَ الْأَمْرِ
شَيْءٌ مَّا قُتِلْنَا هٰهُنَا قُلْ لَّوْ كُنْتُمْ فِيْ بُيُوْتِكُمْ
لَبَرَزَ الَّذِيْنَ كُتِبَ عَلَيْهِمُ الْقَتْلُ إِلٰى مَضَاجِعِهِمْ
وَلِيَبْتَلِيَ اللّٰهُ مَا فِيْ صُدُوْرِكُمْ وَلِيُمَحِّصَ مَا
فِيْ قُلُوْبِكُمْ وَاللّٰهُ عَلِيْمٌ بِذَاتِ الصُّدُوْرِ ۝

153. பின்னர், உங்கள் மீது (அல்லாஹ்) அத்துக்கத்துக்குப் பின் அமைதியை (அதாவது) சிறு தூக்கத்தை இறக்கி வைத்தான். உங்களில் ஒரு கூட்டத்தினரை அது சூழ்ந்து கொள்ளுகிறது. இன்னும் (உங்களில் நின்றும்), தங்களைத் தாங்களே நிச்சயமாகத் துக்கப்படுத்திக் கொண்ட (மற்றொரு) கூட்டத்தினர் அல்லாஹ்வின் மீது அஞ்ஞான (காலத்தின் தகுதியற்ற) எண்ணத்தை நியாயமின்றி எண்ணிக் கொண்டிருக்கின்றனர். (இன்னும், நமக்கு அல்லாஹ்

உதவி புரிவதாகக் கூறிய) காரியத்தில் ஏதாவது (சாதகம்) இருக்கிறதா? என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 'நிச்சயமாகக் காரியம் யாவும் அல்லாஹ்வுக்கே உரியன' என்று (நபியே நீர் அவர்களுக்குக்) கூறும். உம்மிடம் அவர்கள் வெளிப்படுத்தாததைத் தங்கள் இருதயங் களுக்குள் மறைத்து வைக்கின்றார்கள். (அதாவது) 'நமக்கு (யுத்த சம்பந்தமான) காரியத்தில் ஏதேனும் (சுய உரிமை) இருந்திருக்கு மானால் (இங்கு வந்து) இவ்விடத்தில் கொல்லப்பட்டிருக்க மாட்டோம்' என்று அவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். '(யுத்தத்திற்கு வராமல்) உங்கள் வீடுகளிலேயே நீங்கள் இருந்தாலும், எவர்கள் மீது கொல்லப்படுதல் விதிக்கப்பட்டிருந்ததோ அவர்கள் நிச்சயமாகத் தாங்கள் கொல்லப்படும் இடங்களுக்குத் (தானாக) வெளியேறி (வந்தே) இருப்பார்கள்' என்று கூறுவீராக. மேலும், உங்கள் இருதயங் களிலிருக்கிற (எண்ணத்)தை அல்லாஹ் சோதிப்பதற்காகவும்; இன்னும் உங்கள் இருதயங்களுக்குள் இருப்பதை பிரித்தறிவிப் பதற்காகவுமே (உஹதில் உங்களுக்குச் சேதமேற்படச் செய்தான்). தவிர, உள்ளங்களில் இருப்பதை அல்லாஹ் நன்கு அறிபவன்.

உஹதுப் போர் நிகழ்ந்த போது இந்த ஆயத்தில் சொல்லப் பட்டவாறு சிறு தூக்கம் முஹாஜிர்களுக்கும் அன்ஸார்களுக்கும் ஏற்பட்டது. முனாஃபிக்குகள் அல்லாஹு தஆலாவைக் குறித்து இந்த ஆயத்தில் சொல்லப்பட்டது போல பலவாறாகக் கூறிக் கொண்டும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டும் இருந்தனர். இவர்களது கூற்றுக்களுக்கு இந்த ஆயத்தில் கண்டவாறு பதிலளிக்கும்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கட்டளை யிட்டிருக்கிறான்.

ரிவாயத்து:- "உஹதுடைய தினத்தில் தூக்கம் பிடித்தவர்களில் நானும் ஒருவனாயிருந்தேன். நான் விழித்துத் தலையை உயர்த்திப் பார்க்கும் போது எல்லோரும் தூக்கத்தில் சாய்ந்திருந்தனர். வாள்கள் அவர்களது கைகளிலிருந்து தவறின. அவற்றை நான் எடுத்தேன்" என்று அபூதல்ஹா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

إِنَّ الَّذِينَ تَوَلَّوْا مِنكُمْ يَوْمَ الْتَقَى الْجَمْعَانِ ۙ
إِنَّمَا اسْتَزَلَّهُمُ الشَّيْطَانُ بِبَعْضِ مَا كَسَبُوا ۖ
وَلَقَدْ عَفَا اللَّهُ عَنْهُمْ ۗ إِنَّ اللَّهَ غَفُورٌ حَلِيمٌ ﴿١٥٤﴾

154. நிச்சயமாக, (இணை வைப்போர், விசுவாசிகள் ஆகிய) இரண்டு கூட்டத்தினரும் (ஒருவரையொருவர்) சந்தித்(து உஹதில் யுத்தம் புரிந்)த நாளில் (விசுவாசிகளாகிய) உங்களிலிருந்து எவர்கள் பின் வாங்கினரோ, அவர்கள் சம்பாதித்த சிலவற்றின் காரணமாய் அவர்களை(ப் பின் வாங்கும்படியான தவறில்) சருகச் செய்தது ஷைத்தான்தான். எனவே, அவர்களை நிச்சயமாக அல்லாஹ் மன்னித்து விட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவன் பொறுமையுள்ளவன்.

يَوْمَ الْتَقَى الْجَمْعَانِ இரண்டு கூட்டங்களும் சந்தித்த நாள் என்பது உஹதுப் போர் நிகழ்ந்த நாளாகும். இவ்விரண்டு கூட்டங்களில் ஒன்று காஃபிர்களது கூட்டம், மற்றொன்று உஹதுப் போரின் போது பின்வாங்கி ஓடிய முஸ்லிம்களது கூட்டம்.

بِبَعْضِ مَا كَسَبُوا அவர்கள் சம்பாதித்த (பாவத்)தில் சில என்றது உஹதுப் போரில் காஃபிர்கள் புறங்காட்டி ஓடிய போது விட்டுச் சென்ற பொருள்களைப் பார்த்து அவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டது, மலைக்கணவாயை விட்டு அகன்றது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கட்டளையை மீறியது முதலியவைகளாகும். இவ்விதமான குற்றங்களைச் செய்ததனால் அவர்களுக்கு அல்லாஹுதஆலாவின் உதவி கிடைக்காமற் போய் விட்டது. ஆகவே, அவர்கள் மன தைரியத்தை இழந்தனர். ஷைத்தான் அவர்களைத் தவறும்படி அழைத்தான். அவர்கள் அதற்கிணங்கி விரண்டோடினர். பின்னர், அவர்கள் தங்களுடைய இச்செய்கைக்கு வருந்தி தவ்பாச் செய்ததால் இறைவன் அவர்களை மன்னித்து விட்டான்.

حَلِيْمٌ **ஹலீமுன்** அதாவது பொறுமையுள்ளவன் என்பதற்கு பாவம் செய்தவர்களை உடனே தண்டிக்க வேண்டும் என்று அவன் அவசரப்பட மாட்டான் என்பது கருத்து. ஏனெனில், பாவத்தை விட்டு தவ்பாச் செய்யச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்பதற்காகவே யாகும்.

அறிந்துகொள்:- ஷைத்தான் முக்லிஸான அதாவது இதய சுத்தியுள்ளவர்களான அஹ்லுல்யக்கீன் (உறுதியுள்ளவர்)களையும், மெஞ்ஞான ஒளியுள்ளவர்களையும் வழி கெடுக்கச் சக்தி பெறமாட்டான். பாவத்தைச் செய்ததன் காரணமாக இருதயத்தில் இருளும் பேராசையும் உண்டாகின்றன. ஆகவே, பாவங்களைச் செய்யாமலிருந்து இருதயத்தில் இருளை உண்டாக்கிக் கொள்ளாமல் இருந்தால் அவர்கள் பால் நெருங்குவதற்குக் கூட ஷைத்தானால் முடியாது.

ஹிக்காயத்து:- ஒரு முறை இப்லீஸை ஹளரத் ஜுனைதுல் பகுதாதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கனவில் பார்த்தார்கள். அவன் நிர்வாணமாக இருந்தான். அப்பொழுது ஜுனைத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அவனை நோக்கி "மனிதர்களுக்கு எதிரில் நிர்வாணமாக இருப்பதில் உனக்கு வெட்கமில்லையா?" வென்று கேட்டார்கள். அதற்கு அவன் "இவர்கள் மனிதர்களா? மனிதர் என்றால் ஷுனிஸிய்யாவிலுள்ள மஸ்ஜிதில் இருப்பவர்கள்தான். அவர்கள் எனது உடலை அழித்து எனது ஈரல் குலையைக் கரித்துப் போட்டார்கள்" என்று கூறினான். பிறகு தூக்கம் தெளிந்தது. கனவில் இப்லீஸ் கூறிய மஸ்ஜிதுக்கு ஜுனைத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சென்றார்கள். அங்கு ஒரு கூட்டத்தினர் முட்டுக்கால்களின் மீது தலையைக் கவிழ்த்தியவர்களாக இருக்கக் கண்டார்கள். அந்த மனிதர்கள் ஹளரத் ஜுனைத் பகுதாதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடத்தில் "அந்த கபீஸ் (இப்லீஸ்) சொன்ன செய்திகள் உம்மை ஏமாற்றிவிட வேண்டாம் மஃரிஃபா என்பதன் பிரகாசத்தினால் இருதயம் பிரகாசமுள்ளதாகி விட்டால் அதற்குப் பக்கத்தில் கூட ஷைத்தானின் வஸ்வஸா வரமாட்டாது" என்று கூறினார்கள்.

ரிவாயத்து:- நான் இப்லீஸை கனவில் கண்டேன். உடனே, அவனை அடிப்பதற்காக எனது கைத்தடியை நான் எடுத்தேன். அதற்கு "இதற்கெல்லாம் அவன் அஞ்சமாட்டான். இருதயத்தில் இருக்கிற பிரகாசத்திற்குத்தான் அவன் அஞ்சுவான்" என்று எனக்குச் சொல்லப்பட்டது என்று அபூஸயீதினில் ஹர்ராஸ் குத்திஸ ஸிர்ருஹூ அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لَا تَكُونُوا كَالَّذِينَ كَفَرُوا
وَقَالُوا لِإِخْوَانِهِمْ إِذَا ضَرَبُوا فِي الْأَرْضِ أَوْ
كَانُوا غُزًّى لَوْ كَانُوا عِنْدَنَا مَا مَاتُوا وَمَا
قُتِلُوا لِيَجْعَلَ اللَّهُ ذَٰلِكَ حَسْرَةً فِي قُلُوبِهِمْ ۗ وَ
اللَّهُ يُحْيِي وَيُمِيتُ ۗ وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ بَصِيرٌ

155. விசுவாசங் கொண்டவர்களே! (அந்தரங்கத்தில்) நிராகரிப்பவர்(களாகவும், பகிரங்கத்தில் முஸ்லிம்களாகவும் இருப்பவர்) களைப்போல் நீங்களும் ஆகிவிடாதீர்கள். மேலும், (நிராகரிப்பவர் களான) அவர்கள் (உண்மை முஸ்லிம்களான) தங்கள் சகோதரர்கள் பூமியில் பிரயாணஞ் சென்றால் அல்லது அவர்கள் (மார்க்க) யுத்தம் புரிபவர்களா(ன போர் வீரர்களா)னால் அவர்கள் "நம்முடன் இருந் திருந்தால் மரணித்திருக்கவுமாட்டார்கள் கொல்லப்பட்டிருக்கவும் மாட்டார்கள்" என்று கூறுகின்றனர். அவர்கள் இருதயங்களில் இதை கைசேதமாக அல்லாஹ் ஆக்குவதற்காகவே (யன்றி அவர்கள் இதைக் கூறினரில்லை). மேலும், அல்லாஹ் (தான்) ஜீவிக்கச் செய்கிறான். இன்னும், மரணிக்கச் செய்கிறான். அன்றியும், அல்லாஹ் நீங்கள் செய்வதை (நன்றாக)ப் பார்ப்பவன்.

كَالَّذِينَ كَفَرُوا "காஃபிர்களைப்போல்" என்ற வசனம் இதற்கு முந்தின ஆயத்தில் சொல்லப்பட்டபடி **"காரியத்தில் ஏதேனும்**

(சுயஉரிமை) இருந்திருக்குமானால் இவ்விடத்தில் நாம் கொல்லப்பட்டிருக்க மாட்டோம்" என்று சொன்ன முனாஃபிக்குகளைக் குறிக்கிறது.

لِإِخْوَانِهِمْ **"தங்களுடைய சகோதரர்களைக் குறித்து"** என்ற வாக்கியத்திலுள்ள "சகோதரர்கள்" என்ற பதத்திற்கு உடன் பிறந்தவர்கள் என்பது மட்டும் கருத்தல்ல. மார்க்கம், கொள்கை ஆகியவற்றிலும் ஒற்றுமையாக இருக்கிற இதரர்களையும் குறிக்கும்.

முனாஃபிக்குகள் தங்கள் இனத்தார் வியாபாரத்தின் நிமித்தமாகவோ அல்லது வேறு காரியமாகவோ பிரயாணம் செய்து பிரயாணத்தின் போது மரணித்து விட்டாலும், மார்க்க யுத்தத்திற்குச் சென்று பகைவர்களால் கொல்லப்பட்டு விட்டாலும் அவர்களைக் குறித்து "அவர்கள் நம்மிடத்தில் இருந்திருந்தால் மரணித்திருக்க மாட்டார்கள். இன்னும், கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்" என்று கூறினர். இவர்களது இக்கூற்றை இறைவன் இந்த ஆயத்தில் மறுத்துக் கூறி இருக்கிறான். முனாஃபிக்குகள் மேற்கண்டவாறு கூறியது மூமின்களை இனி யுத்தத்திற்குச் செல்லாமல் நிறுத்தி விட வேண்டும் என்ற நோக்கத்தினாலேயாகும். ஆனால், அவர்களது இந்நோக்கம் நிறைவேறாமல் போனதுடன், இவ்வாறு கூறியதற்காக அவர்களது இருதயங்களில் கைசேதத்தையே உண்டாக்கி விடுகிறது என்பதையும், பிரயாணம் சென்றவர் மரணித்து விடுவார் என்பதும் மார்க்க யுத்தத்திற்குச் சென்றவர் கொல்லப்பட்டு விடுவார் என்பதும் இவ்விரண்டிற்கும் செல்லாமல் வீட்டிலேயே தங்கி இருப்பவர் உயிருடன் இருப்பார் என்பதும் நியதியல்ல. மரணத்தின் வேளை வந்தால் வீட்டிலிருந்தாலும் சரி, வெளியில் பிரயாணம் சென்றாலும் சரி, யுத்தத்தில் இருந்தாலும் சரி மரணத்தை அனுபவிக்க வேண்டியதே ஏற்படும். அந்த வேளை வராவிடில் எங்கு சென்றாலும் மரணம் வராது. அல்லாஹுதஆலாதான் மரணிக்கச் செய்பவன், உயிர்வாழச் செய்பவன். தவிரவும் நீங்கள் செய்வதை எல்லாம் நன்கு பார்த்துக் கொண்டிருப்பதால் காஃபிர்களாகிய அந்த முனாஃபிக்குகளைப் போல் நீங்களும் ஆகிவிட வேண்டாம் என்பதையும் மூமின்களுக்கு இந்த ஆயத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

وَلَئِنْ قُتِلْتُمْ فِي سَبِيلِ اللَّهِ أَوْ مُتُّمْ لَمَغْفِرَةٌ مِنَ اللَّهِ وَرَحْمَةٌ خَيْرٌ مِمَّا يَجْمَعُونَ ۝

156. இன்னும், அல்லாஹ்வின் பாதையில் (யுத்தம் புரியும் போது) நீங்கள் கொல்லப்பட்டாலும், அல்லது (அதில்) நீங்கள் மரணித்தாலும், நிச்சயமாக அல்லாஹ்விடமிருந்து (உங்களுக்குக்) கிடைக்கும் மன்னிப்பும், கிருபையுமான (அந்த மரணமான)து நீங்கள் (இவ்வுலகில் உயிருடனிருந்து) சேமிப்பதைப் பார்க்கிலும் மேலானதே.

இந்த ஆயத்திற் சொல்லப்பட்ட விஷயங்கள் இதற்கு முந்திய ஆயத்தில் காஃபிர்களாகிய அந்த முனாஃபிக்குகள் கூறிய கூற்றுக்கு இறைவன் கூறிய மறு மொழியுடன் சேர்ந்தவைகளேயாகும்.

"அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிவது மரணத்தையோ அல்லது கொல்லப்படுவதையோ வருவிப்பதல்ல. அவ்வாறே மரணம் அல்லது கொல்லப்படுதல் நேர்ந்து விட்டாலும் அந்த மரணம் காஃபிர்களாகிய அவர்கள் சேர்த்து வைத்திருக்கிற இவ்வுலகச் செல்வங்களைப் பார்க்கினும் சிறந்ததேயாகும்" என்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَلَئِنْ مُتُّمْ أَوْ قُتِلْتُمْ لَإِلَى اللَّهِ تُحْشَرُونَ ۝

157. மேலும், நீங்கள் மரணித்தாலும், அல்லது கொல்லப் பட்டாலும், நிச்சயமாக அல்லாஹ்வின் பக்கமே சேர்க்கப்படுகிறீர்கள்.

எந்தக் காரணத்தைக் கொண்டு நீங்கள் மரணித்தாலும், அல்லது கொல்லப்பட்டாலும் அல்லாஹுதஆலாவிடத்தில்தான் நீங்கள் சேர்க்கப்படுவீர்கள்; வேறு யாரிடத்திலும் சேர்க்கப்படமாட்டீர்கள். அவன் உங்களது நற்செயல்களுக்குப் பரிபூரணமான கூலியைக் கொடுப்பான் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

அறிந்துகொள்:- இந்த ஆயத்திலும் இதற்கு முந்திய

ஆயத்திலும் மூன்று விஷயங்கள் வரிசையாகக் கூறப்பட்டிருக்கின்றன. 1. அல்லாஹு தஆலாவுடைய மன்னிப்பு அதாவது பாவங்களுக்காகத் தண்டிக்காமல் விட்டு விடுதல். இது அல்லாஹுதஆலாவின் தண்டனையையும் வேதனையையும் பயந்து அவனை வணங்குபவர் களுக்கு அளிக்கப்படும். 2. கிருபை அதாவது முறையாகக் கிடைக்க வேண்டிய நன்மைப் பயனைப் பார்க்கினும் அதிகமாகவே அளித்தல். இது மறுமையில் நன்மைப் பயனை அடைய வேண்டும் என்பதற்காக அல்லாஹுதஆலாவை வணங்குபவர்களுக்கு அளிக்கப்படும். 3. அல்லாஹுதஆலாவின் பால் சேர்க்கப்படுதல். இது அல்லாஹு தஆலா றப்பாக இருக்கிறான் என்பதைக் கவனித்தும், அவனை வணங்க வேண்டும் என்ற பொறுப்பை உணர்ந்தும் அவனை வணங்குபவர்களுக்கு அளிக்கப்படும். எனவே, அல்லாஹு தஆலாவை வணங்குபவர்கள் எந்தெந்த நோக்கத்தில் வணங்கு கிறார்களோ அந்த நோக்கத்திற்குத் தக்கவாறு மறுமையில் பயன் கிடைக்குமென்ற விபரம் இவ்விரு ஆயத்துகளிலும் சமிக்ஞை செய்யப்பட்டிருக்கின்றன.

தவிர, அல்லாஹு தஆலாவுடைய மன்னிப்பிற்கும் அவன்பால் சேர்க்கப்படுவதற்கு மிடையில் மிகவும் வித்தியாசம் இருக்கிறது.

ரிவாயத்து:- ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சில மனிதர்களின் பக்கமாகச் சென்றார்கள். அந்த மனிதர்களது உடல்கள் மெலிந்தும், முகங்கள் மஞ்சணித்தும் இருந்தன. இன்னும் அவர்கள் கடுந்தவம் புரிகின்றனர் என்பதற்குள்ள இதர அடையாளங்களையும் கண்டு, அவர்களை நோக்கி "நீங்கள் விரும்புவதென்ன?" வென்று வினவினார்கள். அதற்கு அந்த மனிதர்கள் "அல்லாஹ்வின் வேதனையை நாங்கள் பயப்படுகிறோம்" என்று கூறினார்கள். அதற்கு ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "அல்லாஹ்வின் வேதனையை விட்டு ஈடேற்றமடையாமலிருப்பதைப் பார்க்கினும் இது மேலானது" என்று கூறி அப்புறஞ் சென்றார்கள். பின்னர், அங்கு சிலர் இருப்பதைக் கண்டார்கள். அவர்களிடத்திலும் கடுந்தவம் செய்தவர்கள்

என்பதற்குரிய அடையாளங்களிருந்தன. அவர்களை நோக்கி "நீங்கள் விரும்புகிறதென்ன?" வென்று வினவினார்கள். "நாங்கள் சுவர்க்கத் தையும் கிருபையையும் விரும்புகிறோம்" என்று கூறினார்கள். அப்பொழுது "அவனது ரஹ்மத் என்னும் கிருபை உங்களுக்கு இல்லாமலிருப்பதைப் பார்க்கினும் அவனது ரஹ்மத்தென்னும் கிருபை உங்களுக்கிருப்பது மிகவும் சிறந்ததாகும்" என்று கூறினார்கள். பின்னர், சில மனிதர்களைக் கண்டார்கள். அவர்கள் கடுந்தவம் புரிந்ததற்குரிய அடையாளங்கள் அவர்களிடமிருந்ததைப் பார்த்து "நீங்கள் விரும்புவது என்ன?" வென்று வினவினார்கள். அதற்கு அவர்கள் "அவன் எங்களது இறைவன் என்பதற்காகவும், நாங்கள் அவனது அடியார்கள் என்பதற்காகவும் அவனை நாங்கள் வணங்குகிறோம். இதனைத் தவிர வேறு ஒன்றைப் பயந்ததற்காகவோ அல்லது ஒன்றின் மீது ஆசை வைத்ததற்காகவோ அவனை நாங்கள் வணங்கவில்லை" என்று கூறினார்கள். அப்பொழுது ஹளரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் "நீங்கள்தான் முக்லிஸான இதய சுத்தியுள்ள அடியார்கள். உண்மையான வணக்கஸ்தர்கள்" என்று கூறினார்கள்.

فَبِمَا رَحْمَةٍ مِّنَ اللّٰهِ لِنْتَ لَهُمْ ۚ وَلَوْ كُنْتَ فَظًّا
غَلِيْظَ الْقَلْبِ لَانْفَضُّوْا مِنْ حَوْلِكَ ۖ فَاعْفُ عَنْهُمْ
وَاسْتَغْفِرْ لَهُمْ وَشَاوِرْهُمْ فِي الْاَمْرِ ۚ فَاِذَا عَزَمْتَ
فَتَوَكَّلْ عَلَى اللّٰهِ ۗ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُتَوَكِّلِيْنَ ۝

158. எனவே, அல்லாஹ்விடமிருந்துள்ள கிருபையினாலே தான் அவர்கள் மீது நீர் மிருதுவான சுபாவங் கொண்டவராக நடந்து கொண்டீர்; மேலும், நீர் கடுகடுத்தவராகவும், வன்னெஞ்சினராகவும் இருந்தால், உன் சமூகத்திலிருந்து அவர்கள் பிரிந்து போய் விடுவர். ஆதலால், நீர் அவர்களை மன்னியும், இன்னும் அவர்களுக்காகப் பாவ மன்னிப்புக் கேளும், இன்னும் அவர்களைச் சகல காரியத்திலும்

கலந்து ஆலோசனை செய்து கொள்ளும். பின்னர், நீர் (காரியத்தைச் செய்யது) துணிந்தால் (அதன் முடிவைப் பற்றி) அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வையும். நிச்சயமாக, அல்லாஹ் (தன் மீது) நம்பிக்கை வைப்பவர்களை நேசிக்கிறான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் ஸஹாபிகளிடம் மிகவும் தயாளமாகவும் பொறுமையாகவும் இரக்கச் சித்தமாகவும் நடந்து கொள்வது ஸஹாபிகளுக்கு இறைவனளித்துள்ள அருட்கொடைகளில் ஒன்று என்பதையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு நடந்து கொண்டிருக்காவிடில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டு அவர்கள் பிரிந்து போயிருப்பார்கள் என்று ஸஹாபிகளது தன்மைகளையும், அவனது அருட்கொடையையுங் கூறிவிட்டு, அவர்களது தவறுகளை மன்னித்துக் கொள்ளவும், அவர்களுக்காகத் தம்மிடம் பாவமன்னிப்புக் கேட்கவும், அவர்களுடன் கலந்தாலோசனை செய்து கொள்ளவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கட்டளை யிடப்பட்டிருக்கிறது.

அத்தவக்குல் என்பதற்கு அல்லாஹுதஆலாவிடம் தனது காரியத்தை ஒப்படைத்து விட்டு, அவன் போதும் என்று நம்பி இருத்தல் என்பது பொருள். சில அறியா மக்கள் கருதிக் கொண்டிருப்பது போல் மனிதன் ஒரு முயற்சியும் செய்யாமல் வீணாக இருந்து கொண்டிருப்பது என்பது இதன் கருத்தன்று. அவ்வாறு வீணாக இருக்க வேண்டும் என்பது தவக்குல் என்ற பதத்தின் கருத்தாக இருந்தால், விஷயங்களைப் பற்றிக் கலந்தாலோசனை செய்யும்படியும், கலந்து ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்த பின் அல்லாஹு தஆலாவின் மீது தவக்குல் வைக்கும்படியும் இந்த ஆயத்தில் இறைவன் கட்டளையிட்டிருக்க மாட்டான். எனவே, ஒரு காரியத்தைப் பற்றிப் பிறரிடம் கலந்தாலோசனை செய்து அதனைக் குறித்துத் திடமான முடிவுக்கு வருவதும், அதனை அம்முடிவின்படி நிறைவேற்ற முயற்சிப்பதும் தவக்குலுக்கு விரோதமானவைகளல்ல. புறக்காரணங் களை நன்கு கவனித்துக் கொள்வதுடன் அவற்றிலேயே மனதைச்

செலுத்திக் கொண்டிருக்காமல் அதன் முடிவை இறைவன் பால் ஒப்படைத்து விட்டுக் காரியத்தைச் செய்வதில் இறங்கிவிட வேண்டும்.

அறிந்துகொள்:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடின சித்தமும் சிடுசிடுப்புத் தன்மையுமுள்ளவர்களாக இருந்திருந்தால் அவர்களது ஸஹாபிகள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டுப் பிரிந்திருப்பார்கள் என்று கூறி இருக்கிறான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றி நடப்பது சத்திய சன்மார்க்கமாயிருக்கும் போது ஸஹாபிகளது நிலை இவ்வாறிருந்தால் இக்காலத்திலுள்ள மனிதர்கள் கெட்ட எண்ணமும் கெட்ட பழக்கமும் உள்ளவர்களாக இருக்கும்போது அவர்கள் அனைவரும் தம்மைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர் பார்ப்பது மதியீனமாகும். மேலும், பொறுமையாகவும் மென்மை யாகவும் மனிதர்களிடம் பேசுவது அவர்களது மனதைக் கவர்வதாகவும், அவர்களைக் கீழ்ப்படியச் செய்வதற்கு மிகவும் துரிதமான பயனை அளிப்பதாகவும் இருந்து வருகிறது. எனவேதான் ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் ஃபிர்அவ்னிடம் செல்லுமாறு இறைவன் கட்டளை யிட்டபோது **"அவனுக்கு மிருதுவான சொல்லை நீங்களிருவரும் சொல்லுங்கள்"** (சூரத்துத் தாஹா 44) என்று கூறியுள்ளான்.

ஆனால், எல்லாரிடத்திலும் எச்சமயத்திலும் மென்மையாகவே நடந்து கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை. அல்லாஹு தஆலாவிற்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றைச் செய்யாமல் இருக்கும் போதும் இவ்வாறு மென்மையாக நடந்து கொள்ளக் கூடாது. இதனைக் குறித்து இறைவன் **"நபியே! காபிர்களிடமும் முனாஃபிக்கு களிடமும் நீர் ஜிஹாது செய்யும். அவர்களின் மீது கண்டிப்பாக நடந்து கொள்ளும்"** (சூரத்துத் தஹ்ரீம் 9) என்று கூறியுள்ளான். ஆகவே, எல்லோரிடமும் எச்சமயத்திலும் கடின சித்தமாகவும் கண்டிப்பாகவும் நடந்து கொள்வதும் பிரயோஜனமில்லை. இதுபோல மென்மையாக நடந்து கொள்வதும் பிரயோஜனமில்லை. இரண்டிற்கும் பொதுவாக நடந்து கொள்வதுதான் சிலாக்கிக்கத் தக்கதும் பிரயோஜனகரமுமாகும்.

إِنْ يَنْصُرْكُمُ اللّٰهُ فَلَا غَالِبَ لَكُمْ ۚ وَإِنْ يَخْذُلْكُمْ فَمَنْ ذَا الَّذِي يَنْصُرُكُمْ مِنْ بَعْدِهِ ۗ وَعَلَى اللّٰهِ فَلْيَتَوَكَّلِ الْمُؤْمِنُونَ ﴿١٦٠﴾

159. உங்களுக்கு அல்லாஹ் உதவி புரிவானாயின் உங்களை வெல்வோர் (யாரும்) இல்லை. இன்னும், உங்களை அவன் கைவிட்டு விடின் அதற்குப் பின் உங்களுக்கு உதவி செய்கிறவன் எவன்? எனவே, விசுவாசிகள் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்க வேண்டும்.

அல்குத்லானு என்பதற்கு உதவி செய்யாமல் இருந்து கொள்ளல், அழிவின் பால் ஒப்படைத்துவிடல் என்பன கருத்து. அல்லாஹுதஆலாவின் மீதுதான் மூமின்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தவக்குல் வைக்க வேண்டும் என்று இந்த ஆயத்திலும் இதற்கு முந்திய ஆயத்திலும் கூறப்பட்டுள்ள கட்டளைக்கு இந்த ஆயத்தில் காரணம் கூறப்பட்டிருக்கிறது. அதாவது அல்லாஹுதஆலா உங்களுக்கு உதவி புரிவானாயின் அப்புறம் உங்களை வெல்பவர் ஒருவருமில்லை, அவன் தனது உதவியை உங்களுக்கு அளிக்காமல் நிறுத்திக் கொள்வானாயின் அதற்கு மாறாக உங்களுக்கு உதவி புரிந்து உங்களுக்கு வெற்றியை அளிக்க ஒருவராலும் முடியாது என்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَمَا كَانَ لِنَبِيٍّ أَنْ يَغُلَّ ۚ وَمَنْ يَغْلُلْ يَأْتِ بِمَا غَلَّ يَوْمَ الْقِيٰمَةِ ۚ ثُمَّ تُوَفّٰى كُلُّ نَفْسٍ مَا كَسَبَتْ وَهُمْ لَا يُظْلَمُونَ ﴿١٦١﴾

160. மேலும், எந்த நபியும் மோசம் செய்வது அவருக்குத் தகுதியில்லை. அன்றி, எவன் மோசம் செய்கிறானோ அவன் மோசஞ்

செய்ததை இறுதிநாளில் அவன் கொண்டு வருவான். பின்பு, ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்ததைப் பூர்த்தி செய்யப்படும். மேலும், அவர்கள் அநீதி செய்யப்பட(வே) மாட்டார்கள்.

பத்ருப் போர் நிகழ்ந்த நாளில் ஒரு பரிவட்டம் காணாமற் போய் விட்டது. அதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எடுத்திருக்கக் கூடுமென்று சிலர் நினைத்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துச் சிலர் நினைத்த இந்த நினைப்பைக் கண்டித்து இந்த ஆயத்து அருளப்பட்டது என்று **தஃப்ஸீர் ஃபத்ஹுல் கரீம்** முதலிய கிரந்தங்களிற் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், **தஃப்ஸீர் ரூஹுல் பயான்** முதலிய கிரந்தங்களில் வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது உஹதுப் போரின் போது மலைக் கணவாயில் நிறுத்தி வைக்கப்பட்ட அம்பெய்யும் வீரர்கள் தங்களது இடத்தை விட்டு வந்து காஃபிர்கள் விட்டுச் சென்ற பொருள்களை எடுக்க ஆரம்பித்தார்கள். "பகைவர் விட்டுச் சென்ற பொருள்களில் யார் எதை எடுத்தாரோ அது அவருக்குச் சொந்தம்" என்று பத்ருப் போரில் அவற்றைப் பங்கு வைக்காததைப் போல் பங்கு வைக்காமலிருந்து விடும்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி விடுவார்களோ? அவ்வாறு இருந்து விட்டால் நமக்கு ஒன்றுங் கிடைக்காது என்று நாங்கள் நினைத்தோம் என்றும் அவர்கள் கூறினர். பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்வீரர்களை அழைத்து "எனது உத்தரவு வரும் வரை அந்த இடத்தை நீங்கள் விட்டு அகலக் கூடாது என்று உங்களுக்கு நான் கட்டளை யிடவில்லையோ?" என்று வினவியதற்கு "எங்கள் சகோதரர்களில் எஞ்சியிருந்தவர்களை அங்கு நிற்கும்படி நாங்கள் விட்டு விட்டு வந்திருந்தோம்" என்று கூறினர். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இல்லை, நாம் மோசம் செய்து விடுவோம், உங்களுக்கிடையில் அப்பொருள்களைப் பங்கு வைத்துத்தர மாட்டோம் என்று நீங்கள் நினைத்தீர்கள்" என்று கூறினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்து அம்பு வீரர்களிற் சிலர் நினைத்த இந்த எண்ணம் தவறானதென்பதையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்கள் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்பதையும் அறிவிப்பதற்காக இந்த ஆயத்து அருளப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது.

அல்குலூலு என்பது பகைவர்கள் விட்டுச்சென்ற பொருள்களிலிருந்து சில பொருள்களை இரகசியமாகவும் மோசடியாகவும் எடுத்துக் கொள்வதற்குப் பெயர். இப்படிச் செய்வது இவ்வுலகில் கேவலத்திற்கும், அவ்வுலகில் இறைவன் தண்டனைக்கும் காரணமாக இருப்பதால் இவ்விதமான செய்கை நபித்துவ அந்தஸ்திற்குத் தகாதது. ஆகவே, இவ்விதமான செய்கை நபிமார்களாக இருப்பவர்களில் எவருக்கும் தகுதியல்ல வென்பது இந்த ஆயத்தில் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

أَفَمَنِ اتَّبَعَ رِضْوَانَ اللَّهِ كَمَن بَاءَ بِسَخَطٍ مِّنَ اللَّهِ
وَمَأْوَاهُ جَهَنَّمُ ۚ وَبِئْسَ الْمَصِيرُ ۝

161. ஆகவே அல்லாஹ்வின் திருப்திக்கு வழிப்பட்டவன் அல்லாஹ்வின் கோபத்தைத் தம்மேல் வரவழைத்துக் கொண்டவர் போல். ஆவாரா? மேலும், இவன் சேரும் இடம் நரகமே. இன்னும், (அச்) சேருமிடம் கெட்டது.

அல்லாஹு தஆலாவை அஞ்சி அவனது திருப்தியை அடைய வேண்டுமென்று முயன்றவர்களான நபிமார்களும் அவர்களைப் போல் நடந்த இதரர்களும் அல்லாஹு தஆலாவிற்கு மாறு செய்ததால் அவனது கோபத்திற்கு ஆளானவர்களைப் போலில்லை என்பது இந்த ஆயத்தின் கருத்து.

الْمَصِيرُ **அல்மஸீர்** என்பதற்கும் **அல்மர்ஜிஉ** என்பதற்கும் மீளும் தலம் என்பதே அர்த்தமாக இருந்தாலும், இவ்விரு பதங்களுக்கு மிடையில் மிகுந்த வித்தியாசமுண்டு. **அல்மர்ஜிஉ** என்பது முன்னர் இருந்த இடத்திற்கே திரும்பவும் செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கும். **அல்மஸீர்** என்பது முன்னர் இருந்த இடத்திற்கு நேர்மாறான இடத்திற்கே திரும்பச் செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கும்.

هُمْ دَرَجَاتٌ عِندَ اللَّهِ ۗ وَاللَّهُ بَصِيرٌ بِمَا يَعْمَلُونَ ۝

162. அவர்கள் அல்லாஹ்விடம் பல அந்தஸ்துகளில் இருக்கின்றனர். மேலும், அவர்கள் செய்வதை அல்லாஹ் பார்ப்பவன்.

அவர்கள் பல அந்தஸ்துகள் உள்ளவர்கள் என்பது இதற்கு முந்திய ஆயத்திற் சொல்லப்பட்ட இரு வகைக் கூட்டத்தினரையும் குறிக்கிறது. அல்லாஹுதஆலாவின் திருப்தியைப் பெற்றவர்களது அந்தஸ்துக்கும் அவனது கோபத்திற்காளானவர்களது அந்தஸ்திற்கு மிடையில் மிகவும் வித்தியாசமுண்டு. இவ்வித்தியாசங்களைக் குறித்து இந்த ஆயத்தில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

لَقَدْ مَنَّ اللَّهُ عَلَى الْمُؤْمِنِينَ إِذْ بَعَثَ فِيهِمْ رَسُولًا مِّنْ
أَنفُسِهِمْ يَتْلُو عَلَيْهِمْ آيَاتِهِ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتَابَ
وَالْحِكْمَةَ وَإِن كَانُوا مِن قَبْلُ لَفِي ضَلَالٍ مُّبِينٍ ۝

163. நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகள் மீது உதவி செய்திருக்கிறான். ஏனெனில், (இதற்கு) முன்பு பகிரங்க வழி கேட்டில் அவர்கள் இருந்த போதிலும், அவர்கள் மீது அவனது வசனங்களை ஓதிக் காண்பித்து அவர்களைப் பரிசுத்தப்படுத்தி அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுத்தரக்கூடிய ஒரு தூதரை அவர்களிடுத்தி லிருந்தே அவர்களுக்கு அனுப்பியிருக்கிறான்.

இந்த ஆயத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபியாக அனுப்பியதன் மூலமாக மூமின்களுக்கு இறைவன் செய்த அருட்கொடையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது தன்மைகளும் மகத்துவங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

أَنْفُسِهِمْ **அன்ஃபுஸிஹிம்** என்ற பதத்திற்கு "அவர்கள் இனத்திலிருந்து" என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பதத்திற்கு அவர்களிற் சிறந்தவர்களிலிருந்து என்றும் ஒரு பொருளுமுண்டு. இவ்விருவகைப் பொருள்களும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மிகவும் பொருந்தும். எவ்வாறெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனித இனத்தில் அறபியராக இருப்பதுடன், அவர்களில் மிகச் சிறந்த கோத்திரமான குறைஷிக் குலத்தில் ஹாஷிம் கிளையிற் பிறந்தவர்கள். ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனித இனத்தில் மிகச் சிறந்த வம்சத்திற் பிறந்தவர்கள் என்பதும் இதிலிருந்து வெளியாகிறது.

أَوَلَمَّا أَصَابَتْكُم مُّصِيبَةٌ قَدْ أَصَبْتُم مِّثْلَيْهَا
قُلْتُمْ أَنَّىٰ هَٰذَا ۖ قُلْ هُوَ مِنْ عِندِ أَنفُسِكُمْ ۗ إِنَّ
اللَّهَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ

164. (உஹத் யுத்தத்தில்) உங்களுக்கு (ஒரு) துன்பம் ஏற்பட்ட பொழுது - அந்த துன்பத்தின் இரு மடங்கை நிச்சயமாக நீங்கள் (பத்ரில் அவர்களுக்குச்) செய்திருக்கிறீர்கள் - இது எப்படி ஏற்பட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கின்றீர்களா? அது உங்களிடத்தில் இருந்துதான் என்று (நபியே நீர் அவர்களுக்குக்)கூறும். நிச்சயமாக அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் பேராற்றலுள்ளவன்.

முஸ்லிம்களுக்கும் முஷ்ரிக்குகளுக்குமிடையில் நிகழ்ந்த உஹதுப் போரில் முஸ்லிம்களில் எழுபது பேர் ஷஹீதானார்கள். இதனைக் குறித்துச் சிலர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் இஸ்லாம் மார்க்கத்திற்கும் உதவி செய்பவர்களாக நாமிருக்கும் போது நமக்கு ஏன் இந்தக் கஷ்டம் வந்தது என்று வினவினர். இவர்களது இவ்வினாவிற்கு இந்த ஆயத்தில் இறைவன் பதிற் கூறி இருக்கிறான். இந்த யுத்தத்திற்கு முன்னர் நிகழ்ந்த பத்ருப் போரில் முஷ்ரிக்குகளில் எழுபது பேர் கொல்லப்பட்டதுடன் 70 பேர்

கைது செய்யப்பட்டனர். ஆகவே, அவர்களுக்கு இரட்டிப்புச் சேதமேற்பட்டதை இந்த ஆயத்திற் சுட்டிக்காட்டி, காஃபிர்கள் அதைரியம் அடையாமல் யுத்தத்திற்கு மீண்டும் வந்தார்கள். ஆனால், நீங்கள் அவர்களிற் பாதி சேதமேற்பட்டதற்கு இவ்வாறு வருந்துகிறீர்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. மேலும், இந்தச் சேதமேற்பட்டதற்கு நீங்களே காரணம் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கட்டளையை மீறி மலைக்கணவாயை விட்டுச் சில வீரர்கள் போர் பொருட்களை எடுப்பதில் ஈடுபட்டதைச் சுட்டிக் காண்பிக்கப் பட்டிருக்கிறது.

وَمَا أَصَابَكُمْ يَوْمَ الْتَقَى الْجَمْعَانِ فَبِإِذْنِ اللَّهِ وَلِيَعْلَمَ
الْمُؤْمِنِينَ

165. எனினும், (விசுவாசிகளும், நிராகரிப்போர்களுமாகிய) இரு கூட்டத்தினரும் (உஹத் யுத்தத்துக்காகச்) சந்தித்த தினத்தில் உங்களுக்கு நிகழ்ந்தானது அல்லாஹ்வின் கட்டளையைக் கொண்டுள்ளதாகவும் (உண்மை) விசுவாசிகளை அவன் (பகிரங்கத்தில்) அறிவதற்காகவுமேயாகும்.

இரண்டு கூட்டங்கள் என்பதற்கும் முஷ்ரிக்குகளின் கூட்டம் என்பதும் முஸ்லிம்களது கூட்டம் என்பதும் கருத்து. அவ்விரு கூட்டங்களும் சந்தித்த நாள் என்பதற்கு இந்த இடத்தில் உஹதுப் போர் நடைபெற்ற நாள் என்பது கருத்து.

وَلِيَعْلَمَ الَّذِينَ نَافَقُوا ۚ وَقِيلَ لَهُمْ تَعَالَوْا
قَاتِلُوا فِي سَبِيلِ اللَّهِ أَوِ ادْفَعُوا ۖ قَالُوا لَوْ نَعْلَمُ
قِتَالًا لَّاتَّبَعْنَاكُمْ ۗ هُمْ لِلْكُفْرِ يَوْمَئِذٍ أَقْرَبُ
مِنْهُمْ لِلْإِيمَانِ ۚ يَقُولُونَ بِأَفْوَاهِهِم مَّا لَيْسَ

فِي قُلُوبِهِمْ ۗ وَاللَّهُ أَعْلَمُ بِمَا يَكْتُمُونَ ۝

166. இன்னும் (உள்ளொன்றும் புறம்மொன்றுமாயுள்ள) நயவஞ்சகர்களை அவன் (பகிரங்கத்தில்) அறிவதற்காகவுமேதான். மேலும், வாருங்கள் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரியுங்கள்; அல்லது (எதிரிகள் எங்களை அணுகாமல்) தடுத்து வையுங்கள் என்று (அவர்களுக்குச்) சொல்லப்பட்டது. (அதற்கு அவர்கள்) நாங்கள் யுத்தம் புரியும் முறையை அறிந்திருந்தால் உங்களைப் பின்பற்றியிருப்போம் என்று கூறினர். அன்றைய தினம் அவர்கள் விசுவாசத்தைப் பார்க்கினும் நிராகரிப்பிற்கு அதிகம் நெருங்கினவர்களாக இருந்தனர். தங்கள் இருதயங்களில் இல்லாததைத் தங்கள் வாயினால் சொல்லுகின்றனர். ஆனால், அவர்கள் (தங்களின் இருதயங்களில்) மறைத்து வைத்திருப்பதை அல்லாஹ் மிக மிக அறிபவன்.

உஹதுப் போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்திற்குரிய புறக்காரணங்கள் இதற்கு முந்திய ஆயத்துகளிற் கூறப்பட்டன. இந்த ஆயத்திலும் இதற்கு முந்திய 165 வது ஆயத்திலும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்திற்குரிய அகக்காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்களில் உண்மையான முஸ்லிம்களுமிருந்தனர், உள்ளுக்குள் காஃபிர்களாகவும் வெளிக்கு முஸ்லிம்களாக நடித்தவர்களும் இருந்தனர். ஆகவே அவ்விருவகைக் கூட்டத்தினரையும் பகிரங்கமாகத் தெரிந்து கொள்வதற்காக உஹதுப் போரில் முஸ்லிம்களுக்குக் கஷ்டம் வரும்படி செய்தான் என்பது இந்த ஆயத்தின் கருத்து.

தவிரவும், அப்துல்லாஹிப்னு உபய்யி என்பவரும் அவரைச் சேர்ந்தவர்களும் உஹதுப் போரன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு உதவியாக முஸ்லிம் வீரர்களுடன் வந்தனர். ஆயினும், போலிக் காரணங்களைக் கூறிக் கொண்டு யுத்தஞ் செய்யாமல் மதீனா முனவ்வராவை நோக்கித் திரும்பி விட்டனர். அப்போது அப்துல்லாஹிப்னு ஹராம் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அவர்களை நோக்கி "உங்களது நபியையும் உங்களது

சமூகத்தையும் நீங்கள் இழிவுபடுத்தவதைக் குறித்து உங்களுக்கு அல்லாஹுதஆலா ஞாபகப்படுத்துகிறான்" என்று கூறி அவர்களை யுத்தத்திற்கு அழைத்ததுடன், "எங்களுடன் சேர்ந்து நீங்கள் யுத்தம் செய்யாவிட்டாலும் எங்களுடன் சேர்ந்திருங்கள். ஏனெனில், கூட்டம் அதிகமாக இருந்தால் அதனைப் பார்த்துப் பகைவர்கள் பீதி கொள்வர். இவ்வாறு கூட்டத்தை அதிகப்படுத்திக் காண்பிப்பதன் மூலமாகவேனும் பகைவர்களைத் தடுத்து நிறுத்துங்கள்" என்று கூறினார். அதற்கு அப்துல்லாஹிப்னு உபய்யி முதலியவர்கள் "நாங்கள் யுத்தத்தை அறிந்திருந்தால் உங்களை நாங்கள் பின்பற்றி இருப்போம்" என்று ஆயத்தில் கண்டவாறு கூறினர். அவர்கள் இப்படிக் கூறியது உண்மையாகவே கூறியதல்ல, பரிகாசத்திற்காகவே கூறினர். நீங்கள் செய்யும் காரியம் யுத்தமல்ல. வேண்டுமென்றே அபாயத்திற்குள் உட்படுத்திக் கொள்வதாக இருக்கிறது என்ற கருத்தில் அவர்கள் இவ்வாறு கூறினர் என்றும் திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறி இருக்கிறார்கள். இது நிகழ்ந்த சம்பவத்திற்கு முன் அவர்களது புறக்காரியங்கள் "அவர்கள் குஃப்ரை விட்டு மிகவும் விலகி இருப்பதாகவும், ஈமானுக்கு மிகவும் நெருங்கி இருப்பதாகவும்" அறிவித்துக் கொண்டிருந்தன. ஆனால், இச்சம்பவத்திற்குப் பிறகு அவர்கள் ஈமானைப் பார்க்கினும் குஃப்ருக்குத்தான் அதிகமாக நெருங்கி இருக்கிறார்கள் என்பது வெளியாகி விட்டது. இவ்விபரத்தை இங்கு கூறி, அவர்கள் கூறியவைகள் இதய சுத்தியுடன் கூறியவைகள் அல்ல என்பதையும் அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று கூறுகிறார்கள் என்பதையும், அவர்கள் உள்ளங்களில் மறைத்து வைத்திருப்பதை அல்லாஹு தஆலா அறிந்தவன் என்பதையும் இங்கு இறைவன் கூறி இருக்கிறான்.

الَّذِينَ قَالُوا لِإِخْوَانِهِمْ وَقَعَدُوا لَوْ أَطَاعُونَا مَا
قُتِلُوا ۗ قُلْ فَادْرَءُوا عَنْ أَنفُسِكُمُ الْمَوْتَ إِن
كُنتُمْ صَادِقِينَ ۝

167. இவர்களோ (யுத்தத்திற்குச் செல்லாமல்) உட்கார்ந்து கொண்டு "அவர்கள் நம்மைப் பின்பற்றியிருந்தால் கொல்லப் பட்டிருக்கமாட்டார்கள்" என்று தங்கள் சகோதரர்களிடம் கூறினர். அவ்வாறாயின் "நீங்கள் உண்மையாளர்களாயிருந்தால் உங்களை விட்டு மரணத்தைத் தடுத்துக் கொள்ளுங்கள்" என்று (நபியே நீர்) கூறும்.

உஹதுப் போரில் மரணமடைந்தவர்களைக் குறித்து முனாஃபிக்குகள் நமது சொற்கேட்டு யுத்தஞ் செய்யாமல் திரும்ப வந்திருந்தால் அவர்கள் கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள் என்று கூறினர். அவர்களது இக்கூற்றை மறுத்து "மரணத்தை எவரும் தடுத்துவிட முடியாது" என்று இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

தங்கள் சகோதரர்கள் என்பது உஹதுப் போரில் யுத்தம் செய்து கொல்லப்பட்ட முனாஃபிக்குகளை அல்லது வம்சத்தில் அல்லது மதீனாவில் குடியிருத்தல் ஆகியவைகள் மூலமாகவுள்ள முஸ்லிம் களைக் குறிக்கும்.

وَلَا تَحْسَبَنَّ الَّذِينَ قُتِلُوا فِي سَبِيلِ اللَّهِ أَمْوَاتًا ۚ
بَلْ أَحْيَاءٌ عِنْدَ رَبِّهِمْ يُرْزَقُونَ ۝

168. மேலும், அல்லாஹ்வின் பாதையில் (யுத்தம் புரிந்து) கொல்லப்பட்டவர்களை மரணித்தவர்களென்று எண்ணாதீர். எனினும் அவர்கள் உயிருடனிருப்பவர்களாக இருக்கின்றனர்; தங்கள் ரப்பிடத்தில் அவர்கள் உணவளிக்கப் பெறுகிறார்கள்.

இந்த ஆயத்து உஹதுப் போரில் ஷஹீதானவர்களைக் குறித்து அருளப்பட்டது. அப்போரில் முஹாஜிர்களில் ஹம்ஜத்துப்னு அப்துல் முத்தலிப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு, முஸ்அபுப்னு உமைர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு, உதுமானுப்னு ஷிஹாப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு, அப்துல்லாஹிப்னு ஜஹ்ஷ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு ஆகிய நான்கு பேரும், அன்ஸாரி களில் அறுபத்தாறு பேரும் ஷஹீதானார்கள். அல்லாஹு தஆலாவின் சன்மார்க்கத்திற்காக துன்மார்க்கர்களை எதிர்த்து யுத்தம் செய்து தங்களது உயிர்களைத் தியாகம் செய்தவர்கள் மரணித்தவர்களல்ல வென்பதைக் கூறியபின், அவர்கள் உயிருடனிருக்கிறார்கள் என்பதற்கு ஆதரவாக அவர்கள் சுவர்க்கத்துக் கனிகளை உண்ணக் கொடுக்கப் படுகிறார்கள் என்ற விபரமும் இந்த ஆயத்திற் கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஆயத்தில் கூறப்பட்டுள்ள "நீர் எண்ணிக் கொள்ள வேண்டாம்" என்ற விலக்கல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருந்தாலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்துகளில் ஒவ்வொரு வரையுமே இது குறிக்கும். தவிரவும், ஷஹீதானவர்களுக்கு அல்லாஹுத்தஆலாவின் சமூகத்தில் எத்துணை நெருங்கிய அந்தஸ்து இருக்கிறதென்பதை உம்மத்துகளுக்கு அறிவிப்பதும் இந்த ஆயத்தின் நோக்கமாகும்.

فَرِحِينَ بِمَا آتَاهُمُ اللَّهُ مِنْ فَضْلِهِ وَيَسْتَبْشِرُونَ
بِالَّذِينَ لَمْ يَلْحَقُوا بِهِمْ مِنْ خَلْفِهِمْ أَلَّا خَوْفٌ
عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ ۝

169. அவர்களுக்கு அல்லாஹ் தன் கிருபையால் அளித்ததைக் கொண்டு சந்தோஷமடைந்தவர்களாக இருக்கின்றனர். இன்னும், (யுத்தத்தில் மரணமடைந்து) தங்களுடன் சேர்ந்து கொள்ளாமல் தங்களுக்குப் பின் (உலகில்) இருப்பவர்க(ளான தங்கள் சகோதரர்க)ளுக்கு, அவர்கள் மீது எந்தவிதப் பயமும் கிடையாது. இன்னும், அவர்கள் கவலைப்படவுமாட்டார்கள் என்று நற்செய்தி கூறுகின்றனர்.

بِمَا آتَاهُمُ اللَّهُ مِنْ فَضْلِهِ **"அல்லாஹ் தனது கிருபையால் அவர்களுக்கு அளித்தது"** என்பது ஷஹாதத்துடைய பதவியையும் நிரந்தரமானமான வாழ்வை அடைதல் முதலியவற்றையுங் குறிக்கும்.

يَسْتَبْشِرُونَ بِنِعْمَةٍ مِّنَ اللَّهِ وَفَضْلٍ وَأَنَّ اللَّهَ لَا
يُضِيعُ أَجْرَ الْمُؤْمِنِينَ

170. அல்லாஹ்வில் நின்றுமுள்ள அருட்கொடையைக் கொண்டும், மேன்மையைக் கொண்டும் இன்னும், நிச்சயமாக விசுவாசிகளின் கூலியை அல்லாஹ் வீணாக்கமாட்டான் என்பதையுங் கொண்டு நற்செய்தி கூறுகின்றனர்.

அறிந்துகொள்:- யுத்தத்தில் ஷஹீதானவர்களது ஆன்மாக்கள் அவர்களது உடல்களை விட்டுப் பிரிந்து விட்டாலும் அவர்கள் உயிருடனிருப்பதாகவே இந்த ஆயத்திலும் இதற்கு முந்திய இரண்டு ஆயத்துகளிலுமிருந்து வெளியாகிறது. இந்த வாழ்வைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஒரு ரிவாயத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவருமாறு.

"(ஷஹீதானார்களே) அவர்களுடைய ஆன்மாக்கள் பசும் பறவைகளது வயிற்றிற்குள்ளிருக்கும்.இன்னும் அந்தப் பறவைகள் சுவர்க்கத்துப் பூங்காவனங்களில் நினைத்த இடங்களில் மேய்ந்து அர்ஷுக்குக் கீழ் கிந்தீல் விளக்குகளில் தங்கும். ஷஹீதுகள் இந்தப் பாக்கியங்களைப் பார்த்து 'எங்களுக்குக் கிடைத்த இந்த அருட்கொடைகளை எங்களது மனிதர்கள் அறிய வேண்டுமே. அவர்களறிந்தால் அவர்களும் சன்மார்க்கத்திற்காக யுத்தஞ் செய்ய ஆசை கொள்வார்களே' என்று கூறினார்கள். அப்பொழுது அவர்களை நோக்கி, 'உங்களைக் குறித்து உங்கள் சகோதரர்களுக்கு நான் அறிவிக்கிறேன்' என்று கூறி இந்த ஆயத்தை அருளினான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

தவிரவும், இந்த ஆயத்தில் அல்லாஹுதஆலா ஷஹீதுகளுக்கு அவர்களுக்கேற்பட்ட கூலியைக் கொடுப்பதுடன், அதனைப் பார்க்கினும் அதிகமாகவே கொடுப்பான் என்பது **இன்னும் அவனது அருட்கொடையைக் கொண்டும்** என்ற பதத்திலும் ஷஹீதாக இருந்தாலும் சரி அல்லது ஷஹீதாக இல்லாவிட்டாலும் சரி பொதுவாக எல்லா மூமின்களுடைய கூலியையும் வீணாக்க மாட்டான் என்பது **இன்னும், நிச்சயமாக அல்லாஹ் விசுவாசிகளின் கூலியை வீணாக்க மாட்டான்** என்ற வசனத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

الَّذِينَ اسْتَجَابُوا لِلَّهِ وَالرَّسُولِ مِن بَعْدِ مَا أَصَابَهُمُ
الْقَرْحُ لِلَّذِينَ أَحْسَنُوا مِنْهُمْ وَاتَّقَوْا أَجْرٌ عَظِيمٌ

171. தங்களுக்கு (உஹுத் யுத்தத்தில்) காயம் ஏற்பட்ட பின்பும் இவர்கள் அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் கீழ்ப்படிந்தனர். இவர்களில் (ரசூலின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து) நன்மைகள் செய்து (அவனை) அஞ்சியவர்களுக்கு மகத்தான நற்கூலியுண்டு.

இந்த ஆயத்தில் சொல்லப்பட்ட விஷயம் ஹம்ரஉல்அஸத் போரைப் பற்றியது அதன் விபரம் வருமாறு.

உஹுதுப் போரில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எதிர்த்து யுத்தஞ் செய்த அபூசுஃப்யானும் அவரது தோழர்களும் உஹுதுப் போருக்குப் பிறகு அங்கிருந்து மக்காமா நகரை நோக்கித் திரும்ப வருகையில் **"ரூஹா"** என்னும் இடத்தில் வந்திருந்து கொண்டு 'முஸ்லிம்களை வேரறுக்காமல் வந்து விட்டோமே' என்று வருத்தமடைந்து மீண்டும் திரும்ப யுத்தத்திற்கு வருவதைப் பற்றி ஆலோசனை செய்து கொண்டிருந்தார். இச்செய்தி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எட்டிற்று. உடனே, அபூ சுஃப்யானைப் பின்றொடர்ந்து துரத்திச் செல்வதற்காக வரவேண்டும் என்று கட்டளையிட்டதுடன், உஹுதுப் போருக்கு வந்தவர்களைத் தவிர மற்றவர்கள் இந்தப் படையில் சேர்ந்து வரக்கூடாது என்றும் அறிவித்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஸஹாபிகளுக்குக் காயமேற்பட்டிருந்தும் அதனைப் பொருட் படுத்தாமல் உடனே யுத்தத்திற்காக அபூசுஃப்யானைத் தேடிப் புறப்பட்டார்கள். இவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களும் ஸஹாபாக்களும் மதீனாவிலிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள **"ஹம்ரஉல் அஸத்"** என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருவதை அபூசுஃப்யான் கேள்விப்பட்டு திரும்பவும் படையெடுத்து வராமல் மக்காவிற்குச் சென்று விட்டார். ஆகவே, இந்த யுத்தம் நடைபெற வில்லை.

தங்களுக்கு (உஹத் யுத்தத்தில்) காயம்பட்ட பிறகும் அல்லாஹ்விற்கும் (அவன்) தூதருக்கும் கீழ்ப்படிந்து நன்மைகள் செய்து கொண்டவர்களுக்கு என்ற வசனத்திற்கு "அல்லாஹு தஆலாவிற்கும் அவனது ரசூலுக்கும் கீழ்ப்படிந்தனர். இவர்களில் நன்மைகள் செய்து கொண்டவர்களுக்கு என்ற ஆயத்தில் சொல்லப் பட்டவாறு நற்கூலி இருக்கிறது என்பதும் மற்றவர்களுக்கு நற்கூலி இல்லை" என்பதும் கருத்தல்ல. அவர்களது நற்செயல்களையும் அவற்றிற்குரிய நற்பயன்களையும் பற்றி விபரிக்கும் முறையில் அவர்கள் கீழ்ப்படிந்ததையும் பயபக்தியையும் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது.

الَّذِينَ قَالَ لَهُمُ النَّاسُ إِنَّ النَّاسَ قَدْ جَمَعُوا لَكُمْ فَاخْشَوْهُمْ فَزَادَهُمْ إِيمَانًا ۚ وَقَالُوا حَسْبُنَا اللَّهُ وَنِعْمَ الْوَكِيلُ

172. (மேற்கண்ட) இவர்கள் **"நிச்சயமாக உங்களுக்(கு விரோதமாக யுத்தம் செய்வதற்)காக மனிதர்கள் (பத்ருஸுஃராவில்) ஒன்று சேர்ந்திருக்கின்றனர்; எனவே, நீங்கள் அவர்களை நீங்கள் பயந்து கொள்ளுங்கள் என்று ஒருவன் இவர்களிடம் (வஞ்சகமாகக்) கூறினான்" ஆகவே, இவர்களுக்கு இ(ப் பயமுறுத்தலான)து விசுவாசத்தை அதிகப்படுத்தி விட்டது. இன்னும், எங்களுக்கு அல்லாஹ் போதுமானவன்; இன்னும், (அவனே) நல்ல காரியகர்த்தன் என்று கூறினார்கள்.**

இந்த ஆயத்தும் இதற்குப் பிந்திய ஆயத்தும் பத்ருஸுக்ரா அதாவது சின்ன பத்ருப் போரை விபரித்து அருளப்பட்டது. இந்தப் போர் உஹதுப் போருக்கு ஒரு வருடத்திற்குப் பிறகு நிகழ்ந்தது. இதன் விபரம் வருமாறு.

உஹதுப் போர் முடிந்து திருமக்காவை நோக்கி அபூசுஃப்யான் புறப்பட்டபோது 'பத்ரு ஸுக்ராவில் அடுத்த வருடம் யுத்தம் செய்ய வேண்டும்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறினார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இதனை அங்கீகரித்தார்கள். அடுத்த வருடத்தில் அபூசுஃப்யானும் முஷ்ரிக்குகளும் போருக்கு ஆயத்தமாகி மக்காவை விட்டுப் புறப்பட்டு வந்தபோது **"மர்ருல்லஹர்"** என்ற இடத்திற்கு வந்தவுடன் அவர் இருதயத்தில் இறைவன் பீதியை உண்டாக்கினான். ஆகவே, "யுத்தத்திற்குச் செல்லாமல் மக்கமா நகருக்குத் திரும்பவும் சென்றுவிட வேண்டும்" என்று அவர் மனதில் எண்ணிக் கொண்டிருக்கும் போது **நயீம்** என்பவர் மதீனாவை நோக்கிச் செல்வதைக் கண்டு "பத்ரு ஸுக்ராவில் போர் செய்வதாக நான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வாக்களித்திருக்கிறேன். இப்பொழுது பஞ்ச காலமாக இருப்பதால், இக்காலத்தில் போரிட இயலாது. ஆதலின், நான் மக்காவிற்குத் திரும்பச் சென்று விடலாம் என்று நினைக்கிறேன். ஆனால், நாம் போருக்குப் புறப்படாமலிருக்க முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போருக்குப் புறப்பட்டு வந்தால் அவருக்கு அதிகமான மன தைரியம் உண்டாகிவிடும். ஆதலின், நீங்கள் மதீனமா நகர் சென்று அவருக்கு அச்சமுண்டாகும்படி செய்து அவரைத் தடுத்து நிறுத்தி விடுங்கள். அதற்குப் பதிலாக நான் உங்களுக்குப் பத்து ஒட்டகங்கள் பரிசாகத் தருகிறேன்" என்று கூறினார். அப்துல் கைஸ் கிளையாரைச் சேர்ந்த வியாபாரத் தாவளக்காரரிடம் இவ்வாறு கூறியதாகவும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. பத்து ஒட்டகங்கள் சுமக்கக் கூடிய அளவிற்கு முந்திரிப் பழங்கள் தருவதாகக் கூறினார் என்றும் மற்றொரு ரிவாயத்திருக்கிறது.

எனவே, நயீம் என்பவர் அல்லது அப்துல் கைஸ் கிளையைச் சேர்ந்த வியாபாரக் கூட்டத்தினர் மதீனமா நகர் சென்று, முஸ்லிம்கள் யுத்தத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பதைப் பார்த்து "அபூசுஃப்யானும் அவரது தோழர்களும் பெருங்கூட்டமாகக் கூடி இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் நீங்கள் புறப்பட்டுச் சென்றால் உங்களில் ஒருவரேனும் எஞ்சுவரென்று நான் எண்ணவில்லை. ஆதலின், நீங்கள் யுத்தத்திற்குப் புறப்படாதிருப்பது நல்லது என்று எண்ணுகிறேன்" என்று கூறினார். அப்பொழுது முஸ்லிம்கள் அவரது சொல்லை பொருட்படுத்தாமல் பத்ரு ஸுக்ரா என்ற இடத்திற்கு அபூசுஃப்யானைத் தேடிச் சென்றார்கள். அங்கு முஷ்ரிக்குகளில் ஒருவரும் காணப்படவில்லை.

இந்த இடத்தில் பனூ கினானா கிளையாருக்குச் சொந்தமான சந்தை வருடத்தில் எட்டு நாள் கூடுவது வழக்கம். ஆகவே, ஸஹாபிகள் தங்களிடமுள்ள சரக்குகளை அச்சந்தையில் லாபத்திற்கு விற்று, குறைந்த விலைக்கு மறு சரக்குகளை வாங்கிக் கொண்டு சேமமாகவும் சந்தோஷமாகவும் மதீனமா நகருக்குத் திரும்பினார்கள். இவ்விபரம் இந்த ஆயத்திலும் இதற்கடுத்த ஆயத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

فَانْقَلَبُوا بِنِعْمَةٍ مِّنَ اللَّهِ وَفَضْلٍ لَّمْ يَمْسَسْهُمْ
سُوءٌ وَاتَّبَعُوا رِضْوَانَ اللَّهِ ۗ وَاللَّهُ ذُو فَضْلٍ عَظِيمٍ ۝

173. ஆகவே, இவர்கள் (பத்ரு ஸுஃராவில் யுத்தத்துக்குச் சென்று பகைவர்களைக் காணாததால் வர்த்தகஞ் செய்து) அல்லாஹ்விடமிருந்து அருட்கொடையையும் கிருபையையுங் கொண்டு திரும்பினர். இவர்களுக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படவில்லை. இன்னும் இவர்கள் அல்லாஹ்வில் திருப்தியைப் பின் பற்றினர். மேலும், அல்லாஹ் மகத்தான கிருபையுள்ளவன்.

அல்லாஹ்விடமிருந்து அருட்கொடை என்பதற்கு யுத்தத்திற்குச் சென்ற வீரர்கள் சேமமாக இருந்தது, ஈமானின் மீது

உறுதியாக இருந்தது, அதில் அவர்களுக்கு இன்னும் அதிகமான ஈமான் ஏற்பட்டது, பகைவர்கள் யுத்தத்திற்கு வரப்பயந்து நின்று கொண்டது முதலியவற்றைக் குறிக்கும்.

فَضْلٍ **ஃபலுலின்** (அதாவது கிருபை) என்பது யுத்தத்திற்குச் சென்ற இடத்தில் வியாபாரம் செய்து அதிகமான லாபம் அடைந்ததைக் குறிக்கும்.

إِنَّمَا ذَٰلِكُمُ الشَّيْطَانُ يُخَوِّفُ أَوْلِيَاءَهُ فَلَا تَخَافُوهُمْ
وَخَافُونِ إِن كُنتُم مُّؤْمِنِينَ ۝

174. (மேற்கூறியபடி பயமுறுத்திய வஞ்சகனான) இந்த ஷைத்தான் தன்னுடைய நண்பர்களைத்தான் பயமுறுத்துகிறான்; எனவே, நீங்கள் (உண்மை) விசுவாசிகளாக இருந்தால் அவர்களுக்கு அஞ்ச வேண்டாம், இன்னும் என்னையே அஞ்சுங்கள்.

أَوْلِيَاءَهُ **அவ்லியாஅஹூ** அதாவது அவனுடைய நண்பர்களை என்பது வெளிக்கு முஸ்லிம்களைப்போல் நடித்துக் கொண்டு அந்தரங்கத்தில் காஃபிர்களாக இருப்பவர்களான முனாஃபிக்குகளைக் குறிக்கிறது. இவர்கள் யுத்தத்திற்கு வராமல் இருந்து கொண்டவர்கள். மூமின்களாகிய உண்மை விசுவாசிகள் அல்லாஹுதஆலாவின் நண்பர்கள். இவர்களது கூட்டம்தான் மிகைப்பதாக இருக்கிறது. ஆதலின், ஷைத்தான் மூமின்களைப் பயப்படச் செய்ய முடியாது.

பயம் மூன்று வகைப்படும். 1. கௌஃபுல் ஆம் அதாவது பொது மக்களது பயம். அது அல்லாஹுதஆலாவுடைய வேதனையைக் குறித்துப் பயப்படுதல். 2. கௌஃபுல் காஸு அதாவது விசேஷமானவர் களது பயம். அல்லாஹுதஆலாவுடைய சமூகத்தை விட்டுத் தூரமாகுவதைக் குறித்து வலிமார்கள் முதலியவர்கள் பயப்படுதல். 3. கௌஃபுல் அகஸ்ஸு அதாவது மிகவும் விசேஷமானவர்களது பயம். அல்லாஹுதஆலாவில் நின்றும் பயப்படுதல். இம்மூன்று வகை

பயங்களையும் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “உனது மன்னிப்பைக் கொண்டு உனது தண்டனையை விட்டுக் காவல் தேடுகிறேன், உனது திருப்தியைக் கொண்டு உனது கோபத்தை விட்டுக் காவல் தேடுகிறேன், உன்னை விட்டு உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன்” என்று கூறி இருக்கிறார்கள். ஆகவே, ஸாலிக்கானவர் தனது மனதையும், அதன் தன்மைகளையும் அழிக்க வேண்டும். இன்னும் இவ்வுலகில் அவனது உஜுதைத் தவிர வேறு உஜுதைப் பார்க்கக் கூடாது. இன்னும் அவனையன்றி வேறு எவரையும் பயப்படக்கூடாது. அவன்தான் தனது அடியார்கள் யாவரையும் அடக்கியாள்பவன் எல்லாக் காரியங்களுக்கும் போதுமானவன்.

وَلَا يَحْزُنْكَ الَّذِينَ يُسَارِعُونَ فِي الْكُفْرِ ۚ إِنَّهُمْ
لَنْ يَضُرُّوا اللَّهَ شَيْئًا ۗ يُرِيدُ اللَّهُ أَلَّا يَجْعَلَ
لَهُمْ حَظًّا فِي الْآخِرَةِ ۖ وَلَهُمْ عَذَابٌ عَظِيمٌ ۝

175. இன்னும், நிராகரிப்பதில் துரிதமாகிறவர்க(ளின் செயல்க)ள் உம்மைக் கவலைக்குள்ளாக்க வேண்டாம். (ஏனெனில்) நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வுக்கு எதையும் தீங்கு செய்யவே முடியாது. மறுமையி(ன் நற்பயனி)ல் அவர்களுக்கு எந்தவித நற்பாகத்தையும் ஆக்காமலிருக்க அல்லாஹ் விரும்புகிறான். மேலும், அவர்களுக்குக் கொடிய வேதனையுண்டு.

الَّذِينَ يُسَارِعُونَ فِي الْكُفْرِ **நிராகரிப்பதில் துரிதமாகிறவர்கள்** என்பது முனாஃபிக்குகளைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் தங்கள் மனதினுள் மறைத்திருக்கும் குஃப்ரான காரியங்களைச் செய்வதில் தீவிரமாகிக் கொண்டிருந்தனர்.

لَنْ يَضُرُّوا اللَّهَ شَيْئًا **அவர்கள் அல்லாஹ்விற்கு எதையும் தீங்கு செய்யவே முடியாது** என்பதற்கு அல்லாஹு தஆலா அளித்துள்ள சன்மார்க்கம், அம்மார்க்கத்தை விசுவாசித்த மூமின்கள் ஆகியவற்றிற்கு எந்தவிதத் தீங்கும் செய்யவே முடியாது என்பது கருத்து.

إِنَّ الَّذِينَ اشْتَرَوُا الْكُفْرَ بِالْإِيمَانِ لَنْ يَضُرُّوا اللَّهَ
شَيْئًا ۖ وَلَهُمْ عَذَابٌ أَلِيمٌ ۝

176. நிச்சயமாக எவர்கள் விசுவாசத்திற்குப் பதிலாக நிராகரிப்பை விலைக்கு வாங்கிக் கொண்டனரோ, அவர்கள் அல்லாஹ்வுக்கு எதையும் தீங்கு செய்யவே முடியாது. மேலும், அவர்களுக்கு நோவினை செய்யும்படியான வேதனையுண்டு.

ஈமானுக்குப் பதிலாகக் குஃப்ரை விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள் என்பதற்கு ‘அவர்கள் ஈமான் கொள்வதைப் புறக்கணித்து விட்டு குஃப்ரான காரியத்தைப் பிரியமாகக் கைக் கொண்டவர்கள்’ என்பது கருத்து. ஏனெனில், ஒன்றை விற்பனை செய்து விட்டு மற்றொன்றை விலைக்கு வாங்குபவர்கள் தங்களிடம் உள்ளதை விற்பனை செய்து விட்டு மற்றொரு விலைக்கு வாங்கும் பொருளின் மீது பிரியமாக இருப்பதனாலேயாகும்.

وَلَا يَحْسَبَنَّ الَّذِينَ كَفَرُوا أَنَّمَا نُمْلِي لَهُمْ خَيْرٌ
لِأَنْفُسِهِمْ ۚ إِنَّمَا نُمْلِي لَهُمْ لِيَزْدَادُوا إِثْمًا ۚ وَلَهُمْ
عَذَابٌ مُهِينٌ ۝

177. இன்னும், அவர்களைத் (தண்டிக்காமல்) தாம் தாமதப்படுத்திக் கொண்டிருப்பதெல்லாம், தங்களுக்கு நன்மை என நிராகரிப்பவர்கள் நிச்சயமாக எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம்; அவர்களை நாம் தாமதப் படுத்திக் கொண்டிருப்பதெல்லாம் பாவத்தை அவர்கள் அதிகப்படுத்துவதற்காகவே. மேலும், அவர்களுக்கு இழிவைத்தரும் வேதனையுண்டு.

காஃபிர்கள், ஃபாஸிக்குகள் முதலியவர்கள் நீண்ட காலம் உயிருடனிருப்பதும் அவர்களது நோக்கங்கள் இவ்வுலகில் நிறைவேறுவதும் அவர்களுக்கு நன்மை இல்லை என்பதும், அவர்களுக்கு இவைகள் அந்தரங்கத்தில் தீமையையே விளைவிக்கும் என்பதும் இந்த ஆயத்திலிருந்து வெளியாகின்றன.

قَالَ عَلَيْهِ السَّلَامُ خَيْرُ النَّاسِ مَنْ طَالَ عُمْرُهُ وَحَسُنَ عَمَلُهُ وَشَرُّ
النَّاسِ مَنْ طَالَ عُمْرُهُ وَسَاءَ عَمَلُهُ

ஹதீஸ்:- "எவருக்கு வயது அதிகமாக இருந்து, அவருடைய கிரியைகளும் நல்லதாக இருக்கின்றனவோ அவர்தான் மனிதரிற் சிறந்தவர். இன்னும் எவருக்கு வயது அதிகமாக இருந்து, அவருடைய கிரியைகள் தீயனவாக இருக்கின்றனவோ அவர்தான் மனிதரிற் கெட்டவர்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

قَالَ عَلَيْهِ السَّلَامُ لَيْلَةَ الْمِعْرَاجِ اِنَّ مِنْ نِعْمِى عَلَى اُمَّتِكَ اَنِّى قَصَرْتُ
اَعْمَارَهُمْ كَيْلَا تَكْثُرَ ذُنُوْبُهُمْ وَاَقْلَلْتُ اَمْوَالَهُمْ كَيْلَا يَشْتَدَّ فِى الْقِيَامَةِ
حِسَابُهُمْ وَاَخَّرْتُ زَمَانَهُمْ كَيْلَا يَطُوْلَ فِي الْقُبُوْرِ حَبْسُهُمْ

"(நபியே) உமது உம்மத்துகளுக்கு அவர்களுடைய வயதுகளை நான் குறைத்ததற்குக் காரணம், அவர்களது பாவங்கள் அதிகமாகாமலிருப்பதற்காகவேயாகும். இன்னும் அவர்களது செல்வங்களை நான் குறைத்ததற்குக் காரணம் கியாமத்து நாளில் அவர்களுக்குக் கேள்வி கணக்கு கடுமையாக இருக்கக்கூடாது என்பதற்காகவேயாகும். அவர்களது காலத்தை நான் பிற்படுத்தி வைத்ததற்குக் காரணம் அவர்கள் தங்களது கப்ருகளில் நீண்ட காலம் தாமதப்பட்டிருக்க கூடாது என்பதற்காகவேயாகும்" என்று அல்லாஹு தஆலா மிஃராஜுடைய இரவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கூறி இருக்கிறான்.

ஆகவே, தங்களுக்குத் ஏராளமான செல்வமிருப்பதையும்,

மக்கட்பேறு அதிகமாக இருப்பதையும், தங்களது நோக்கங்கள் நிறைவேறுவதையும், வயது அதிகமாக இருப்பதையும் கண்டு ஏமாற்றமடையாமலிருப்பது அவசியமாகுமென்பது இதிலிருந்து விளங்குகிறது.

مَا كَانَ اللّٰهُ لِيَذَرَ الْمُؤْمِنِيْنَ عَلٰى مَآ اَنْتُمْ عَلَيْهِ
حَتّٰى يَمِيْزَ الْخَبِيْثَ مِنَ الطَّيِّبِ ۗ وَمَا كَانَ اللّٰهُ لِيُطْلِعَكُمْ
عَلَى الْغَيْبِ وَلٰكِنَّ اللّٰهَ يَجْتَبِيْ مِنْ رُّسُلِهٖ مَنْ
يَّشَآءُ ۖ فَاٰمِنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖ ۚ وَاِنْ تُؤْمِنُوْا وَ
تَتَّقُوْا فَلَكُمْ اَجْرٌ عَظِيْمٌ ۝

178. நல்லதை விட்டுக் கெட்டதைப் பிரித்து அறிவிக்கும் வரையில் (மனிதர்களே) நீங்கள், எ(ந்த மார்க்கத்)தின் மீது இருக்கின்றீர்களோ அதில், (உண்மை) விசுவாசிகளை அல்லாஹ் (விட்டு) விடுவதாக இல்லை. மேலும், உங்களுக்கு அல்லாஹ் மறைவானவற்றை அறிவிப்பவனாகவுமில்லை; எனினும், அல்லாஹ் (உண்மை விசுவாசிகள் இன்னார் போலியர்கள் இன்னாரென்ற இரகசியத்தை அறிவிப்பதற்குத்) தன் தூதர்களில் தான் நாடியவரைத் தெரிந்தெடுத்துக் கொள்கின்றான். எனவே, நீங்கள் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் விசுவாசியுங்கள். மேலும், நீங்கள் (உண்மையாய்) விசுவாசித்து(ப் பாவத்தை)த் தவிர்த்துக் கொள்வீர்களாயின் உங்களுக்கு மகத்தான நற்கூலியுண்டு.

இந்த ஆயத்து உண்மை மூமின்களையும், நயவஞ்சகர் களான முனாஃபிக்குகளையும் நோக்கிப் பொதுவாகக் கூறப்பட்டதே யாகும்.

الْخَبِيْثَ **அல்கபீது** அதாவது கெட்டது என்பது முனாஃபிக்குகளையும் الطَّيِّبِ **அத்தையிப்** அதாவது நல்லது என்பது உண்மை மூமின்களையும் குறிக்கும்.

وَلَا يَحْسَبَنَّ الَّذِينَ يَبْخَلُونَ بِمَا آتَاهُمُ اللَّهُ مِن فَضْلِهِ
هُوَ خَيْرًا لَّهُم ۖ بَلْ هُوَ شَرٌّ لَّهُمْ ۖ سَيُطَوَّقُونَ مَا بَخِلُوا
بِهِ يَوْمَ الْقِيَامَةِ ۗ وَلِلَّهِ مِيرَاثُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۗ
وَاللَّهُ بِمَا تَعْمَلُونَ خَبِيرٌ

179. இன்னும் அல்லாஹ் தன் கிருபையால் தங்களுக்குக் கொடுத்திருப்பதை கஞ்சத்தனம் செய்கிறவர்கள் அது தங்களுக்கு நன்மை என எண்ணிக் கொள்ள வேண்டாம்; மேலும், அது அவர்களுக்குத் தீங்கேயாகும். அவர்கள் கஞ்சத்தனம் செய்தது எதுவோ அதை இறுதிநாளில் மாலையாகப் போடப்படுவார்கள். இன்னும், வானங்களினுடையவும், பூமியுடையவும் அனந்தர உரிமை அல்லாஹ்வுக்கே உரியது. மேலும், அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு தெரிந்தவன்.

இந்த ஆயத்தில் கஞ்சத்தனஞ் செய்வதால் மறுமையில் ஏற்படும் தீங்கைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- அவசியமாக நிறைவேற்ற வேண்டியதை நிறைவேற்றாமல் இருப்பதற்குத்தான் கஞ்சத்தனம் என்று பெயர். அவசியமாகவுள்ளதை நிறைவேற்றிவிட்டு அதிகப்படியான சுன்னத்தை நிறைவேற்றாதிருப்பது கஞ்சத்தனமாகாது. அவசியமாகச் செலவு செய்ய வேண்டிய காரியங்கள் அநேகமுண்டு. தனக்காகவும், தனது உறவினர்களில் உதவி செய்யப்படத் தகுந்தவர்களுக்காகவும், பசியால் தவித்துக் கொண்டிருக்கும் அந்நியருக்கும், மார்க்க யுத்தத்திற்கும், பணவுதவி செய்ய வேண்டிய அவசியமிருக்கும் போது, செலவு செய்வது அவசியமான சந்தர்ப்பங்களாகும். ஜக்காத்துக் கொடுக்காமல் இருப்பதும் கஞ்சத்தனமேயாகும்.

قَالَ عَلَيْهِ السَّلَامُ مَنْ آتَاهُ اللهُ مَالًا فَلَمْ يُؤَدِّ زَكَاتَهُ مُثِّلَ لَهُ يَوْمَ
الْقِيَامَةِ شُجَاعًا اَقْرَعَ لَهُ زَبِيْبَتَانِ يُطَوِّقُهُ يَوْمَ الْقِيَامَةِ ثُمَّ يَاْخُذُ
بِلَهْزَمَتَيْهِ يَعْنِى بِشِدْقَيْهِ ثُمَّ يَقُوْلُ اَنَا مَالُكَ اَنَا كَنْزُكَ ثُمَّ تَلَا
وَلَايَحْسَبَنَّ الَّذِيْنَ يَبْخَلُوْنَ الْآيَةَ

ரிவாயத்து:- அல்லாஹுதஆலா ஒருவருக்குச் செல்வத்தைக் கொடுத்திருக்க அவர் அதற்குரிய ஜக்காத்தைக் கொடுக்க வில்லையானால் அந்த பொருள்கள் கியாமத்து நாளில் பாம்பின் உருவத்திலாக்கப்பட்டு அவரது கழுத்தில் சுற்றிக் கொண்டு, அவரது இரு அலகுகளிலும் கடித்துக் கொண்டு, "நான்தான் உனது பொருள், நான்தான் உனது புதையல்" என்று கூறும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். மற்றொரு ரிவாயத்தில்,

وَفِىْ رِوَايَةٍ يُجْعَلُ مَا بَخِلَ بِهِ مِنَ الزَّكَاةِ حَيَّةً يُطَوَّقُهَا فِيْ
عُنُقِهِ يَوْمَا الْقِيَامَةِ تَنْهَشُهُ مِنْ قَرْنِهِ اِلَى قَدَمِهِ وَتَنْقُرُ
رَأْسَهُ وَتَقُوْلُ اَنَا مَالُكَ

"ஜக்காத்து கொடுக்காத அந்தப் பொருள்கள் கியாமத்து நாளில் பாம்பின் உருவத்தில் ஆக்கப்பட்டு அவரது கழுத்தில் உச்சி முதல் உள்ளங் கால்வரை தீண்டும். பின்பு அவரது தலையை விழுங்கும். மேலும் நான்தான் உனது பொருள் என்று கூறும். என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். மற்றொரு ரிவாயத்தில், ருச்சி முதல் உள்ளங் கால்வரை அவரை அப்பாம்பு கடிக்கும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஜக்காத்துக் கொடுக்காதவருக்குத் தொழுகையுமில்லை என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- ஹளரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மிகவும் பயபக்தியுடனும் உள்ளச்சத்துடனும் தொழுது கொண்டிருந்த ஒருவரின் அருகில் சென்று, அவரைக் குறித்து இறைவனிடம் "எனது றப்பே! இவருடைய தொழுகை எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று கூறினார். அதற்கு இறைவன் "அவர் தமது பொருளுக்குரிய ஜக்காத்தைக் கொடுக்காமல் இருந்து கொண்டு தினந்தோறும் ஆயிரம் ரக்கஅத்துக்களைத் தொழுது, ஆயிரம் அடிமைகளை விடுதலை செய்து, ஆயிரம் ஜனாஸாத் தொழுகைகளை நிறைவேற்றி, ஆயிரம் முறை ஹஜ்ஜுச் செய்து, ஆயிரம் மார்க்க யுத்தங்களைச் செய்தாலும் அவருக்கு அவை பயனளிக்காது" என்று பதில் கூறினான்.

لَقَدْ سَمِعَ اللّٰهُ قَوْلَ الَّذِيْنَ قَالُوْۤا اِنَّ اللّٰهَ فَقِيْرٌ
وَّنَحْنُ اَغْنِيَآءُ ۘ سَنَكْتُبُ مَا قَالُوْا وَقَتْلَهُمُ الْاَنْۢبِيَآءَ
بِغَيْرِ حَقٍّ ۙ وَّنَقُوْلُ ذُوْقُوْا عَذَابَ الْحَرِيْقِ ۝

180. "நிச்சயமாக அல்லாஹ் ஏழை, நாங்கள்தான் செல்வந்தர்கள்" என்று கூறியவர்களின் கூற்றை நிச்சயமாக அல்லாஹ் கேட்டுக் கொண்டான். (எனவே) அவர்கள் சொன்னதையும், நியாயமின்றி அவர்கள் நபிமார்களைக் கொலை புரிந்ததையும் நாம் எழுதி வைப்போம். இன்னும், கரிக்கும்படியான (நெருப்பின்) வேதனையை அனுபவியுங்கள் என்று (நியாயத் தீர்ப்பு நாளில்) கூறுவோம்.

ذٰلِكَ بِمَا قَدَّمَتْ اَيْدِيْكُمْ وَاَنَّ اللّٰهَ لَيْسَ بِظَلَّامٍ
لِّلْعَبِيْدِ ۝

181. (வேதனையான) இது உங்கள் கரங்கள் முற்படுத்தி வைத்ததனாலேயாகும், நிச்சயமாக அல்லாஹ் அடியார்களுக்கு அநியாயஞ் செய்பவனாக இல்லை.

ரிவாயத்து:- யூதர்களான பனூகைன்காஃ என்ற கிளையாருக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு கடிதம் எழுதி ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் வசம் அனுப்பி வைத்தார்கள். ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அந்தக் கிளையாரது மத்ரஸா என்னும் பள்ளிக் கூடத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது பன்ஹாஸ், அஷ்யஃ என்ற இரண்டு யூதப் பாதிரிகள் அங்கிருந்தனர். பல யூதர்கள் அவர்களைச் சூழ்ந்திருந்தனர். ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் அங்கு சென்று பன்ஹாஸ் என்ற அப்பாதிரியிடம் அக்கடிதத்தைக் கொடுத்து "அல்லாஹுத்தஆலாவை நீர் பயந்து கொள்ளும் இஸ்லாத்தைத் தழுவ வேண்டும், ஹளரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதரென்பதை நீர் நிச்சயமாகத் தெரிந்திருக்கிறீர். அவர் அல்லாஹுதஆலாவிடமிருந்து உங்களிடம் வந்திருக்கிறார். உங்களிடமுள்ள தவ்ராத்தில் அவரைக் குறித்து எழுதப்பட்டுள்ளதை நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். ஆகவே, அல்லாஹு தஆலாவை விசுவாசித்து, அவனது தூதரை உண்மைப்படுத்தி அல்லாஹு தஆலாவிற்கு அழகிய கடனாகக் கடன் கொடுப்பீராக. அவன் உம்மைச் சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்வான். உமக்கு நன்மையையும் இரட்டிப்பாக்குவான்" என்று கூறினார்கள். அதற்கு, பன்ஹாஸ் என்பவர் "அபூபக்கரே! நம்முடைய றப்பு நம்முடைய பொருள்களைக் கடன் கேட்கிறான் என்று நினைக்கிறீரோ? ஏழைதான் செல்வந்தர்களிடத்தில் கடன் கேட்பான். ஆகவே, நீர் கூறுவது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அப்பொழுது அல்லாஹுதஆலா நிச்சயமாக ஏழையாகவும் நாம் செல்வந்தர்களாகவும் இருக்கிறோம். வட்டிக்குப் பணம் வாங்க வேண்டாம் என்று உங்களை அவன் விலக்குகிறான். ஆனால், நமக்கு அவன் கொடுக்கிறான். மேலும், அவன் செல்வந்தராக இருந்திருப்பானாயின் அவன் நமக்கு வட்டி கொடுக்க மாட்டான்" என்று கூறினார். இதனைக் கேட்டவுடன் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்குக் கோபம் வந்து அந்த யூதப் பாதிரியின் முகத்தில் அறைந்து

“உங்களுக்கும் நமக்குமிடையில் உடன்படிக்கை இல்லாதிருக்கும் பட்சத்தில் உனது தலையை வாங்கி இருப்பேன், அல்லாஹ்வின் பகைவனே” என்று இறைவன் மீது சத்தியமாகக் கூறினார்கள். உடனே, பன்ஹாஸ் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து முறையிட்டதுடன், ‘தாம் அல்லாஹு தஆலாவைக் குறித்து அவ்வாறு கூறவே இல்லை’ என்றும் கூறினார். அப்போது அவருடைய வாக்குமூலத்தை மறுத்தும் ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது வாக்குமூலத்தை உண்மைப்படுத்தியும் இறைவன் இந்த ஆயத்தை அருளினான்.

அல்லாஹு தஆலாவை ஏழை என்று கூறியவர் ஒருவராக இருந்தாலும் அங்கு குழுமி இருந்த இதர யூதர்களும் அதனைக் கேட்டுத் திருப்தி யடைந்திருந்ததால் அவர்கள் எல்லோருமே அதனைக் கூறியதற்கு உடந்தையாக இருந்தவர்களாகி விடுகிறார்கள். ஆதலின் அவர்கள் யாவரையும் குறித்து இந்த ஆயத்தில் لَقَدْ سَمِعَ اللّٰهُ قَوْلَ الَّذِيْنَ قَالُوْۤا اِنَّ اللّٰهَ فَقِيْرٌ وَّنَحْنُ اَغْنِيَآءُ **நிச்சயமாக அல்லாஹ் ஏழை, நாம் செல்வந்தர்கள் என்று கூறினார்களே அவர்களுடைய சொல்லை அல்லாஹ் நிச்சயமாகக் கேட்டுக் கொண்டான்** என்று பன்மையாகக் கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் கூறிய இவ்வாக்கியம் அல்லாஹுதஆலாவுக்கு மாறு செய்வதாகவும், திருக்குர்ஆனையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் பரிகசிப்பதாகவும் இருப்பதால் இது அலட்சியமாக விட்டு விடத் தகுந்த குற்றமாக இல்லை. ஆகவே, இதனை எழுதி வைத்திருந்து இதற்காக அவர்களைத் தக்கவாறு தண்டிப்போம். இவர்கள் கூறிய இக்குற்றம் இவர்களது மூதாதையர் நபிமார்களை நியாயமின்றிக் கொலை செய்த குற்றத்திற்குச் சமமாகும் என்ற விபரம் سَنَكْتُبُ مَا قَالُوْا وَقَتْلَهُمُ الْاَنْۢبِيَآءَ بِغَيْرِ حَقٍّ **அவர்கள் கூறியதையும், நபிமார்களை நியாயமின்றி அவர்கள் கொலை செய்ததையும் நாம் எழுதி வைப்போம்** என்ற வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவர்களது மூதாதையர் நபிமார்களைக் கொலை செய்ததை இவர்கள் குற்றம் என்று வெறுக்காமல் அதற்காக சந்தோஷமடைந்து கொண்டிருந்ததால் இவர்களும் அக்கொலைக்கு உடந்தையாக இருந்தவர்களாகிறார்கள்.

எனவேதான் நபிமார்களை நியாயமின்றி அவர்கள் கொலை செய்ததையும்” என்று கூறப்பட்டிருக்கிறது.

اَلَّذِيْنَ قَالُوْۤا اِنَّ اللّٰهَ عَهِدَ اِلَيْنَاۤ اَلَّا نُؤْمِنَ لِرَسُوْلٍ حَتّٰى يَاْتِيَنَا بِقُرْبَانٍ تَاْكُلُهُ النَّارُ ؕ قُلْ قَدْ جَآءَكُمْ رُسُلٌ مِّنْ قَبْلِىْ بِالْبَيِّنٰتِ وَبِالَّذِىْ قُلْتُمْ فَلِمَ قَتَلْتُمُوْهُمْ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ ۝

182. “நெருப்புத் தின்னும்படியான ஒரு குர்பானியை எங்களிடம், கொண்டு வரும் வரை, எந்தத் தூதரையும் நாங்கள் விசுவாசிக்கக் கூடாதென நிச்சயமாக அல்லாஹ் எங்களிடம் வாக்குறுதி வாங்கியிருக்கிற”னென்று இவர்கள் சொன்னார்கள்; “பல அத்தாட்சிகளையும் நீங்கள் கூறிய (இ)தையும் எனக்கு முன் (அநேகந்) தூதர்கள் நிச்சயமாக. உங்களிடத்தில் கொண்டு வந்திருக்கின்றனர். (ஆதலால்) நீங்கள் (உங்களுடைய இக்கூற்றில்) உண்மையுடையவர்களாக இருந்தால் நீங்கள் அவர்களைக் கொலை செய்தது ஏன்?” என்று (நபியே நீர் அவர்களைக்) கேளும்.

கஅபுப்னுல் அஷ்ரப், மாலிக் குப்னுஸ்ஸைப், ஹுய்யுய்யுப்னு அக்தப், பன்ஹாஸுப்னு ஆஸுரா முதலிய யூதத் தலைவர்கள் “நெருப்பினால் தின்னப்படும்படியான குர்பானியைக் கொண்டு வராத எந்த ரசூலையும் அவர்கள் விசுவாசிக்கக்கூடாதென்று தவ்ராத் வேதத்தில் இறைவன் கட்டளையிட்டிருக்கிறான்” என்று கூறினார்கள். அவர்களது இக்கூற்றை இறைவன் இந்த ஆயத்தில் கூறி மறுத்திருக்கிறான். அதன் விபரம் வருமாறு.

பனுஇஸ்ராயீல்கள் ஆடு அல்லது மாடு ஆகிய குர்பானியை துண்டித்து, அதிலுள்ள நல்ல மாமிசங்களை வீட்டின் முகட்டின் மீது வைத்துவிட்டு அவ்வீட்டிற்கு வெளியில் அதனைச் சுற்றி நின்று

கொள்வார்கள். அக்காலத்திலுள்ள நபிமட்டும் அவ்வீட்டிலிருந்து கொண்டு அல்லாஹுதஆலாவிடம் துஆச் செய்வார். உடனே, புகையில்லாத நெருப்பு வானத்திலிருந்து சப்தத்துடன் இறங்கி வந்து அந்தக் குர்பானி இறைச்சியைக் கரித்துத் தின்றுவிடும். இப்படித் தின்று விடுவது அந்த குர்பானியை இறைவன் அங்கீகரித்துக் கொண்டான் என்பதற்கு அடையாளம். அதனைத் தின்ன வில்லையானால் அந்தக் குர்பானி இறைவனால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதற்கு அடையாளம்.

ஆகவே, பனூ இஸ்ராயீல்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உறுதி கொள்வதற்கு இதனை ஆதாரமாகக் கூறி இப்படிச் செய்ய வேண்டும் என்று கூறியது தவறானதாகும். ஏனெனில், நபிமார்களை உறுதி கொள்வதற்கு குர்பானியை நெருப்புத் தின்பதை நிபந்தனையாக ஏற்படுத்தப்படவில்லை. நபிமார்களுக்கு இறைவனால் அளிக்கப்பட்டிருந்த இதர முஅஜிஸாக்களைப் போல் இதுவும் ஒரு முஅஜிஸாவாகத்தான் இருந்தது. ஆதலின், அந்த முஅஜிஸாவை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கொண்டு வரவேண்டுமென்பது அவசியமில்லை.

அல்லாஹு தஆலாவின் சமூகத்தில் நெருங்குவதற்காகச் செய்யப்படும் தர்மம், பலி, இதர நற்செயல்கள் எல்லாவற்றிற்கும் குர்பானி என்று பொதுப்படக் கூறலாம். ஆயினும், இங்கு யூதர்கள் கூறியது ஆடு மாடு போன்ற மிருகங்களை துண்டித்துக் குர்பானி செய்வதைத்தான் குறிக்கும்.

ஹளரத் ஜக்கரிய்யா அலைஹிஸ்ஸலாம், யஹ்யா அலைஹிஸ்ஸலாம் முதலிய நபிமார்கள் யூதர்கள் கூறிய இதர முஃஜிஸாக்களையும் கூடக் காண்பித்தார்கள். அவ்வாறு இருந்தும் அவர்கள் அந்த நபிமார்களை விசுவாசிக்காமல் அவர்களைக் கொலை செய்யத் துணிந்தனர். சில நபிமார்கள் யூதர்களால் வெட்டப்பட்டனர். ஆதலின், அதனை இறைவன் இந்த ஆயத்தில் فَلِمَ قَتَلْتُمُوْهُمْ اِنْ كُنْتُمْ صٰدِقِيْنَ **"அவ்வாறாயின் உண்மையாளர்களாக நீங்களிருப்பின் அவர்களை ஏன் நீங்கள் கொன்றீர்கள்?"** என்று கூறி அவர்கள் கூறுவதை மறுத்திருக்கிறான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலுள்ள யூதர்கள் நபிமார்களைக் கொலை செய்யவில்லை. ஆயினும், தங்கள் மூதாதையர் செய்த இக்காரியத்தை அவர்கள் சரியான காரியம் என்பதாக எண்ணிக் கொண்டிருந்தனர். ஆதலால், அவர்களை நோக்கி இவ்வாறு வினவப் பட்டது.

فَاِنْ كَذَّبُوْكَ فَقَدْ كُذِّبَ رُسُلٌ مِّنْ قَبْلِكَ جَآءُوْ
بِالْبَيِّنٰتِ وَالزُّبُرِ وَالْكِتٰبِ الْمُنِيْرِ ﴿١٨٣﴾

183. எனவே, உம்மை அவர்கள் பொய்யாக்கினால் (அதில் நீர் கவலைப்பட வேண்டியதில்லை) நிச்சயமாக, உமக்கு முன் அவர்களோ அத்தாட்சிகளையும், ஆகமங்களையும், ஒளிரும் வேதத்தையுங் கொண்டு வந்த அநேக தூதர்கள் (இவ்வாறே) பொய்ப்பிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த ஆயத்திலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆறுதல் சொல்லப்படுகிறது. காஃபிர்கள் நபிமார்களைப் பொய்ப்பிப்பது புதிய விஷயமல்ல. உமக்கு முன்னிருந்த நபிமார்களை உறுதி கொள்ளாமல் அவர்கள் மறுத்திருக்கின்றனர். அவர்களும் வேதங்களையம் ஸுஹுஃபு களையும் தெளிவான அத்தாட்சிகளையும் கொண்டு வந்திருந்தனர். அவற்றை அவர்கள் நம்பவில்லை என்பது இந்த ஆயத்தின் கருத்து.

அல்பய்யினாத்து என்பதற்கு இந்த ஆயத்தில் 'தெளிவான அத்தாட்சிகள் அதாவது முஃஜிஸாக்கள், அற்புதச் செய்கைகள்' என்பது கருத்து.

அஸ்ஸுபுரு என்பது **ஜபூர்** என்பதற்குப் பன்மைச் சொல். 'உபதேசங்கள், எச்சரிக்கைகள் அடங்கிய புத்தகம்' என்பது கருத்து.

அல்கித்தாபு என்பதற்கு 'மார்க்கக் கட்டளைகள் அடங்கிய புத்தகம்' என்பது கருத்து.

அல்முனீர் அதாவது பிரகாசிக்கும்படியானது என்பதற்கு 'ஏவல் விலக்கல் முதலியவைகள் தெளிவாகவுள்ளவைகள்' என்பது கருத்து.

كُلُّ نَفْسٍ ذَآئِقَةُ الْمَوْتِ ۗ وَاِنَّمَا تُوَفَّوْنَ اُجُوْرَكُمْ
يَوْمَ الْقِيٰمَةِ ۗ فَمَنْ زُحْزِحَ عَنِ النَّارِ وَاُدْخِلَ الْجَنَّةَ فَقَدْ
فَازَ ۗ وَمَا الْحَيٰوةُ الدُّنْيَاۤ اِلَّا مَتَاعُ الْغُرُوْرِ ۝

184. ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை அனுபவிப்பதாக(வே) இருக்கின்றது. இன்னும், உங்களுடைய கூலிகளை நீங்கள் நிறைவேற்றப் பெறுவதெல்லாம் இறுதி நாளில்தான். எனவே, எவன் (இறுதி நாளில் நரக) நெருப்பை விட்டுத் தூரமாக்கப்பட்டு, சுவர்க்கத்தில் புகுத்தப்படுகின்றானோ அவன் நிச்சயமாக வெற்றி பெற்று விட்டான். மேலும், இந்த அற்பமான (உலக) வாழ்வானது ஏமாற்றத்தின் பொருட்களைத் தவிர (வேறு எதுவாகவும்) இல்லை.

மனிதர் ஜின் ஆகியவர்கள் செய்கிற நன்மை தீமை ஆகிய வினைகளுக்குத்தக்க பிரதிபலன் கியாமத்து நாளிற்றான் பூரணமாக நிறைவேற்றப்படும் என்றதிலிருந்து அதற்கு முன்னரும் அவர்களுக்குச் சொற்ப கூலி கொடுக்கப்படும் என்பது தெரியவருகிறது. இதனைக் குறித்துத்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்,

قَالَ عَلَيْهِ السَّلَامُ اَلْقَبْرُ رَوْضَةٌ مِنْ رِيَاضِ الْجَنَّةِ اَوْحُفْرَةٌ مِنْ حُفَرِ النِّيْرَانِ

"கப்ரானது சுவர்க்கத்துப் பூங்காவனங்களில் ஒரு பூங்காவனம் அல்லது நரகத்தின் நெருப்புக் கிடங்குகளில் ஒரு நெருப்புக் கிடங்கு" என்ற ஹதீஸ் சமிக்ஞை செய்திருக்கிறது.

عَنِ النَّبِىِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ اَحَبَّ اَنْ يُزَحْزَحَ عَنِ
النَّارِ وَيَدْخُلَ الْجَنَّةَ فَلْتُدْرِكْهُ مَنِيَّتُهُ وَهُوَ يُؤْمِنُ بِاللّٰهِ وَالْيَوْمِ

الْاٰخِرِ وَيَأْتِى اِلَى النَّاسِ بِمَا يُحِبُّ اَنْ يُؤْتٰى بِهِ اِلَيْهِ

ஹதீஸ்:- "ஒருவர் நரகை விட்டுத் தூரப்படுத்தப்பட்டு, சுவர்க்கத்தில் பிரவேசிக்கச் செய்யப்பட வேண்டும் என்பதை விரும்புவாராயின், அவர் அல்லாஹுதஆலாவையும், கடைசி நாளையும் விசுவாசித்து, தனக்கு விருப்பமானதையே பிறருக்கும் விரும்புகிறவராக இருக்கிற நிலையில் மரணத்தை அடைய வேண்டும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

لَتُبْلَوُنَّ فِىْۤ اَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ وَلَتَسْمَعُنَّ مِنَ
الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ وَمِنَ الَّذِيْنَ
اَشْرَكُوْۤا اَذًى كَثِيْرًا ۗ وَاِنْ تَصْبِرُوْا وَتَتَّقُوْا
فَاِنَّ ذٰلِكَ مِنْ عَزْمِ الْاُمُوْرِ ۝

185. உங்களுடைய பொருள்களிலும் உங்கள் இனத்தாரிலும் நிச்சயமாக நீங்கள் சோதிக்கப் படுவீர்கள். இன்னும், உங்களுக்கு முன் வேதத்தைக் கொடுக்கப் பெற்ற (யூத கிறிஸ்த)வர்களிலிருந்து, இன்னும் இணை வைத்தவர்களிலிருந்தும் நிச்சயமாக நீங்கள் அநேகந் தொந்தரவுகளைக் கேள்விப்படுவீர்கள். மேலும், நீங்கள் (அவற்றைப்) பொறுத்து (அல்லாஹ்வை) அஞ்சினீர்களாயின் நிச்சயமாக அது காரியங்களில் (எண்ணித்) துணிவதில் நின்றுமுள்ளதாக இருக்கும்.

இந்த ஆயத்து அருளப்பட்டதற்குரிய காரணத்தைக் குறித்து **தஃப்ஸீர் பத்ஹுல் கரீமில்** பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பத்ருப் போரில் மக்கத்துக் காஃபிர்களை வெற்றி கொண்ட பின்னர் கஅபுப்னுல் அஷ்ரப் என்னும் யூதர் திருமக்கா சென்று, பத்ருப் போரில் கொல்லப்பட்ட

காஃபிர்கள் மீது இரங்கற்பாக்களைப்பாடி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் உம்மஹாத்துல் முஃமினீன்களையும் குறித்து வசை பாடினான். இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வருத்தத்தைக் கொடுத்தது. ஆதலின், தமது ஸஹாபிகளை நோக்கி "உங்களில் கஅபிடம் செல்லக்கூடியவர் யார்?" என்று வினவினார்கள். அப்பொழுது முஹம்மதுப்னு முஸ்லமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் "நான் அவனை வெட்டுகிறேன்" என்று கூறினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "உம்மால் இயலுமாயின் அவ்வாறு செய்யும்" என்று கூறினார்கள். பிறகு முஹம்மதுப்னு முஸ்லமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் இந்தக் காரியம் நிறைவேற வேண்டுமே என்று மூன்று நாட்கள் வரை கவலையுடனிருந்தார்கள். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீர் ஏன் கவலைப்பட்டவராக இருக்கிறீர்?" என்று வினவியதற்கு "நான் சொன்ன காரியம் நிறைவேறுமா? இல்லையோ? என்று அஞ்சுகிறேன்" என்று பதில் கூறினார். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "முயற்சி செய்யும்" என்றார்கள். அதற்கவர் "தங்களைக் குறித்துக் குறைவான வார்த்தை கூற எனக்கு அனுமதி தர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுமதி கொடுத்ததுடன், அவருக்கு உதவியாக வேறு ஐவரையும் சேர்த்து அனுப்பினார்கள்.

இவ்வறுவரில் ஒருவர் கஅபுப்னுல் அஷ்ரபிடம் சென்று ஒரு மணி நேரம்வரை பேசிக் கொண்டிருந்து விட்டு அப்புறம் "தங்களிடம் ஒரு காரியத்தைக் குறித்து வந்தேன்; அதனைத் தாங்கள் வெளிப்படுத்திவிடக் கூடாது" என்று கேட்டுக் கொண்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்து "இவர் நமது ஊருக்கு வந்தது நமக்குத் துன்பமாக இருக்கிறது. அரபிகள் நம்மைப் பகைத்துக் கொள்ளவும், அதனால் நமக்கு உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டிருக்கின்றன" என்று கூறினார். அதற்கு கஅபுப்னுல் அஷ்ரப் "இப்படிவரும் என்று இதற்கு முன்பே உம்மிடம் நான் கூறவில்லையா?" என்று கூறினான். அப்பொழுது அவர் தம்முடன் இன்னுஞ் சிலர் வந்திருப்பதாகக் கூறி

"உம்மிடம் கடன் கேட்கலாமென்று வந்தோம்" என்று கூறினார். அதற்கவன் "உமக்கு இதைவிட அதிகமான தொந்தரவு உண்டாகும்" என்று கூறினான். அதற்கு அவர் "நாங்கள் அவரைப் பின்பற்றி விட்டோம், இன்னுங் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம்" என்று கூறினார். பிறகு, அவன் "உங்களுக்குக் கடன் வேண்டுமென்றால் உங்கள் ஆண்மக்களை ஈடுதர வேண்டும்" என்று கேட்டான். அதற்கவர் "அவ்வாறு ஈடு வைப்பது ஆண்மக்களுக்கு இழிவாகும்" என்று கூறினார். அதற்கவன் "அவ்வாறாயின் பெண்மக்களை ஈடு கொடுங்கள்" என்றான். அதற்கு அவர் "நீர் மிகவும் அழகுவாய்ந்தவர்; உம்மைக் கண்டால் பெண்கள் பொறுமையாயிருக்க மாட்டார்கள்" என்று கூறி "எங்கள் ஆயுதங்களை ஈடு தருகிறோம்" என்று கூறினார். அதற்கு அவன் சம்மதித்தான். உடனே, அவர் வெளியில் வந்து தம்முடன் வந்த மற்றவர்களிடம் விஷயத்தை அறிவித்து, அவர்களைச் சுவருக்கப்பால் நிறுத்திவிட்டு அவனை வெளியில் வரும்படி அழைத்தார். அவன் வெளியிற் செல்ல விரும்பிய போது, அவனது மனைவி அவனை நோக்கி, "உம்மை அழைத்த சப்தத்தில் உதிரம் சொட்டுகிறது. தவிரவும், நீங்கள் போருக்குரியவர்கள். இந்த நடுநிசியில் புறப்பட்டுச் செல்வது சரியல்லை" என்று கூறினாள். அதற்கவன் தனது மனைவியின் சொல்லைக் கேட்காமல் "அவர்கள் என் உடன்பிறப்புகள். என்னை தூக்கத்தில் எழுப்ப வெட்கப்படுவார்கள். எனக்கு மிகவும் மரியாதை செய்பவர்கள்" என்று கூறிவிட்டு வெளியில் வந்து, அவர்களுடன் ஒரு மணிநேரம்வரை பேசிக் கொண்டிருந்தான். பிறகு, அவர்கள் அவனிடம் "நாம் எல்லோரும் வெளியில் உலாவச் சென்று மீதியுள்ள நேரத்தையும் பேசிக் கழித்து விட்டு வருவோம்" என்று கூறினார்கள். அதற்கவன் இசையவே, எல்லோருமாக உலாவச் சென்றார்கள். அவன் நல்ல வாசனைத் திரவியத்தைப் பூசி இருந்ததால், அவன் மீது நல்ல வாடை கமழ்ந்து கொண்டிருந்தது. அவனை வெளியில் வரும்படி செய்தவரும் அவ்வறுவரில் ஒருவருமான அபூநாயிலா ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்பவர் "இது என்ன நல்ல வாடையாயிருக்கிறது" என்று கூறி, அவனது உச்சியில் கையை வைத்து முகர்ந்ததுடன், "ஒரு நாளும் இத்தகைய வாசனையை நான் பார்த்ததில்லை" என்று கூறினார்.

அதற்கவன் "இது என்னுடைய மனைவியிடமுள்ள வாசனைத் திரவியம் என்று அவளுடைய பெயரையும் கூறி "அரபிகளிடமுள்ள அத்தர்களிலெல்லாம் மிகவும் மேலான அத்தர் என்னிடமிருக்கிறது" என்று கூறினான். இவ்வாறு இரண்டு மணிநேரம் வரையில் அவர்கள் பேசிக் கொண்டே உலாவிக் கொண்டிருந்தனர். பிறகு அவனை நோக்கி "உமது தலையை முகர்ந்து பார்க்கலாமா?" என்று கேட்டனர். அதற்கு அவன் சம்மதிக்கவே, ஒவ்வொருவராக முகர்ந்து பார்த்தனர். அவர்களில் முற்கூறப்பட்ட அபூநாயிலா ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்பவர் அவன் தலையை முகர்ந்தபோது அவனது உச்சி மயிரைப்பிடித்துக் கொண்டு, தம்முடன் வந்தவர்களை நோக்கி "அறுங்கள்" என்று கூறினார். எல்லோரும் தங்கள் வாட்களை எடுத்து வீசியதில் வாளோடு வாள் மோதிக் கொண்டதால், ஹாரிது ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்பவரது தலையில் சொற்ப காயம் ஏற்பட்டது. பிறகு, முஹம்மதுப்னு முஸ்லமா ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்பவர் தமது வாளை உருவி அவனது வயிற்றைப் பிளந்து விட்டார். பிறகு, மற்றவர்கள் அவனது தலையைக் கொய்து விடியற்காலமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து சேர்ந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது இல்லம் விட்டு வெளியில் வந்து நடந்த விஷயங்களை விசாரித்து ஹாரிது ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தில் தமது உமிழ்நீரை வைத்துத் தடவி எல்லோரையும் அவரவர் இல்லங்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

இவ்வாறு கஃபுப்னுல் அஷ்ரப் கொல்லப்பட்ட விபரம் யூதர்களுக்குத் தெரிந்து அவர்கள் அனைவரும் பயந்து நடுங்கினர். பிறகு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யூதர்களைக் கண்ட இடத்தில் வெட்டும்படி உத்தரவிட்டார்கள். அப்பொழுது மஸ்ஊதுடைய மகனார் மஹீஸா ரலியல்லாஹுதஆலா அன்ஹு என்பவர் ஒரு யூதரை கொன்றார். அதனைப் பார்த்த அவர் சகோதரர் முஹைஸா என்பவர் "அல்லாஹ்வின் பகைவனே! ஏன் அவனைக் கொலை செய்தீர்" என்று கண்டித்தார். அதற்கு மஹீஸா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் தமது சகோதரரான

முஹைஸாவை நோக்கி "அவனைக் கொல்லும்படி கட்டளையிட்டவர் உம்மைக் கொல்லும்படி கட்டளையிட்டிருந்தால் உம்மையுங் கொல்வேன்" என்று கூறினார். பிறகு முஹைஸாவும் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினார். இச்சமயத்தில் இந்த ஆயத்து அருளப்பட்டது.

கஃபுப்னுல் அஷ்ரபும், அவனது சகாக்களும் மூமின்களை ஏசுவதையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விரோதமாக யுத்தஞ் செய்யும்படி முஷ்ரிக்குகளைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்ததையும், இவை போன்ற இதர காரியங்களையும் குறித்து அவைகள் நிகழுவதற்கு முன்னதாகவே இறைவன் இந்த ஆயத்தின் மூலமாக எச்சரிக்கை செய்திருக்கிறான்.

لَتُبْلَوُنَّ فِيْٓ اَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ **"உங்களது பொருள்களிலும் உங்களது உயிர்களிலும் நிச்சயமாக நீங்கள் சோதிக்கப்படுவீர்கள்"** என்பதற்கு பொருள் விரயம், உயிர்ச் சேதம், காயம் முதலியவைகள் ஏற்படும் என்பதும், கைதி செய்யப்படுவர் என்பதும் கருத்து.

அறிந்துகொள்:- தீமையை அனுசித (தவறான) முறையில் எதிர்ப்பது அதனை அதிகப்படுத்தும். ஆதலின், அத்தீமையை ஒழிப்பதற்குப் பொறுமைதான் மிகவும் அவசியமாகும். ஆகவே, இம்மையில் ஏற்படும் தீங்கைத் தவிர்ப்பதற்காக பொறுமையாக இருக்க வேண்டும் என்பதையும், மறுமையில் தீமை ஏற்படாதிருப்பதற்காக தக்வா அதாவது பயபக்தியாக நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் இந்த ஆயத்தில் முற்கூட்டியே எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த ஆயத்து இம்மை மறுமை ஆகிய இரண்டிற்காகவும் நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்கு முறைகளைப் பொதிந்திருக்கிறது.

وَاِذْ اَخَذَ اللّٰهُ مِيْثَاقَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ لَتُبَيِّنُنَّهٗ
لِلنَّاسِ وَلَا تَكْتُمُوْنَهٗ ۡ فَنَبَذُوْهُ وَرَآءَ ظُهُوْرِهِمْ وَاشْتَرَوْا
بِهٖ ثَمَنًا قَلِيْلًا ؕ فَبِئْسَ مَا يَشْتَرُوْنَ ۝

186. இன்னும், நிச்சயமாக "நீங்கள் அதை மக்களுக்கு விவரிக்க வேண்டும். இன்னும், அதை நீங்கள் மறைக்கக் கூடாது" என்று வேதத்தைக் கொடுக்கப் பெற்றவர்களிடம், அல்லாஹ் வாக்குறுதி வாங்கிய நேரத்தை (எண்ணிப் பாரும்). எனினும், அதைத் தங்கள் முதுகுக்குப்பின் எறிந்துவிட்டு அதற்குப் பகரமாக அவர்கள் அற்பக்கிரையத்தை வாங்கினர். ஆகவே, அவர்கள் வாங்கியது கெட்டதாகும்.

யூதர், கிறிஸ்துவர்களிலுள்ள மார்க்க அறிஞர்கள் தங்கள் வேதங்களிலுள்ளதை மக்களுக்கு விளக்கிக் கூற வேண்டுமென்றும், அவற்றில் உள்ளதை மறைக்கக் கூடாதென்றும் அந்தந்தக் காலத்திலுள்ள நபிமார்கள் மூலமாக வாக்குறுதி வாங்கப்பட்டு இருந்தார்கள். ஆனால், அந்த வகுப்புகளிலுள்ள மார்க்க அறிஞர்கள் தங்கள் நபிமார்கள் மூலமாகச் செய்து கொடுத்த வாக்குறுதியை அலட்சியம் செய்து, தங்கள் வகுப்புகளிலுள்ள பொதுமக்களுக்கு சத்தியமான விபரங்களை அறிவிக்காமலிருந்து விட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அவ்வகுப்பினர் நிராகரித்தற்கு ஆதரவளித்து அவர்களிடமிருந்து வெகுமதிகளையும் வாங்கினார்கள். அவர்களது இச்செய்கை இந்த ஆயத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. ஏனெனில், இவ்விபரம் அவ்வகுப்பு உலமாக் களுக்குத்தான் தெரியும். அவர்கள் செய்ய வேண்டிய கடமையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அல்லாஹு தஆலாவுடைய வஹியின் மூலமாகவே தெரிந்தது என்பதை அவ்வகுப்புகளிலுள்ள பொது மக்களும் மற்றவர்களும் அறிந்து கொள்வதற்காகவேயாகும்.

தவிரவும், இந்த ஆயத்திற் சொல்லப்பட்ட விபரம் யூதர் கிறிஸ்துவர்களைப் பற்றியதாக இருந்தபோதினும், திருக்குர்ஆனின் கட்டளைகளை மறைக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவானதேயாகும். மேலும் உலமாக்கள் பொது மக்களுக்கு சத்தியமான விபரங்களையும் தாங்கள் அறிந்ததையுங் கூறவேண்டும் என்பதற்கும், சுயநலத்திற்காக எதையும் மறைக்கக் கூடாதென்பதற்கும் இந்த ஆயத்து ஆதாரமாக

இருக்கிறது என்று **கஷ்ஷாஃப்** என்ற தஃப்ஸீரின் ஆசிரியர் எழுதியுள்ளார்.

ரிவாயத்து:- ஹஜ்ஜாஜுப்னு யூசுஃப் என்பவர் ஸெய்யிதுனா இமாம் ஹஸன் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களிடம் "உம்மைக் குறித்து என்னிடம் சில செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. அதன் விபரமென்ன?" என்று கேட்டனுப்பினார். அதற்கு ஸெய்யிதுனா இமாம் ஹஸன் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் "உமக்கு எட்டிய செய்திகளெல்லாம் நாம் கூறியவைகளல்ல, மேலும், நாம் கூறியவைகளெல்லாம் உமக்கு எட்டவுமில்லை" என்று பதிற் கூறி அனுப்பினார்கள். அப்பொழுது ஹஜ்ஜாஜுப்னு யூசுஃப் என்பவர் "முனாஃபிக்குத் தன்மை இவ்வளவு காலமாக அடங்கிக் கிடந்தது. இப்பொழுது அது தலைப்பாகை கட்டிக் கொண்டு, வாளைக் கழுத்தில் போட்டுக் கொண்டு வெளிப்பட்டிருக்கிறது என்று கூறியது நீர்தானா?" என்று ஸெய்யிதுனா இமாம் ஹஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் கேட்டார். அதற்கு இமாம் அவர்கள் "ஆம், நான்தான் கூறினேன்" என்றார்கள். அதற்கவர் "நீர் இவ்வாறு கூறியதற்குக் காரணம் என்ன? நீர் இப்படிக் கூறியது எமக்குத் திருப்தியளிக்கவில்லை" என்று கூறினார். அதற்கு ஸெய்யிதுனா இமாம் ஹஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "வேதம் கொடுக்கப்பட்டவர்கள் அவ்வேதத்தில் உள்ளதை மறைக்கக் கூடாது. மக்களுக்கு அதிலுள்ளதை விபரித்துக் கூறவேண்டுமென்று அல்லாஹுதஆலா வாக்குறுதி வாங்கி இருக்கிறான். ஆகையால், நாம் மறைக்க மாட்டோம்" என்று கூறினார்கள். அப்பொழுது அவர் அமைதியாகி விட்டார்.

ரிவாயத்து:- "பிறருக்குப் படித்துக் கொடுக்காமலிருக்கிற அறிவு, செலவு செய்யாமல் மறைத்து வைத்திருக்கிற புதையலுக்குச் சமம். வெளிக்கு வராத விவேகம், ஊண் உணவில்லாத விக்கிரகத் திற்குச் சமம்" என்று கத்தாதா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

قَالَ عَلَيْهِ السَّلَامُ مَنْ كَتَمَ عِلْمًا عَلَى اَهْلِه اُلْجِمَ بِلِجَامٍ مِنْ نَارٍ

ரிவாயத்து:- "கற்றுக் கொடுக்கப்படத் தகுதியுள்ளவர்களுக்கு கற்றுக் கொடுக்காமல் ஒரு அறிவை ஒருவர் மறைத்தால் அவர் நெருப்புக் கடிவாளம் போடப்படுவார்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

لَا تَحْسَبَنَّ الَّذِينَ يَفْرَحُونَ بِمَا أَتَوا وَّيُحِبُّونَ أَن

يُحْمَدُوا بِمَا لَمْ يَفْعَلُوا فَلَا تَحْسَبَنَّهُم بِمَفَازَةٍ مِّنَ الْعَذَابِ

وَلَهُمْ عَذَابٌ أَلِيمٌ

187. எவர்கள், தாங்கள் செய்ததைப் பற்றிச் சந்தோஷ மடைந்து, தாங்கள் செய்யாததைப் பற்றிப் புகழப்படுவதை விரும்புகின்றனரோ அவர்களைப் பற்றி (அவர்கள் வேதனையை விட்டுத்) தப்பித்துக் கொள்வார்களென நீர் ஒரு போதும் எண்ண வேண்டாம். மேலும், அவர்களுக்கு நோவினை தரும் வேதனை இருக்கிறது.

சத்தியமானவற்றை மறைத்தல், மனிதர்களை வழி கெடுத்தல் முதலிய தீமைகளைச் செய்து விட்டு, அதனைச் செய்ததைக் குறித்துச் சந்தோஷமடைவதுடன், வாக்குறுதியை நிறைவேற்றல், சத்தியத்தை வெளியிடல், உண்மையுரைத்தல் முதலிய நல்ல காரியங்களைச் செய்யாமலிருந்து கொண்டு அவற்றைச் செய்ததாகப் போற்றப் படுவதை விரும்புபவர்கள் வேதனையை விட்டுத் தப்பித்துக் கொள்வார்கள் என்று எண்ணிக் கொள்ள வேண்டாம் என்பதும், அவர்களுக்கு நோவினை தரும் வேதனை இருக்கிறது என்பதும் இந்த ஆயத்தின் கருத்து.

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சன்மார்க்க யுத்தத்திற்குச் செல்லும் போது முனாஃபிக்குகள் சன்மார்க்க யுத்தத்திற்குச் செல்லாமல் ஊரிலிருந்து விட்டு, நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் திரும்ப வந்த பின்னர் தங்களுக்கு நோயிருந்ததாக சத்தியமும் செய்து விடுவர். இவர்கள் இப்படிச் செய்து சன்மார்க்க யுத்தத்திற்குச் செல்லாமலிருந்து விட்டதைக் குறித்துச் சந்தோஷமடைவார்கள்" இதனைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டது என்று **தஃப்ஸீர் ஃபத்ஹுல் கரீமில்** எழுதப்பட்டிருக்கிறது.

وَلِلَّهِ مُلْكُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ وَاللَّهُ عَلَىٰ كُلِّ شَيْءٍ

قَدِيرٌ

188. மேலும், வானங்களினுடையவும் பூமியினுடையவும் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. இன்னும், அல்லாஹ் எல்லா பொருட்களின் மீதும் பேராற்றலுள்ளவன்.

இந்த ஆயத்தில் கூறப்பட்டுள்ள விஷயம் இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயத்தின் தொடர்ச்சியாகும்.

இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்டபடி தங்களுடைய செய்கைக்காகச் சந்தோஷமடைவதுடன், தாங்கள் செய்யாத காரியங்களைக் குறித்துத் தங்களைப் புகழ வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள் வேதனை செய்யப்படுவர் என்று கூறப்பட்டது. இந்த ஆயத்தில் அல்லாஹுதஆலாவிற்கே வானம் பூமி ஆகிய எல்லாவற்றையும் ஆட்சி செய்யும் உரிமை இருப்பதாலும், எல்லா பொருட்களையும் அவன் விருப்பப்படி எதுவும் செய்ய பேராற்ற லிருப்பதாலும் அவர்கள் அவனது வேதனையை விட்டுத் தப்பித்துக் கொள்ள முடியாது என்ற விபரம் இந்த ஆயத்திற் கூறப்பட்டிருக்கிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தவ்ராத் வேதத்திலுள்ள ஒரு செய்தியைக் குறித்து யூதர்களிடம் வினவிய தாகவும், அதற்கவர்கள் அவ்வேதத்திலுள்ள விஷயத்திற்கு மாறான செய்தியைக் கூறி உண்மையையுரைத்ததாக அவர்கள் பாவனை செய்ததாகவும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உண்மை என்று நம்பும்படி செய்து விட்டதாக எண்ணிக் கொண்டு அந்த

யூதர்கள் மகிழ்ச்சியடைந்ததாகவும், இச்சம்பவத்தைக் குறித்து இந்த ஆயத்துகள் அருளப்பட்டதாகவும் ஒரு ரிவாயத்திற் சொல்லப் பட்டிருக்கிறது.

إِنَّ فِي خَلْقِ السَّمٰوٰتِ وَالْأَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ
وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّأُولِي الْأَلْبَابِ ۝

189. (அவன்) வானங்களையும் பூமியையும் சிருஷ்டித் திருப்பதிலும், இரவும் பகலும் மாறி (மாறி) வருவதிலும் அறிவுடை யோருக்கு நிச்சயமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹு தஆலாவின் தூதர் என்பதை உண்மைப்படுத்துவதற்காகத் தங்களுக்கு அத்தாட்சியை காண்பிக்க வேண்டுமென்று மக்காவாசிகள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டனர். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது.

வானமும் பூமியும் மிகப் பிரம்மாண்டமான சிருஷ்டிப் பொருள் களாகும். வானத்திற்றான் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலிய வைகள் இருக்கின்றன. மலை, கடல், மரங்கள், மிருகங்கள், பறவைகள் முதலியவைகள் பூமியிலிருக்கின்றன.

இரவும் பகலும் வித்தியாசப்பட்டிருப்பது என்பதற்கு இரவு கழிந்து பகல் வருதல் பகல் கழிந்து இரவு வருதல், இவ்விரண்டின் நிறங்கள் வித்தியாசப்பட்டிருத்தல், சில காலத்தில் இரவு அதிகமாகவும், சில காலத்தில் பகல் அதிகமாகவும் இருத்தல் முதலியவைகள் என்பது கருத்தாகும்.

லுப்பு என்பதற்கு, சுத்தமான அறிவு என்பது கருத்து. **அக்லு** என்பதும் **லுப்பு** என்பதும் ஒரே பொருளுள்ள இரண்டு பதங்களாகும். ஆனால், அறிவின் ஆரம்ப நிலைக்கு **அக்லு** என்றும், அதன் பரிபூரணமான நிலைக்கு **லுப்பு** என்றுஞ் சொல்வர்.

الَّذِينَ يَذْكُرُونَ اللَّهَ قِيٰمًا وَقُعُودًا وَعَلٰى جُنُوبِهِمْ
وَيَتَفَكَّرُونَ فِي خَلْقِ السَّمٰوٰتِ وَالْأَرْضِ رَبَّنَا مَا
خَلَقْتَ هٰذَا بَاطِلًا سُبْحٰنَكَ فَقِنَا عَذَابَ النَّارِ ۝

190. (அறிவுடையோரான) இவர்கள் நின்றவர்களாகவும், உட்கார்ந்தவர்களாகவும், ஒருக்கணித்துப் படுத்தவர்களாகவும் அல்லாஹ்வை நினைவு கூர்கின்றனர். இன்னும், வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்ததிலும் சிந்தனை செய்கின்றனர். (இன்னும் இவர்கள்) எங்கள் ரப்பே! இதை நீ வீணாகச் சிருஷ்டிக்கவில்லை. நீ தூயவன். எனவே, எங்களை (நரக) நெருப்பின் வேதனையை விட்டுக் காப்பாற்றுவாயாக (என்றும் பிரார்த்தனை புரிகின்றனர்).

இதற்கு முந்திய ஆயத்தில் சொல்லப்பட்ட அறிவுடையோரின் தன்மைகள் இந்த ஆயத்தில் வர்ணித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

ரிவாயத்து:- நானும் உமருடைய மகனார் உபைதுல்லாவும் ஆயிஷா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களது வீட்டிற்குச் சென்றோம். அப்பொழுது ஆயிஷா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் உபைதுல்லா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களைப் பார்த்து "உபைதுல்லாவே! ஏன் நம்மை தரிசிக்க வருவதில்லை" என்று வினவினார்கள். மேலும் "முறைவைத்து தரிசியும், அன்பு அதிகமாகும்" என்று கூறினார். அப்பொழுது இப்னு உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹுமா அவர்கள் "இந்தப் பேச்சை விட்டு விடுங்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விஷயத்தில் மிக அபூர்வமான செய்தியை எங்களுக்கு அறிவியுங்கள்" என்று ஹளரத் ஆயிஷா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களிடம் கூறினார்கள். அப்போது ஆயிஷா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் மாலை மாலையாய் கண்ணீர் வடித்தழுது கொண்டு "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விஷயத்தில் எந்த

விஷயந்தான் புதுமையாயில்லை. அவர்கள் இரவில் என்னிடம் வந்தார்கள். அவர்களது உடலும் எனது உடலும் ஒட்டும் படியாக என் விரிப்பில் இருந்தார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு என்னை நோக்கி 'ஆயிஷாவே! என்னுடைய நாயனை நான் வணங்குவதற்கு எனக்கு அனுமதி தருகிறாயா?' என்று வினவினார்கள். அதற்கு நான் 'தாங்கள் என் அருகில் இருப்பதைத்தான் நான் அதிகமாக விரும்புகிறேன் என்று சத்தியமாகக் கூறி அனுமதி கொடுத்தேன்' என்று கூறினேன். ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து ஒலுச் செய்து தொழுதார்கள். தொழும் போது நிலையில் நிற்கையில் அழுதார்கள். அவர்களுடைய கண்ணீர் இடுப்பிலெல்லாம் வடிந்தது. பிறகு,தொழுகை முடிந்ததும் வலக்கையை வலக்கன்னத்தில் வைத்து வலப்புறம் சாய்ந்து படுத்து அழுது கொண்டே இருந்தார்கள். கண்ணீரால் பூமியும் நனைந்தது. பிறகு, சுப்ஹு தொழுகைக்கு பாங்கு சொல்லி விட்டு பிலால் ரலியல்லாஹுதஆலா அன்ஹு வந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழுது கொண்டிருப்பதைப் பார்த்து "அல்லாஹுதஆலாவின் தூதர் அவர்களே! உங்களது இறைவன் உங்களது முந்திய பாவத்தையும் பிந்திய பாவத்தையும் மன்னித்திருக்கும் போது இவ்வாறு தாங்கள் அழுவதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "பிலாலே! நான் அதிகமாக நன்றி செலுத்தும் அடியாராக இருக்க வேண்டாமா? இன்றிரவு எனக்கு **நிச்சயமாக வானங்களையும் பூமியையும் சிருஷ்டித் திருப்பதில்**" என்ற ஆயத்து அருளப்பட்டது. 'அவ்வாறு இருக்க நான் எப்படி அழாதிருப்பேன்' என்று கூறி இந்த ஆயத்தை ஓதிக் காண்பித்து 'சிந்தனை செய்து பார்க்காதவருக்குத்தான் கேடு' என்று கூறினார்கள்" என்று கூறியதாக அத்தா உப்னு அபீரபாஹ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள்.

فِي الْحَدِيْثِ تَفَكُّرُ سَاعَةٍ خَيْرٌ مِنْ عِبَادَةِ سِتِّيْنَ سَنَةً

ரிவாயத்து:- "ஒரு ஸாஅத்து நேரம் சிந்தித்து பார்ப்பது அறுபது வருடம் வணக்கம் புரிவதைப் பார்க்கினும் மேலானது" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

மேலும், "சிருஷ்டிப் பொருளில் சிந்தித்துப் பாருங்கள். சிருஷ்டிக் கர்த்தாவில் சிந்தனை செய்யாதீர்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஏனெனில், அல்லாஹுதஆலாவிற்குச் சொந்தமாகவுள்ள ஹக்கீக்கத் தாகிய அகமியத்தை அறிவது மனிதரால் முடியாத காரியம். ஆதலின், சிருஷ்டிக் கர்த்தாவின் தாத்தைக் குறித்து சிந்தனை செய்வது அவர்களுக்குப் பிரயோஜனஞ் செய்யாது.

தவிரவும், சிந்தனை செய்வது இருதயத்தின் தொழிலாகும். வணக்கம் புரிவது புற அங்கங்களின் தொழிலாகும். புற அங்கங்களைப் பார்க்கினும் இருதயம் சிறந்தது. ஆதலின் இருதயத்தின் தொழிலாகிய சிந்தனைக்கு புற அங்கங்களின் தொழிலாகிய வணக்கங்களைப் பார்க்கினும் அதிக மகத்துவமேற்பட்டிருக்கிறது. தவிரவும், வணக்கம் புரிவது அல்லாஹுதஆலாவினால் அளிக்கப்படுகிற நன்மைப் பயனைச் சேர்த்து வைப்பதாகவும், சிந்தனை செய்வது அல்லாஹு தஆலாவிடத்திலேயே சேர்த்து வைப்பதாகவும் இருப்பதால் சிந்தனை செய்வது வணக்கங்களைப் பார்க்கினும் சிறந்ததாக இருக்கிறது.

நிற்க, மனிதன் உயிரும் உடலும் சேர்ந்து சிருஷ்டிக்கப் பட்டவனாக இருக்கிறான். ஆகவே, அவனது வணக்கமும் ஆன்மா சம்மந்தமுள்ளதாகவும் ஸ்தூல சம்மந்தமுள்ளதாகவு மிருக்கிறது. ஆகவே, ஸ்தூல சம்மந்தமான வணக்கங்கள் الَّذِيْنَ يَذْكُرُوْنَ اللّٰهَ قِيٰمًا وَّقُعُوْدًا وَّعَلٰى جُنُوْبِهِمْ **உட்கார்ந்தவர்களாகவும் ஒருக்கணித்துப் படுத்தவர்களாகவும் அல்லாஹ்வை நினைவு கூர்கின்றனர்** என்ற வசனத்திலும், ஆன்மா சம்பந்தமான வணக்கம் وَيَتَفَكَّرُوْنَ فِيْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ **இன்னும் வானங்களையும் பூமிகளையும் சிருஷ்டித்திருப்பதில் சிந்திப்பார்கள்** என்ற வசனத்திலுங் கூறப்பட்டிருக்கிறது.

இறைவனிடம் கேட்கப்படும் துஆக்கள் பெரும்பாலும் அங்கீகரிக்கப்படுவதற்கு மூல காரணமாக இருப்பது துஆக் கேட்பதற்கு முன் அவனது சிருஷ்டிப் பொருளைக் குறித்துச் சிந்தனை செய்து அவனது இணையற்ற சக்தியை உணருவதாகவும், புற அங்கங்களால்

வணங்குவதாகவும் இருப்பதால் இந்த ஆயத்தில் புற அங்கங்களின் வணக்கங்களையும், இருதயம் சம்மந்தப்பட்ட சிந்தனையையும் கூறிய பின் அவர்கள் கேட்கும் துஆக்களைக் குறித்து رَبَّنَا مَا خَلَقْتَ هٰذَا بَاطِلًا **“எங்கள் ரப்பே! இதனை நீ வீணாக சிருஷ்டிக்க வில்லை”** என்ற வசனத்திலிருந்து கூறப்பட்டிருக்கிறது.

அறிந்துகொள்:- அல்லாஹுதஆலாவை திக்ருச் செய்வது மூன்று வகையாகும். அவற்றில் முதலாவது நாவினால் திக்ருச் செய்வது. இதுதான் சிறந்தது. இரண்டாவது இருதயத்தினுள் சிந்திப்பது. மூன்றாவது ஆன்மாவைக் கொண்டு அறிதல். நாவினால் ஜபிப்பதானது இருதயத்தில் ஜபிப்பதின் பால் அதாவது அல்லாஹு தஆலாவின் ஆற்றல்களைப் பற்றிச் சிந்திப்பதன்பால் சேர்க்கும். இருதயத்தில் ஜபிப்பதானது ஆன்மாவின் ஸ்தானத்தில் சேர்ப்பிக்கும். அப்பொழுது அவர் (ஹக்காயிக்குல் அஷ்யா) என்னும் பொருள்களின் அகமியங்களை அறிவதுடன் அல்லாஹுதஆலாவின் சிருஷ்டிப் பொருள்களிலுள்ள தெய்வீக அம்சங்களையும் பிரத்தியட்சமாகக் காண்பார்.

رَبَّنَآ إِنَّكَ مَن تُدْخِلِ النَّارَ فَقَدْ أَخْزَيْتَهُ ۖ وَمَا لِلظّٰلِمِينَ مِنْ أَنصَارٍ

191. எங்கள் ரப்பே! நிச்சயமாக நீ எவரை நரகத்தில் புகுத்துகிறாயோ அவரை நிச்சயமாக நீ இழிவுபடுத்தி விட்டாய். மேலும், அநியாயக்காரர்களுக்கு உதவி செய்பவர்கள் கிடையாது.

நரகினில் பிரவேசிக்கச் செய்வது உடல் சம்மந்தமான வேதனையாகும், இழிவுபடுத்துவது ஆன்மா சம்மந்தமான வேதனையாகும். இந்த ஆயத்தில் முக்கியமாக ஆன்மா சம்மந்தமான வேதனையைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வேதனை உடல் வேதனையைப் பார்க்கினும் மிகக் கொடியது.

தவிர, அநியாயக்காரர்களுக்கு உதவியாளர்கள் இல்லை என்பதால் அவர்களுக்கு ஷஃபாஅத்துச் செய்ய ஒருவரும் முன் வரமாட்டார்கள் என்பது கருத்தல்ல. ஏனெனில், அல்லாஹுதஆலா வேதனை செய்யும் போது அதனைத் தடுத்து நிறுத்தி விடக் கூடியவர்கள் இல்லை என்பதுதான் இந்த ஆயத்தின் கருத்து. ஷஃபாஅத்துச் செய்வது அல்லாஹுதஆலாவிடம் கேட்டுக் கொள்வதாகவும் விண்ணப்பித்துக் கொள்வதாகவும் இருப்பதுடன், அல்லாஹு தஆலாவின் அனுமதி பெற்றே வேண்டுதல் செய்வதாகவுமிருப்பதால் இந்த ஆயத்தில் ஷஃபாஅத்துச் செய்வதைப் பற்றிக் கூறவே இல்லை.

رَبَّنَآ إِنَّنَا سَمِعْنَا مُنَادِيًا يُنَادِي لِلْإِيمَانِ أَنْ آمِنُوا بِرَبِّكُمْ فَآمَنَّا ۚ رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّئَاتِنَا وَتَوَفَّنَا مَعَ الْأَبْرَارِ

192. எங்கள் ரப்பே! நிச்சயமாக நாங்கள் “உங்களுடைய ரப்பை ஈமான் கொள்ளுங்கள்” என்று அழைப்பவரின் அழைப்பைச் செவியேற்று, நாங்கள் ஈமான் கொண்டோம். எங்கள் ரப்பே! எங்களின் பாவங்களை எங்களுக்கு மன்னித்தருள்வாயாக; இன்னும், எங்களின் தீமைகளை எங்களை விட்டு அகற்றுவாயாக; இன்னும், எங்களை நல்லோர்களுடன் எங்க(ள் ஆன்மாக்க)ளைக் கைப்பற்றுவாயாக.

ஈமானின் பால் அழைக்கும்படியான அழைக்கிறவரை என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறிக்கும் ஏனெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்தான் இறைவனது கட்டளைப்படி மக்களை ஈமானின் பால் அழைக்கிறவர்கள்.

وَتَوَفَّنَا مَعَ الْأَبْرَارِ **நல்லோர்களுடன் எங்க(ள் ஆன்மாக்க)ளைக் கைப்பற்றுவாயாக** என்பதற்கு நல்லோர்களாகிய நபிமார்கள்,

வலிமார்கள், ஸாலிஹீன்கள் ஆகிய நல்லோர்கள் வஃபாத்தாகும் போது எத்தகைய தன்மையுள்ளவர்களாக இருந்தார்களோ அத்தன்மையில் எங்களையும் மரணிக்கச் செய் என்பது கருத்தாகும்.

رَبَّنَا وَاٰتِنَا مَا وَعَدْتَّنَا عَلٰى رُسُلِكَ وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ ۗ اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ ۝

193. எங்கள் ரப்பே! இன்னும், உனது தூதர்கள் மூலமாய் எங்களுக்கு வாக்களித்ததைத் தந்தருள்வாயாக! மேலும், இறுதிநாளில் எங்களை இழிவு படுத்தாதிருப்பாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதிக்கு மாறு செய்ய மாட்டாய் (என்றும் பிரார்த்தித்தனர்).

இதற்கு முந்திய 189வது ஆயத்தில் கூறப்பட்ட உலுல் அல்பாப் அதாவது அறிவுடையோர் இறைவனது சிருஷ்டிப் பொருள்களைப் பற்றி சிந்தித்து ஆராய்ச்சி செய்து, அவனது ஆற்றல்களை உணர்ந்து அவனிடம் கேட்கும் பிரார்த்தனைகளைப் பற்றிய விபரம் இந்த ஆயத்துடன் முடிவடைகின்றது. இந்தப் பிரார்த்தனைகளில் ஐந்து காரியங்களைக் குறித்துக் கேட்கப்பட்டிருக்கிறது. இவற்றில் முதலாவது உடல் சம்மந்தமான வேதனையை விட்டு எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்பது. இது "**(நரக) நெருப்பின் வேதனையை விட்டு எங்களைக் காப்பாற்றுவாயாக**" என்ற பிரார்த்தனையில் அடங்கி இருக்கிறது. இவற்றில் கடைசிப் பிரார்த்தனை இருதயம் சம்மந்தமான வேதனையை விட்டுக் காப்பாற்ற வேண்டும் என்பது. இது وَلَا تُخْزِنَا يَوْمَ الْقِيٰمَةِ "**இன்னும் கடைசி நாளில் எங்களை இழிவு படுத்தாதிருப்பாயாக**" என்ற பிரார்த்தனையில் அடங்கி இருக்கிறது.

فَاسْتَجَابَ لَهُمْ رَبُّهُمْ اَنِّىْ لَاۤ اُضِيْعُ عَمَلَ عَامِلٍ مِّنْكُمْ مِّنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى ۚ بَعْضُكُمْ مِّنْۢ بَعْضٍ ۚ فَالَّذِيْنَ هَاجَرُوْا وَاُخْرِجُوْا مِنْ دِيَارِهِمْ

وَاُوْذُوْا فِىْ سَبِيْلِىْ وَقٰتَلُوْا وَقُتِلُوْا لَاُكَفِّرَنَّ عَنْهُمْ سَيِّاٰتِهِمْ وَلَاُدْخِلَنَّهُمْ جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۚ ثَوَابًا مِّنْ عِنْدِ اللّٰهِ ۗ وَاللّٰهُ عِنْدَهٗ حُسْنُ الثَّوَابِ ۝

194. ஆகவே, உங்களில் சிலர், சிலரில் நின்று(முள்ள ஒரே இன)மாக இருக்கிறீர்கள். (ஆதலால்) உங்களில் ஆணோ அல்லது பெண்ணோ (யாராயினும் நல்ல) காரியம் செய்பவரின் (நற்) செயலை நிச்சயமாக நான் வீணாக்கமாட்டேன். ஆகவே எவர்கள் (மக்காவை) ஹிஜ்ரத்துச் செய்து, தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு, என்னுடைய பாதையில் துன்புறுத்தப் பெற்று (இன்னும்) அவர்கள் (மார்க்க) யுத்தம் புரிந்து கொல்லப்பட்டனரோ அவர்களின் பாவங்களை அவர்களை விட்டு நிச்சயமாக நான் அகற்றுவேன்; இன்னும் அவர்களைச் சோலைகளில் நிச்சயமாகப் புகுத்துவேன்; அவற்றிற்கு கீழ் அருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன, (இது) அல்லாஹ்விடத்திலிருந்துள்ள பிரதிபலனாகும்; மேலும் – அல்லாஹ் – அவனிடத்தில் நல்ல பிரதிபலனிருக்கிறது" என்று அவர்(களின் பிரார்த்தனை)களுக்கு அவர்களின் ரப்பு பதில் கூறினான்.

உம்முல் மூமினீன் ஹளரத் உம்முஸல்மா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "அல்லாஹு தஆலாவின் தூதர் அவர்களே! ஹிஜ்ரத்து சம்மந்தமாக ஆடவர்களை மட்டும் அல்லாஹுதஆலா கூறுவதை நான் கேள்விப்படுகிறேன், பெண்களைக் குறித்துப் பிரஸ்தாபிப் பதில்லை" என்று கூறினார்கள். அப்போது இந்த ஆயத்தை அல்லாஹுதஆலா அருளினான் என்று ரிவாயத்துச் செய்யப் பட்டிருக்கிறது.

بَعْضُكُم مِّنۢ بَعْضٍ **உங்களிற் சிலர் சிலரில் நின்று (முள்ள ஒரே இன)மாக இருக்கிறீர்கள்** என்ற வசனம் பெண்களுக்கும் ஆடவர்களுக்கும் பொதுவானது. ஏனெனில், பெண்ணிலிருந்து ஆண் உண்டாகி இருக்கிறது. இதுபோல ஆணிலிருந்து பெண் உண்டாகி இருக்கிறது. தவிரவும் (நற்செயல்களுக்கு நன்மைப் பயனளிக்கப் படுவதிலும், தீயசெயல்களுக்குத் தீமைப் பயனளிக்கப்படுவதிலும்) உங்களிற் சிலர் சிலரைப் போலவே இருக்கிறார்கள் என்றும் இந்த ஆயத்திற்குச் சிலர் பொருள் கூறி இருக்கிறார்கள்.

فَالَّذِينَ هَاجَرُوا **ஹிஜ்ரத்துச் செய்தவர்கள்** என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினால் தங்களது பிறப்பிடத்தைத் தாங்களாகவே வெறுத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிருக்கு மிடத்திற்கு வந்து குடியேறியவர்கள் என்பது கருத்து. وَأُخْرِجُوا مِن دِيَارِهِمْ **இன்னும் தங்களுடைய இல்லங்களை விட்டு வெளியேற்றப் பட்டவர்கள்** என்பது முஷ்ரிக்குகளது துன்புறுத்தலால் தங்களது பிறப்பிடத்தை விட்டு நிர்ப்பந்தமாக வெளியேறியவர்கள் என்பது கருத்து. இவ்விருவகை கூட்டத்தினரில் முதலிற் சொல்லப் பட்டவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும், அவர்களது சமூகத்திலிருக்க வேண்டும் என்ற எண்ணத்தால் ஹிஜ்ரத்துச் செய்தவர்கள். ஆதலால் அவர்களது அந்தஸ்து இரண்டாவது வகைக் கூட்டத்தினரைப் பார்க்கினும் மேலானதாகும்.

ثَوَابًا مِّنْ عِندِ اللَّهِ **அல்லாஹ்விடத்திலிருந்துள்ள பிரதி பலனாகும்** என்ற வசனம் இந்த ஆயத்திற் கூறப்பட்டவர்களுக்கு இறைவனால் அளிக்கப்படுகிற மறுமைப் பயனின் விசேஷமான தன்மையைக் குறிக்கிறது. எவ்வாறெனில், ஒரு அரசர் தனது பிரஜைக்கு அல்லது ஒரு ஊழியருக்கு ஒரு வெகுமதி அளிப்பதைத் தனது ஊழியர்கள் மூலமாக அளிக்காமல் அவ்வரசரே நேரடியாக அளிப்பதுடன் “நானே உனக்கு இதனை அளிக்கிறேன்” என்று கூறினால் அந்த வெகுமதி எவ்வளவு அற்பமாக இருந்தாலும் அதற்கு

விசேஷமான கௌரவத்தைக் கொடுப்பது வழக்கம். ஆகவே, அல்லாஹு தஆலாவே இந்த ஆயத்தில் ''அல்லாஹ்விடமிருந்துள்ள பிரதிபலனாக (அவர்களை நான் நிச்சயமாகப் பிரவேசிக்கச் செய்வேன்)'' என்று கூறி இருப்பதால் மேலே சொல்லப்பட்டவர்கள் பிரவேசிக்கும் சுவர்க்கம் மிகவும் மகத்துவமுள்ளது என்பது வெளியாகின்றது.

لَا يَغُرَّنَّكَ تَقَلُّبُ الَّذِينَ كَفَرُوا فِي الْبِلَادِ ۝

195. நிராகரிப்பவர்கள் நகரங்களில் (வர்த்தக சம்பந்தமாகப்) போக்குவரத்துச் செய்து கொண்டிருப்பது நிச்சயமாக உம்மை ஏமாற்றி விட வேண்டாம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்னோக்கி இவ்விலக்கல் வந்திருந்தாலும், இவ்விலக்கல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துகளுக்குக் கூறப்பட்டதாகும். ஏனெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறு பாவம் பெரும் பாவங்களை விட்டுக் காப்பாற்றப் பட்டவர்கள். ஆதலால், உலகில் காஃபிர்கள் செல்வந்தர்களாக இருப்பதைப் பார்த்து ஏமாந்து விடமாட்டார்கள்.

مَتَاعٌ قَلِيلٌ ثُمَّ مَأْوَاهُمْ جَهَنَّمُ ۚ وَبِئْسَ الْمِهَادُ ۝

196. (இவைகளோ) சொற்ப சுகமாகும். பின்பு அவர்கள் சேருமிடம் நரகமேயாகும். மேலும், (அது) கெட்ட விரிப்பாகும்.

முஷ்ரிக்குகள் செல்வந்தர்களாகவும், இன்ப சுகங்களை நுகருபவர்களாகவும் இருப்பதைச் சில மூமின்கள் பார்த்து ''அல்லாஹ்வின் விரோதிகள் நன்றாக இருப்பதை நாம் காண்கிறோம். ஆனால், நாம் பசியால் வாடுகிறோம்'' என்று கூறினார்கள். ஆதலின், அந்த முஷ்ரிக்குகளுடைய இவ்வுலகச் செல்வம் மிகவும் அற்பமானது

என்பது ஆயத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், அல்லாஹு தஆலா மூமின்களுக்கெனத் தயார் செய்யப்பட்டு இருக்கிற அருட்கொடைகளின் முன் இவற்றை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இவைகள் மிகவும் அற்பமானவைகளேயாகும். எனவே, இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இந்த உலகம் மறுமையின் முன்னிலையில் கடலில் தனது நுனி விரலை விட்டு எடுத்தவருக்கு ஒப்பாகவே இருக்கிறது. அந்த விரலில் எவ்வளவு (தண்ணீர்) வருகிறதென்பதை அவர் பார்க்கட்டும்" என்று கூறி இருக்கிறார்கள்.

لَٰكِنِ الَّذِينَ اتَّقَوْا رَبَّهُمْ لَهُمْ جَنَّٰتٌ تَجْرِي مِن تَحْتِهَا الْأَنْهَٰرُ خَٰلِدِينَ فِيهَا نُزُلًا مِّنْ عِندِ اللَّهِ ۗ وَمَا عِندَ اللَّهِ خَيْرٌ لِّلْأَبْرَارِ

197. என்றாலும், எவர்கள் தங்களுடைய ரப்பை அஞ்சினார்களோ அவர்களுக்காக (சுவர்க்கத்து)ச் சோலைகள் இருக்கின்றன; அவற்றிற்குக் கீழ் அருவிகள் ஓடிக் கொண்டிருக் கின்றன. அவர்கள் அவற்றில் எப்பொழுதும் இருப்பார்கள். (இது) அல்லாஹ்விடமிருந்துள்ள விருந்தாகும். மேலும், அல்லாஹ்விடம் இருப்பது நல்லோர்களுக்கு மேலானதாகும்.

வியாபாரத்தின் நிமித்தமாக காஃபிர்கள் பல ஊர்களுக்குள் சென்று பணம் சம்பாதித்து வருவதைக் குறித்து "அவைகள் சொற்பமான சுகிப்பாகும்" என்று இதற்கு முந்திய ஆயத்தில் கூறி இருப்பதிலிருந்து சொற்பமான சுகம் ஏற்படுவது பல ஊர்களுக்கும் செல்வதால் ஏற்பட்டது என்று சிலர் சந்தேகங் கொள்ளலாம். ஆகவே, அவ்வாறான சந்தேகத்திற்கு இடமில்லாமல் "பயபக்தியுள்ள மூமின்கள் காஃபிர்களைப் போல் பல ஊர்களுக்குள் சென்று வியாபாரஞ் செய்து அவர்கள் அடையும் லாபத்தை அடைந்தாலும் அல்லது அடையாமல் இருந்தாலும் அவர்களுக்காக மறுமையிற் தயார் செய்யப்பட்டிருப்பது மிகவும் மேலான" தென்ற விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அல்லாஹுதஆலாவிடமிருப்பது நிலைத்திருப்பதாகவும் அதிகமாகவும் இருப்பதால் அவைகள் நல்லோர்களுக்குச் சிறந்ததென கூறப்பட்டது.

قَالَتْ عَائِشَةُ رَضِىَ اللّٰهُ عَنْهَا قُلْتُ يَارَسُوْلَ اللّٰهِ اَلَا تَسْتَطْعِمُ اللّٰهَ فَيُطْعِمَكَ قَالَتْ وَبَكَيْتُ لِمَا رَأَيْتُ بِه مِنَ الْجُوْعِ وَشَدِّ الْحَجَرِ عَلٰى بَطْنِهٖ مِنَ السَّغَبِ فَقَالَ يَا عَائِشَةُ وَالَّذِىْ نَفْسِى بِيَدِه لَوْ سَأَلْتُ رَبِّى اَنْ يُّجْرِيَ مَعِىْ جِبَالَ الدُّنْيَا ذَهَبًا لَا جْرَاهَا حَيْثُ شِئْتُ مِنَ الْاَرْضِ وَلٰكِنِّى اِخْتَرْتُ جُوْعَ الدُّنْيَا عَلٰى شِبَعِهَا وَفَقْرَ الدُّنْيَا عَلٰى غِنَاهَا وَحُزْنَ الدُّنْيَا عَلٰى فَرَحِهَا يَا عَائِشَةُ اِنَّ الدُّنْيَا لَاتَنْبَغِى لِمُحَمَّدٍ وَلَا لِاٰلِ مُحَمَّدٍ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பசியின் கொடுமையால் தங்களது வயிற்றில் கல்லை வைத்துக் கட்டிக் கொள்வார்கள். உம்முல் மூமினீன் ஹளரத் ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் இந்த நிலையைக் குறித்து ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "அல்லாஹுதஆலாவின் நபி அவர்களே! அல்லாஹு தஆலாவிடம் தங்களுக்கு உணவளிக்கும்படி கேட்கக் கூடாதா? தங்களுக்கு அவன் உணவளிப்பானல்லவா?" என்று வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ஆயிஷாவே! எவனுடைய கையில் எனது ஆன்மா இருக்கிறதோ அவன் மீது சத்தியமாகக் கூறுகிறேன். இவ்வுலகத்து மலைகளைத் தங்கமாக ஆக்கிவிட வேண்டும் என்று எனது றப்பை நான் கேட்கும் பட்சத்தில் பூமியில் நான் நினைத்த இடத்திலெல்லாம் அவற்றை ஏற்படுத்தி விடுவான். என்றாலும், இவ்வுலகில் வயிறு நிரம்பி இருப்பதை பார்க்கினும் அதன் பசியையே நான் தெரிந்தெடுத்துக் கொண்டேன். இவ்வுலகத்தின் செல்வத்தைப் பார்க்கினும் அதன் எளிமையையும்,

இவ்வுலகத்தின் சந்தோஷத்தைப் பார்க்கினும் அதன் துக்கத்தையும் தெரிந்தெடுத்துக் கொண்டேன். ஆயிஷாவே! இந்த உலகம் முஹம்மதுக்கும் முஹம்மதுடைய குடும்பத்தாருக்கும் தகுதியில்லை" என்று கூறினார்கள். எனவே இவ்வுலகத்தைய செல்வங்களும் சந்தோஷங்களும் நிலையற்றனவாகவும் அழிந்து போகக் கூடியனவாகவும் இருப்பதால் இவற்றை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் விரும்பாமல் மறுமைச் செல்வம் அழியாததாகவும் நிலையானதாகவும் இருப்பதால் அதனையே விரும்பினார்கள் என்பதும் தெரியவருகிறது.

قَالَ ابْنُ عَبَّاسٍ رَضِىَ اللهُ عَنْهُمَا يُؤْتِي بِالدُّنْيَا يَوْمَ الْقِيَامَةِ فِيْ صُوْرَةِ عَجُوْزٍ شَمْطَاءَ زَرْقَاءَ وَاَنْيَابُهَا بَادِيَةٌ مُشَوَّهَةٌ خَلْقُهَا وَتَشْرِفُ عَلَى الْخَلَائِقِ فَيُقَالُ أَتَعْرِفُوْنَ هَذِهِ فَيَقُوْلُوْنَ نَعُوْذُ بِاللهِ مِنْ مَعْرِفَةِ هَذِهِ فَيُقَالُ هَذِهِ الدُّنْيَا الَّتِى تَفَاخَرْتُمْ عَلَيْهَا بِهَا تَقَاطَعْتُمْ الاَرْحَامِ وَبِهَا تَحَاسَدْتُمْ وَتَبَاغَضْتُمْ وَاَغْتَرَرْتُمْ ثُمَّ تُقْذَفُ فِيْ جَهَنَّمَ فَتُنَادِىْ يَارَبِّ اَيْنَ اَتْبَاعِىْ وَاَشْيَاعِيَ فَيَقُوْلَ اللهِ تَعَالَى اَلْحِقُوْا بِهَا اَتْبَاعَهَا

ரிவாயத்து:- கியாமத்துநாளில் இவ்வுலகம் நீண்ட பற்களும் அவலட்சணமுமுள்ள ஒரு கிழவியின் தோற்றத்தில் ஜனங்களிடம் கொண்டு வந்து "இவளை நீங்கள் அறிவீர்களா?" என்று வினவப்படும். அவர்கள் "இவளை நாங்கள் அறியோம் என்று கூறுவார்கள். அப்பொழுது அவர்களிடம் நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை பாராட்டிக் கொண்டதும் உறவினர்களை விட்டுப் பிரிந்து கொண்டதும், பெருமை கொண்டதும், கோபித்துக் கொண்டதும் இதற்காகத்தான். இது தான் உலகம்" என்று கூறி நரகில் எறியப்படும். அப்போது உலகம் நாயனிடத்தில் "இறைவா! என் கூட்டத்தினர் எங்கே? என்னைத் தொடர்ந்தவர்கள் எங்கே?" என்று கூறும். அதற்கு

இறைவன் "அதனைத் தொடர்ந்தவர்களையும் அதனுடன் கொண்டு வந்து சேர்த்து விடுங்கள்" என்று கூறுவான்.

அறிந்துகொள்:- அல்லாஹுதஆலாவின் அடியார்களிற் சிலரிடம் சுவர்க்கத்தை மிகவும் அலங்கரித்து அவர்கள் முன் கொண்டுவரப்பட்டால் அவர்கள் அதனைக் கண்டு, நரகத்தைக் கண்டு பயந்தோடுவது போல் ஓடுவார்கள். ஏனெனில், அவர்களது இருதயங்களில் அல்லாஹுதஆலாவின் மீதுள்ள அன்பு அதிகமாக இருக்கிறது. அவர்கள் அல்லாஹுதஆலாவைத் தவிர்த்து வேறு எதையும் திரும்பிப் பார்க்க மாட்டார்கள் என்று அபூயஜீது புஸ்தாமி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறிஇருக்கிறார்கள்.

وَاِنَّ مِنْ اَهْلِ الْكِتٰبِ لَمَنْ يُّؤْمِنُ بِاللّٰهِ وَمَآ اُنْزِلَ اِلَيْكُمْ وَمَآ اُنْزِلَ اِلَيْهِمْ خٰشِعِيْنَ لِلّٰهِ ۙ لَا يَشْتَرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ ثَمَنًا قَلِيْلًا ؕ اُولٰٓئِكَ لَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ؕ اِنَّ اللّٰهَ سَرِيْعُ الْحِسَابِ ۝

198. மேலும், நிச்சயமாக வேதத்தையுடையவர்களில் சிலர் இருக்கின்றனர். அல்லாஹ்வையும் உங்களிடம் இறக்கப் பெற்ற (வேதத்)தையும் அவர்களுக்கு இறக்கப் பெற்றதையும் அல்லாஹ்வை அஞ்சியவர்களாய் இருக்கும் நிலையில் விசுவாசிக்கின்றனர். அல்லாஹ்வின் வசனங்களை அற்பக் கிரையத்திற்கு அவர்கள் விற்க மாட்டார்கள். இத்தகையோர் அவர்களுக்கு அவர்களின் (நற்)கூலி அவர்களின் ரப்பிடத்திலிருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் கணக்குப் பார்ப்பதில் மிகத் தீவிரமானவன்.

ரிவாயத்து:- அபிசினியாவை அரசாட்சி புரிந்த அஸ்மஹத்துன்னஜ்ஜாஷீ என்பவர் மரணித்த விஷயத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஹளரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அறிவித்தார்கள். உடனே, நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது ஸஹாபிகளிடம் “உங்களது தேசமல்லாததில் மரணித்த உங்கள் சகோதரருக்காக (இறைவனைத் தொழுது பிரார்த்திப்போம்) புறப்படுங்கள்” என்று கூறினார்கள். அப்பொழுது ஸஹாபிகள் “அவர் யார்?” என்று வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “நஜ்ஜாஷீ” என்று கூறினார்கள். பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (மதீனமா நகரின் கப்ருஸ்தானாகிய) பக்கீஉ என்ற இடத்திற்குச் சென்றார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அபிஸினியா நாடு கண்ணுக்குப் புலப்படும்படி திறக்கப்பட்டது. நஜ்ஜாஷி என்ற அவ்வரசரது கட்டிலை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பார்த்தார்கள். அவருக்காக (இறைவனை)த் தொழுது நான்கு தக்பீர்களைக் கூறி, அவருக்குப் பாவமன்னிப்புச் செய்யும்படி (இறைவனைப்) பிரார்த்தித்தார்கள். இதனைப்பற்றி “முனாஃபிக்குகள் இவரைப் பாருங்கள், கிறிஸ்துவரான ஒரு ஹபஷிக்காகத் தொழுகிறார். அவரை அவர் பார்த்ததுமில்லை. அவருடைய மார்க்கத்தை அவர் தழுவி இருக்கவுமில்லை” என்று கூறினர். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆயத்து அப்துல்லாஹிப்னு ஸலாம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களையும் அவரது சஹாக்களையும் குறித்து அருளப்பட்டது. நஜ்ரான் தேசத்திலுள்ள நாற்பது பேரையும், அபிசினியாவிலுள்ள இருவரையும், உரோம் தேசத்திலுள்ள எண்மரையும் குறித்து அருளப்பட்ட தென்றுஞ் சொல்லப்படுகிறது. இவர்கள் கிறிஸ்துவர்களாக இருந்து இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியவர்கள்.

إِنَّ اللّٰهَ سَرِيْعُ الْحِسَابِ **நிச்சயமாக அல்லாஹ் கணக்குப் பார்ப்பதில் தீவிரமானவன்** என்பதற்கு மனிதர்கள் கணக்கு வாங்கும் போது அவர்களுக்கு எழுதி வைக்கப்பட்ட ஏடுகளும் ஞாபகசக்தியும், யோசனையும் இருக்க வேண்டியது அவசியமாகும். அல்லாஹு சுப்ஹானஹு வத்தஆலாவிற்கு இவைகள் ஒன்றும் தேவை இல்லை. ஆகவே, மனிதர்கள் செய்த நன்மை தீமைகளைக் குறித்து அவர்களை

விசாரணை செய்து தீர்ப்புக் கூறுவதற்கு எந்தவிதக் காலதாமதமும் ஏற்படமாட்டாது. தவிரவும், நல்லோர்களுக்கு அவன் அளிப்பதாகக் கூறியுள்ள நற்பயன்களை உடனே அவன் மிக விரைவில் கொடுத்து விடுவான் என்பது கருத்து.

يَاأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اصْبِرُوْا وَصَابِرُوْا وَرَابِطُوْا ۖ وَاتَّقُوا اللّٰهَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ۝

199. விசுவாசங் கொண்டவர்களே! பொறுமையாக இருங்கள், (போர்க்களத்தில் பகைவரைப் பார்க்கினும்) அதிகப் பொறுமையாயிருங்கள். இன்னும் கட்டுங்கள், நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்.

اصْبِرُوْا **இஸ்பிரூ** அதாவது நீங்கள் பொறுமையாயிருங்கள் என்பது நோய், தரித்திரம், பஞ்சம், பயம், வணக்கஞ் செய்வதிலேற்படும் சங்கடம் முதலியவற்றைச் சகித்துக் கொள்வதையும் **ஸாபிரூ** அதாவது நீங்கள் அதிகப் பொறுமையாயிருங்கள் என்பது யுத்தங்களில் ஏற்படுகிற காயங்களைப் பகைவர்கள் சகித்துக் கொள்வதைப் பார்க்கினும் அதிகமாக பொறுமையாக இருக்க வேண்டுமென்பதையும் رَابِطُوْا **ராபித்தூ** அதாவது கட்டுங்கள் என்பது பகைவரை எதிர்த்து யுத்தஞ் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிற முறையில் உங்கள் குதிரைகளைக் கோட்டைகளில் கட்டி வைத்திருங்கள், இன்னும் வணக்கங்களில் உங்களது உடல்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள் என்பதையும் குறிக்கும். தவிரவும், சன்மார்க்க யுத்தத்திற்கு எந்நேரமும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும் என்பது **ராபித்தூ** என்ற பதத்தின் கருத்தாகும்.

عَنَ اَنَسِ بْنُ مَالِكْ رَضِىَ اللهِ عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى
اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ سَأَلَ اللهَ اَلْجَنَّةُ ثَلاَثَ مَرَّاتٍ قَالَتْ اَلْجَنَّةُ
اَللّٰهُمَّ اَدْخِلْهُ اَلْجَنَّةَ وَمَنْ اِسْتَجَارَمِنَ النَّارِ ثَلاَثَ مَرَّاتَ قَالَتِ

النَّارُ اَللّٰهُمَّ اَجِرْهُ مِنَ النَّارِ

ஹதீஸ்:- ஒருவர் தமக்குச் சுவர்க்கத்தைத் தரவேண்டுமென்று அல்லாஹுதஆலாவிடம் மூன்று முறை கேட்பாராயின், அந்தச் சுவர்க்கம் அல்லாஹு தஆலாவிடத்தில் "இறைவா! அவரை என்னில் பிரவேசிக்கச் செய்" என்று கூறும். ஒருவர் தம்மை நரகில் போடாமல் காப்பாற்ற வேண்டும் என்று அல்லாஹு தஆலாவிடத்தில் மூன்று முறை காவல் தேடுவாராயின் அந்த நரகம் அவரை என்னில் பிரவேசிக்கச் செய்ய வேண்டாம் என்று அல்லாஹு தஆலாவிடம் பிரார்த்திக்கும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆயத்தில் கூறியபடி நாம் அல்லாஹு தஆலாவிற்கு அஞ்சுவதுடன் நரகை விட்டுக் காக்கும்படியும் சுவர்க்கத்தை அளிக்கும்படியும் இறைவனை இறைஞ்சுவோமாக ஆமீன்.

மூன்றாவது சூரத்து ஆலஇம்ரான் முற்றுப் பெற்றது.

நான்காம் சூரத்து

சூரத்து அன்னிஸாஉ

இது மதீனாவில் இறங்கியது.

ஒரு நூற்று எழுபத்தேழு ஆயத்துகள் கொண்டது.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

(இம்மையில் யாவருக்கும்) கிருபை செய்பவனும், (மறுமையில் தன் நல்லடியார்களுக்கு மட்டும்) அருள் பாலிப்ப வனுமாகிய அல்லாஹ்வின் (திருப்) பெயரால் (இதனை ஓத ஆரம்பம் செய்கிறேன்).

يٰۤاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ مِّنْ
نَّفْسٍ وَّاحِدَةٍ وَّخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا
رِجَالًا كَثِيْرًا وَّنِسَآءً ۚ وَاتَّقُوا اللّٰهَ الَّذِىْ تَسَآءَلُوْنَ
بِهٖ وَالْاَرْحَامَ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلَيْكُمْ رَقِيْبًا ○

1. மனிதர்களே! உங்களுடைய ரப்பைப் பயப்படுங்கள்; அவன் உங்களை ஒரே ஒருவரிலிருந்து சிருஷ்டித்திருக்கிறான். இன்னும், அவரிலிருந்து அவரது ஜோடி (மனைவி) யைச்

சிருஷ்டித்தான். இன்னும், இவ்விருவரிலுமிருந்து ஏராளமான ஆண்களையும் பெண்களையும் பரவச் செய்தான். மேலும், (உங்களுக்கிடையில்) எவனைக் கொண்டு ஒருவருக்கொருவர் (உதவி) கேட்டுக் கொள்கின்றீர்களோ! அத்தகையோனாகிய அல்லாஹ் வையும், உறவினர்களையும் (பயப்பட்டுப்) பேணிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது (கண்காணிப்புச் செய்யும்) காவலனாக இருக்கின்றான்.

"மனிதர்களே" என்று இந்த ஆயத்தில் அழைக்கப்பட்டிருக்கிற அழைப்பானது இந்த ஆயத்து அருளப்பட்ட காலத்திலும் அதற்குப் பிறகும் உள்ள மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானது. அக்காலத்திற்கு முன்னிருந்தவர்களை இந்த விதி கட்டுப்படுத்தாது.

نَفْسٍ وَّاحِدَةٍ **நஃப்ஸின் வாஹிதத்தின்** அதாவது ஒரே ஒருவரிலிருந்து என்று கூறியதானது மனிதர்களுக்கு ஆதிபிதாவாகிய ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், زَوْجَهَا **ஸௌஜஹா** அதாவது அவரது ஜோடி என்றது ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களது மனைவியும் மனிதருக்கு தாயாருமான ஹளரத் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்களையும் குறிக்கின்றன.

ரிவாயத்து:- ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹுதஆலா சிருஷ்டித்து, அவர்களைச் சுவர்க்கத்தில் குடியேற்றிய போது அவர்களுக்கு தூக்கம் ஏற்படுத்தப்பட்டது. ஆகவே, அவர்கள் தூக்கத்திற்கும் விழிப்பிற்குமிடையில் இருக்கும் போது அவர்களது விலா எலும்பிலிருந்து ஹவ்வா அலைஹஸ்ஸலாம் அவர்களைச் சிருஷ்டித்தான். பின்னர், அவர்கள் துயிலெழுந்த போது தமக்கு அருகில் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் இருப்பதைக் கண்டு, அவர்கள்பால் சாய்ந்தார். இன்னும் அவர்களுடைய உறுப்புகளில் ஒரு உறுப்பிலிருந்து அவர்கள் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் பால் அன்பு கொண்டார் என்று ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இதனைப் பற்றிய முழு விபரம் சூரத்துல் பக்கராவில் 30வது ஆயத்திலிருந்து எழுதப்பட்டிருப்பது காண்க.

وَاتَّقُوا اللّٰهَ الَّذِىْ تَسَآءَلُوْنَ بِهٖ وَالْاَرْحَامَ **இன்னும், அல்லாஹ்வையும் உறவினர்களையும் (பயப்பட்டுப்) பேணிக் கொள்ளுங்கள்** என்ற இவ்வசனத்திற்கு வேறொரு விதமாகவும் அர்த்தஞ் செய்ய இடமுண்டு. **அதாவது இன்னும், அல்லாஹ்வை - அவனைக் கொண்டு நீங்கள் (ஒருவருக்கொருவர்) கேட்டுக் கொள்கிறீர்களே அவனை நீங்கள் பயந்து கொள்ளுங்கள். இன்னும் உறவினர்களை (நீங்கள் ஆதரியுங்கள்)** என்றும் அர்த்தங் கொள்ளலாம்.

ஒருவரிடத்தில் ஒரு பொருளை வாங்க வேண்டுமாயின் "அல்லாஹ்வைக் கொண்டு உன்னிடம் இதனைக் கேட்கிறேன், அல்லாஹ்வையும் பந்தத்துவத்தையும் கொண்டு இதனைக் கேட்கிறேன்" என்று கூறுவது அறபியரின் வழக்கம். ஆகவே, அறபியருக்குள்ள இவ்வழக்கத்தை இறைவன் நினைவூட்டி "நீங்கள் ஒருவருக்கொருவர் கேட்கும் போது அல்லாஹ்வையும் பந்தத்துவத் தையும் கூறுகிறீர்களல்லவா? அந்த அல்லாஹு தஆலாவிற்கு நீங்கள் அஞ்ச வேண்டும் என்றும், உறவினர்களை நீங்கள் ஆதரிக்க வேண்டும்" என்றும் இந்த ஆயத்தில் கட்டளை யிட்டிருக்கிறான்.

اَلرَّحْمَ مُعَلَّقَةٌ بِالْعَرْشِ تَقُوْلُ مَنْ وَصَلَنِيْ وَصَلَهُ اللّٰهُ وَمَنْ
قَطَعَنِيْ قَطَعَهُ اللّٰهُ

ஹதீஸ்:- பந்தத்துவமானது அர்ஷில் தொங்கிக் கொண்டு "எவர் என்னைச் சேர்த்து வைக்கிறாரோ அவரை அல்லாஹ் சேர்த்து வைப்பான். இன்னும் எவர் என்னை துண்டித்து விடுகிறாரோ அவரை அல்லாஹ் துண்டித்து விடுவான்" என்று கூறுகிறது என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

مَامِنْ عَمَلٍ حَسَنَةٍ اَسْرَعُ ثَوَابًا مِنَ صِلَةِ الرَّحْمِ وَمَامِنْ عَمَلٍ
سَيِّئَةٍ اَسْرَعُ عُقُوْبَةً مِنَ الْبَغْيِ

ஹதீஸ்:- "உறவினர்களைச் சேர்த்து வைப்பதற்குக் கிடைக்கிற

நற்பயனைப் பார்க்கினும் அதிக தீவிரமாக நற்பயனை அளிக்கிற நற்செயல் வேறு ஒன்றுமில்லை. இன்னும் (மீறிக்) கலகஞ் செய்வதைப் பார்க்கினும் அதிக தீவிரமாக வேதனையை அளிக்கக்கூடிய தீமை வேறு ஒன்றுமில்லை'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

ஆகவே, அடியார்கள் பிறருடைய உரிமைகளைப் பேணி நடந்து கொள்வது அவசியமாகும். ஏனெனில், எல்லா மனிதர்களும் ஹளரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஹவ்வா அலைஹஸ்ஸலாம் ஆகிய ஒரே தாய் தந்தையிலிருந்தே தோன்றியவர்கள். ஆதலின், முக்கியமாக மூமின்கள் இதர மூமின்களது உரிமைகளைக் கௌரவிப்பது அவசியமாகும். ஏனெனில், இவர்கள் ஒரே தாய் தந்தையரின் சந்ததியினராக இருப்பது மட்டுமில்லாமல் ஒரே மார்க்கத்தையும் கொள்கைகளையும் கடைப்பிடிப்பவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

அத்தக்வா என்பதற்கு மறுமையில் தனக்குத் தீங்கு செய்யக் கூடியதை விட்டுத் தன்னைத் தடுத்துக் கொள்ளல் என்பது ஷரீஅத்தின் பொதுப்படையான விளக்கம். இதில் பல அந்தஸ்துகள் இருக்கின்றன. முதலாவது ஷிர்க்கை விட்டு நீங்கிக் கொள்வதன் மூலமாக நிரந்தரமான வேதனையைத் தவிர்த்துக் கொள்ளல். இரண்டாவது சகலவிதமான பாவங்களையும் விட்டு விலகிக் கொள்ளல். இந்தக் கருத்துக்கள்தான் தக்வா என்ற பதத்திற்குப் பெரும்பாலும் கொள்ளப்படுகின்றன. மூன்றாவது அல்லாஹுதஆலாவை மறக்கச் செய்கிற சகல காரியங்களையும் தவிர்த்துக் கொள்ளல். இதுதான் தக்வா என்ற பதத்திற்கு யதார்த்தமாகவுள்ள அர்த்தமும் கருத்துமாகும்.

ஹதீஸ்:- ''உறவினர்களை ஆதரித்து நடந்தவர் அல்லாஹு தஆலாவினுடைய அர்ஷின் நிழலின் கீழ் இருப்பார். அவருக்கு வாழ்வும் பரக்கத்தும் அதிகமாக்கப்படும்'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

''உறவினர்களை ஆதரிக்காமல் இருப்பவர் இருக்கும் இடத்தில்கூட நீங்கள் நிற்கவேண்டாம். ஏனெனில், உறவினர்களை

ஆதரிக்காமலிருப்பவர்களை அல்லாஹுதஆலா திருக்குர்ஆனில் மூன்றிடங்களில் சபித்திருக்கிறான்'' என்று வலிமார்களிலொருவர் கூறி இருக்கிறார்.

وَاٰتُوا الْيَتٰمٰۤى اَمْوَالَهُمْ وَلَا تَتَبَدَّلُوا الْخَبِيْثَ
بِالطَّيِّبِ ۖ وَلَا تَاْكُلُوْۤا اَمْوَالَهُمْ اِلٰۤى اَمْوَالِكُمْ ۚ
اِنَّهٗ كَانَ حُوْبًا كَبِيْرًا ۝

2. மேலும், அனாதைகளுக்கு அவர்களுடைய பொருள்களைக் கொடுத்து விடுங்கள். இன்னும், நல்லதுக்குப் பதிலாகக் கெட்டதை மாற்றாதீர்கள். இன்னும், (அனாதைகளாகிய) அவர்களுடைய பொருட்களை உங்களுடைய பொருள்களுடன் (சேர்த்து) உண்ணாதீர்கள். நிச்சயமாக இது பெரும் பாவமாக இருக்கிறது.

பனூகத்ஃபான் கபீலாவைச் சேர்ந்த ஒருவரிடம் அவரது சகோதரரின் புதல்வராகிய அனாதையுடைய ஏராளமான பொருள்கள் சேர்ந்திருந்தன. அவ்வனாதை பருவ வயதை அடைந்தபோது தமது சிறிய தந்தையிடம் கேட்டார். அதனைக் கொடுக்க அவர் மறுத்தார் ஆகவே, இருவரும் இவ்விபரத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறி, புகார் செய்தனர். அப்போது இந்த ஆயத்து அருளப்பட்டது. அவ்வனாதையின் சிறிய தந்தை இந்த ஆயத்தைச் செவிமடுத்துக் கேட்டவுடன் ''அல்லாஹு தஆலாவிற்கும் கீழ்ப்படிந்தோம், அவனது தூதர் அவர்களுக்கும் கீழ்ப்படிந்தோம், பெரிய பாவத்தை விட்டு அல்லாஹுதஆலாவிடம் காவல் தேடுகிறோம்'' என்று கூறி அந்தப் பொருள்களைத் தமது சகோதரரின் புதல்வருக்குக் கொடுத்து விட்டார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த மனிதரைக் குறித்து ''எவர் இவ்விதமாகத் தனது நஃப்ஸின் பேராசையைக் காப்பாற்றிக் கொண்டு தனது றப்புக்குக் கீழ்ப்படிந்தாரோ நிச்சயமாக அவர் தனக்குரிய வீட்டை

(அதாவது சுவர்க்கத்தை) அடைந்து விடுவார்" என்று கூறினார்கள். அந்த அனாதை தமது பொருள்களை வாங்கி உடனே தர்மம் செய்து விட்டார். அப்பொழுது அவரைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நற்கூலி ஏற்பட்டது பாவமும் உறுதியாயிற்று" என்று கூறினார்கள். இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "எவ்விதமாகப் பாவம் உறுதியாயிற்று?" என்று கேட்டதற்கு "அவ்வாலிபருக்கு நற்கூலி (தர்மஞ் செய்ததால்) ஏற்பட்டது. அவருடைய தந்தைக்குப் பாவம் உறுதியாயிற்று" என்று கூறினார்கள்.

யத்தாமா என்ற அறபிப் பதம் **யத்தீம்** என்ற பதத்திற்குப் பன்மைச் சொல்லாகும். **யத்தீம்** என்ற பதத்தை மனிதரில் உபயோகிக்கும் போது தந்தையின் மரணத்தால் தந்தையை விட்டுப் பிரிந்தவருக்குச் சொல்லப்படும். இதில் தந்தையை இழந்தவர் சிறியவராகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சிறியவராயினும் பெரியவராயினும் தந்தையை இழந்தவர்களுக்கு இப்பதத்தை உபயோகிக்கலாம். என்றாலும், தந்தையை இழந்த சிறியார்களுக்குத்தான் இப்பதம் அதிகமாக உபயோகிக்கப் படுகிறது. பெரியவர்கள் தங்களை சம்ரட்சணை செய்வ(பராமரிப்ப)தற்குப் பிறரை எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இல்லாதிருப்பதால் அவர்களுக்கு இந்தப் பதத்தை உபயோகிப்பதில்லை. மிருகங்களில் தாயை இழந்த கன்றுகளுக்கு யத்தீம் என்று சொல்லப்படும்.

وَاٰتُوا الْيَتٰمٰٓى اَمْوَالَهُمْ **"அனாதைகளுக்கு அவர்களுடைய பொருள்களைக் கொடுத்து விடுங்கள்"** என்பதற்கு அனாதைகளுக்கு அவர்களது பொருள்களைக் கொடுத்து விட்டு அவர்களைக் கவனிக்காமலும் மேற்பார்க்காமலும் இருந்துவிட வேண்டும் என்பது கருத்தல்ல. அனாதைகளின் பொருள்களைக் காப்பாற்றி வைத்திருந்து அவர்கள் பருவ வயதையடைந்த பிறகு அவர்களிடம் அவற்றை ஒப்படைத்து வேண்டும் என்பது கருத்து.

وَلَا تَاْكُلُوْٓا اَمْوَالَهُمْ اِلٰٓى اَمْوَالِكُمْ **உங்களது பொருள்களுடன் அவர்களது பொருள்களைச் சேர்த்து உண்ணாதீர்கள்** என்ற அவ்விலக்கலானது அனாதைகளது பொருள்களைத் தங்களது

பொருள்களுடன் சேர்த்து உண்ணக் கூடாது என்பது மட்டுமல்ல, அனாதைகளது பொருள்களை எவ்விதத்திலும் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என்பது கருத்து.

கெட்டது என்பது இங்கு அனாதையின் பொருள்களைக் குறிக்கும். அனாதைகளது பொருள்களை நியாயமின்றி எடுத்துக் கொள்வது ஹராமாகும். ஆகவே, ஹராமான முறையில் இந்தப் பொருள்களை எடுப்பதால் அதற்கு கெட்டது என்ற பெயர் ஏற்பட்டது. **நல்லது** என்பது தங்களது சொந்தப் பொருள்களைக் குறிக்கும். தங்களது சொந்தப் பொருள்களை நியாயமான முறையில் சம்பாதித்திருப்பதால் அதற்கு நல்லது என்ற பெயர் வந்தது.

مَنْ يُوْقَ شُحَّ نَفْسِهٖ وَيُطِعْ رَبَّهُ هٰكَذَا فَاِنَّهُ يَحُلُّ دَارَهُ يَعْنِي
جَنَّتَهُ فَلَمَّا قَبَضَ الْفَتَيْ مَالَهُ اَنْفَقَهُ فِي سَبِيْلِ اللّٰهِ فَقَالَ عَلَيْهِ
السَّلَامُ ثَبَتَ الْاَجْرُ وَبَقِيَ الوِزْرُ فَقَالُوْا كيف بَقِيَ فَقَالَ
ثَبَتَ الْاَجْرُ لِلْغُلَامِ وَبَقِيَ الْوِزْرُ عَلٰى وَالده

ஹதீஸ்:- அனாதைகளை அடித்து அவர்கள் அழுவதால் அல்லாஹு தஆலாவின் அர்ஷும் நடுங்கிவிடும். அப்பொழுது அல்லாஹு தஆலா மலக்குகளை நோக்கி "நான் அவர்களது தந்தையரை மண்ணில் மறைத்திருக்கிறேனல்லவா? அவர்களை அழும்படி செய்தது யார்?" என்று வினவுவான். அப்பொழுது அவர்கள் "நாங்களறியோம்" என்று கூறுவார்கள். அதற்கு அல்லாஹு தஆலா "அவர்களைப் பிரியப்படுத்துவோரை நான் கியாமத்து நாளில் பிரியப்படுத்துவேன். இதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்" என்று கூறுவான்.

ஹளரத் தாவூத் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் அல்லாஹு தஆலா "தாவூதே! நீர் அனாதைக்கு இரக்கமுள்ள தந்தையைப் போலிருக்க வேண்டும்" என்று கூறியுள்ளான்.

ரிவாயத்து:- கியாமத்தில் சில வகை மனிதர்கள் அல்லாஹு தஆலாவின் அர்ஷின் நிழலில் இருப்பார்கள். அவர்களில் ஒரு வகையினர் சிறு குழந்தைகளை விட்டு விட்டு இறந்து போனவரின் மனைவியர். (அதாவது அனாதைக் குழந்தைகளின் விதவையான தாய்) அவளை மறுமணம் செய்து கொள்வதற்காகச் சம்மதம் கேட்கும் போது "என் குழந்தைகளுக்கு என்பால் தேவை இல்லாத நிலை ஏற்படவேண்டும் அல்லது அவர்களை அல்லாஹுதஆலா இறக்கச் செய்து விட வேண்டும். அது வரை நான் மறுமணம் செய்யேன்" என்று கூறி மறுமணத்தை மறுத்த விதவைத் தாய்மார்கள்.

وَإِنْ خِفْتُمْ أَلَّا تُقْسِطُوا فِي الْيَتَامَىٰ فَانكِحُوا مَا طَابَ
لَكُم مِّنَ النِّسَاءِ مَثْنَىٰ وَثُلَاثَ وَرُبَاعَ ۖ فَإِنْ خِفْتُمْ أَلَّا
تَعْدِلُوا فَوَاحِدَةً أَوْ مَا مَلَكَتْ أَيْمَانُكُمْ ۚ ذَٰلِكَ أَدْنَىٰ
أَلَّا تَعُولُوا ۝

3. மேலும், அனாதை(களைப் போஷிக்கும்) விஷயத்தில் நீதி செய்யமாட்டீர்களென்று நீங்கள் பயந்தால் (பெண்களை திருமணம் செய்து கொள்வதிலும் அவ்வாறே பயப்படுங்கள்). எனவே, நீங்கள் உங்களுக்கு மனமுள்ள பெண்களில் இரண்டிரண்டாகவும், மும்மூன்றாகவும், நவ்வாலாகவும் மணந்து கொள்ளுங்கள். (இவர்களுக்கிடையில் நீங்கள்) நீதி செய்ய மாட்டீர்கள் என்று பயந்தால், அப்பொழுது ஒருவளை (மட்டும் திருமணம் செய்து கொள்ளுங்கள்) அல்லது உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டதை (அதாவது அடிமைப் பெண்களை வைத்துக் கொள்ளுங்கள்) இது நீங்கள் அநீதி செய்யாதிருக்க மிக நெருங்கியதாகும்.

பயந்தால் என்பதற்கு உண்மையிலேயே பயப்பட வேண்டும் என்பது கருத்தல்ல. அனாதைகளுக்கிடையில் நீதி செய்ய மாட்டீர்கள் என்பதை நீங்கள் அறிந்தீர்களானால் என்பது கருத்தாகும்.

மேலும், "உங்களுடைய பொருள்களுடன் (சேர்த்து) அவர்களுடைய பொருள்களை நீங்கள் எண்ணாதீர்கள்" என்ற ஆயத்து அருளப்பட்ட பிறகு அனாதைகளது பொருள்களுக்கு பாதுகாப்பாளர்களாக இருப்பதைப் பற்றி முஸ்லிம்கள் மிகவும் சிரமப் பட்டார்கள். ஆனால், அவர்கள் பத்து, எட்டு என்று பல தாரங்களை மணந்திருந்ததுடன் தங்கள் மனைவியருக்கிடையில் நீதியாக நடந்து கொள்வதுமில்லை. ஆதலின், அவர்களை நோக்கி "அனாதைகளிடம் நீங்கள் நீதியாக நடந்து கொள்ள முடியாவிடில், உங்களது மனைவியர்களுக்கு நீங்கள் எவ்வாறு நீதி செய்ய முடியும்? ஆகவே, அவர்களுக்கு நீதி செய்ய முடியாதிருப்பதைப் பயந்து இரண்டு, மூன்று, நான்கு மனைவியரை மணந்து கொள்ளுங்கள். அதற்கு மேல் அதிகமாக திருமணம் செய்து கொள்ள வேண்டாம். இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு மனைவியருக்கிடையிலும் நீதியாய் நடந்து கொள்ள முடியாது என்று நீங்கள் உணர்ந்தால் ஒரு பெண்ணை மட்டும் மணந்து கொள்வதுடன், உங்களது அடிமைப் பெண்களிடத்தில் நீங்கள் கூடி வாழ்ந்து கொள்ளுங்கள்" என்ற விபரம் இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ரிவாயத்து:- ஹளரத் உர்வா ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் தமது தாயின் சகோதரியான உம்முல் மூமினீன் ஹளரத் ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்களிடம் இந்த ஆயத்திற்கு விரிவுரை என்ன என்பதைக் குறித்து விசாரித்தார்கள் அதற்கு உம்முல் மூமினீன் ஹளரத் ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் "ஒரு அனாதைப் பெண் ஆடவரிடம் பாதுகாப்பதற்காக ஒப்படைக்கப்பட்டு, அந்தப் பெண்ணின் அழகு அவரது மனதிற்கு உகந்ததாக இருப்பின் அந்தப் பெண்ணை அவ்வாடவர் மணந்து கொள்ளவும், அந்தப் பெண்ணை வேறொருவருக்கு திருமணம் செய்து கொடுத்தால் அவளுக்குக் கிடைக்கக் கூடிய மஹர் தொகையைக் கொடுக்காமலிருக்கவும் விரும்புவார். ஆகவே, இவ்விதமான நினைவு இந்த ஆயத்தின் மூலமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார்கள் என்று ஸஹீஹுல் புகாரியில் ஒரு ரிவாயத்து எழுதப்பட்டிருக்கிறது.

وَاٰتُوا النِّسَآءَ صَدُقٰتِهِنَّ نِحْلَةً ۚ فَاِنْ طِبْنَ لَكُمْ عَنْ
شَىْءٍ مِّنْهُ نَفْسًا فَكُلُوْهُ هَنِيْٓـًٔا مَّرِيْٓـًٔا ﴿۴﴾

4. மேலும், பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக் கட்டண)த் தொகையை பிரதி பலனில்லாமல் கொடுத்து விடுங்கள். எனவே, அப்பெண்கள் அதி (அந்த மஹரி) லிருந்து ஒரு பொருளைத் தாங்களாகவே உங்களுக்கு அளித்தால், அதைச் சந்தோஷமாகவும் தாராளமாகவும் புசியுங்கள்.

தங்கள் மனைவியருக்குக் கொடுத்தவைகளிலிருந்து எதையேனும் அவர்களிடமிருந்து வாங்குவது பாவம் என்று சிலர் நினைத்துக் கொண்டிருந்தார்கள். இதனைக் குறித்து இந்த ஆயத்து அருளப்பட்டது. பெண்கள் மனப்பூர்வமாக தங்கள் மஹர்த் தொகையிலிருந்து கொடுத்தால் அதனை அவர்களது கணவர்கள் வாங்கிக் கொள்வதற்கு எவ்விதத் தடையுமில்லை, பாவமுமில்லை என்பது இந்த ஆயத்தின் கருத்து.

وَلَا تُؤْتُوا السُّفَهَآءَ اَمْوَالَكُمُ الَّتِىْ جَعَلَ اللّٰهُ
لَكُمْ قِيٰمًا وَّارْزُقُوْهُمْ فِيْهَا وَاكْسُوْهُمْ وَقُوْلُوْا
لَهُمْ قَوْلًا مَّعْرُوْفًا ﴿۵﴾

5. இன்னும், அல்லாஹ் உங்களுக்கு ஆதாரமாக ஆக்கி இருக்கிற உங்கள் முதல்களை (நல்ல வழியில் செலவு செய்யும் ஆற்றலற்ற) மூடர்களுக்குக் கொடுக்காதீர்கள். ஆனால், அவர்களுக்கு அவற்றி(ன் வருவாயி)லிருந்து உணவளியுங்கள்; இன்னும், அவர்களுக்கு ஆடையளியுங்கள்; இன்னும், அவர்களுக்கு நல்ல வார்த்தையைச் சொல்லுங்கள்.

السُّفَهَآءَ அஸ்ஸுஃபஹாஉ என்பதற்கு அறிவிலிகள்

மடையர்கள் என்பது பொருள். என்றாலும், இந்த ஆயத்தில் அப்பதத்திற்கு பணத்தை வீணாக விரயஞ் செய்யாமல் காப்பாற்றி வைத்துக் கொள்ளத் தெரியாதவர்கள் என்பது கருத்து. ஆகவே, இந்தப் பதம் வீண் செலவு செய்கிற ஆண், பெண், குழந்தைகள், அனாதைகள் ஆகியவர்களைக் குறிக்கும்.

اَمْوَالَكُمْ அம்வாலக்கும் அதாவது உங்களது பொருள்கள் என்றது அனாதைகளது பொருள்களையே குறிக்கிறது. அனாதைகளைப் போஷணை செய்து வருகிறவர்களுக்கும் அனாதைகளுக்கு மிடையில் நெருங்கிய உறவும் பந்தத்துவமுமிருப்பதால் அனாதைகளுடைய பொருள்களை உங்களது பொருள்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

இறைவன் செல்வத்தை மனிதருக்கு ஆதாரமாக ஏற்படுத்தி இருப்பதால் பணத்தைக் காப்பாற்றி வைக்கத் தெரியாமல் வீண் செலவு செய்யக் கூடியவர்களிடம் அதனை ஒப்படைத்துவிடாமல் அவர்களுக்கு அன்னவஸ்திர மளிப்பதுடன், அவர்களுக்கு நல்ல அறிவுரைகளைக் கூறவும், செல்வத்தைக் காப்பாற்றி வைக்க வேண்டியதற்கான முறைகளைக் கூறவும் வேண்டும் என்று இந்த ஆயத்தில் கூறப்பட்டிருக்கிறது.

தவிரவும், இந்த ஆயத்தில் பொருளின் அவசியத்தையும், பொருளில்லாவிட்டால் ஏற்படக்கூடிய கஷ்டத்தையும் சமிக்ஞை செய்யப்பட்டிருக்கிறது. எனவேதான், முற்காலத்திலுள்ள பெரியோர்கள் "பொருள் மூமின்களுக்கு ஆயுதமாகும். அவர்களுடைய மார்க்க பக்திக்கு அழிவை உண்டு பண்ணும் படியான தரித்திரத்தை விட்டுக் காப்பாற்றிக் கொள்வதற்காக அது தயார் செய்யப் பட்டிருக்கிறது" என்று கூறி இருக்கிறார்கள். மேலும், "நீங்கள் வியாபாரஞ் செய்யுங்கள், சம்பாதியுங்கள், ஏனெனில், நீங்கள் ஒரு காலத்தில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். இக்காலத்தில் உங்களில் ஒருவர் தேவையுள்ளவராக அதாவது தரித்திரராக ஆகிவிட்டால் அவருடைய மார்க்க பக்தியைத்தான் அவர் முதலாவதாகத்தின்று விடுவார்" என்றும் கூறிக் கொண்டிருந்தனர். தவிரவும், ஜனாஸாவிற்காக மனிதர்கள்

வந்திருக்கும் போது அந்தக் கூட்டத்திலுள்ள சிலரை நோக்கி "உமது கடைக்கு நீ போ" என்றும் கூறுவார்கள்.

மேலும், அல்லாஹு தஆலா பொருளைக் காப்பாற்றி வைக்க வேண்டும் என்பதைக் குறித்து மனிதர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறான். எனவேதான் சூரத்துல் பக்கராவிலுள்ள 'ஆயத்து முதாயனா' என்ற பெயருள்ள 282வது ஆயத்தில் பொருளைக் கடனாகக் கொடுத்தால் அதனை எழுதி வைத்துக் கொள்ளும்படியும் சாட்சிகளை ஏற்படுத்தும்படியும், சாட்சிகள் இல்லாத பட்சத்தில் ஈடுவாங்கும் படியும் கூறி இருக்கிறான். மனிதன் கவலையற்றவனாக இருந்தால்தான் அவன் இம்மையையும் மறுமையையும் அடையும் விஷயத்தில் அவன் ஸ்திரமாக இருக்க முடியும். மனக்கவலை யுண்டாகி விட்டால் அவனுக்கு உறுதியும் ஸ்திரமும் இல்லாதொழிந்து விடும். தீமையை விலக்குவதற்கும் லாபத்தை அளிப்பதற்கும் பொருள் முக்கிய உதவியாக இருப்பதால் மனக்கவலையை மாற்றுவது பொருள் இல்லாமல் முடியாது. ஆகவே, இந்த நோக்கத்தின் பேரில் ஒருவர் செல்வம் தேடுவாராயின் அவர் மறுமைப் பேற்றைச் சம்பாதிப்பதற்கு இந்தச் செல்வம் முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்து விடுகிறது. தனது பேராசையின் காரணமாகச் செல்வத்தைத் தேடுவாராயின் மறு உலகப் பேற்றைச் சம்பாதிப்பதை விட்டு அவனை ஒதுக்கி விடுங் காரியங்களில் இது முக்கியமானதாக ஆகிவிடுகிறது என்று இமாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

وَابْتَلُوا الْيَتٰمٰى حَتّٰٓى اِذَا بَلَغُوا النِّكَاحَ ۚ فَاِنْ اٰنَسْتُمْ مِّنْهُمْ
رُشْدًا فَادْفَعُوْٓا اِلَيْهِمْ اَمْوَالَهُمْ ۚ وَلَا تَاْكُلُوْهَآ اِسْرَافًا
وَّبِدَارًا اَنْ يَّكْبَرُوْا ۗ وَمَنْ كَانَ غَنِيًّا فَلْيَسْتَعْفِفْ ۚ
وَمَنْ كَانَ فَقِيْرًا فَلْيَاْكُلْ بِالْمَعْرُوْفِ ۗ فَاِذَا
دَفَعْتُمْ اِلَيْهِمْ اَمْوَالَهُمْ فَاَشْهِدُوْا عَلَيْهِمْ ۗ

وَكَفٰى بِاللّٰهِ حَسِيْبًا ۝

6. இன்னும், அனாதைகளை – அவர்கள் திருமண வயதை அடையும் வரை (அவர்கள் தங்கள் பொருள்களைக் காப்பாற்றவும் அபிவிருத்தி செய்யவும் அறிவுள்ளவர்களாக இருக்கின்றனரா? என்று) சோதனை செய்யுங்கள்; (அவர்களைப் பராமரிப்புச் செய்து) அவர்களில் நின்றும் (தனது காரியத்தைத் தானே செய்து கொள்ளக் கூடிய) ஒரு யோக்கியதையை நீங்கள் தெரிந்தால், அவர்களிடம் அவர்கள் பொருள்களைக் கொடுத்து விடுங்கள்; மேலும், அவர்கள் பெரியவர்களாகி விடுவார்கள். (தங்கள் பொருள்களை ஒப்புவிக்கும்படி கேட்பார்கள்) என்பதற்காகப் (பயந்து) அனாவசியமாகவும், அவசரமாகவும் அவற்றைப் புசியாதீர்கள். இன்னும், (அனாதைகளைப் போஷிப்பவர்களில்) எவர் செல்வந்தராக இருக்கின்றாரோ அவர் (அவ்வனாதைகளின் பொருளைச் சொந்த உபயோகஞ் செய்யாமல்) பேணவேண்டும். இன்னும், எவர் ஏழையாக இருக்கின்றாரோ அவர் முறைப்படி (நியாயமாக அதிலிருந்து) உண்ணட்டும். எனவே, (அனாதைகளான) அவர்களிடம் அவர்களின் பொருள்களை நீங்கள் ஒப்புவித்தால், அவர்கள் மீது சாட்சி ஏற்படுத்துங்கள். மேலும், அல்லாஹ் கணக்கு வாங்குபவனில் போதியவன்.

அனாதைக் குழந்தைகளைப் போஷிப்பவர்கள் அந்தக் குழந்தைகள் பருவ வயதை அடைவதற்கு முன்னதாகவே அவர்களிடம் சொற்ப பொருள்களை ஒப்புவித்துத் தங்களது அலுவல்களில் ஈடுபடுத்தி அவர்கள் வீண் விரயம் செய்கிறவர்களா? பொருள்களைக் காப்பவர்களா? என்பதைப் பற்றி அவர்களைப் பரிசீலனை செய்து பயிற்சி யளிக்க வேண்டும். பிறகு, அவர்கள் திருமணம் செய்வதற்குத் தகுந்த பருவ வயதை அடைந்து, அவர்களிடம் மார்க்க பக்தி, பொருள்களைக் காத்தல் முதலியவற்றைப் பற்றிய திருத்தம் இருப்பதாகத் தெரிந்தால் அவர்களுடைய பொருள்களை அவர்களிடம் ஒப்புவித்து விட வேண்டும். அவ்வனாதைகள் பெரியவர்களானால் தங்களது பொருள்களைத்

தங்களிடம் ஒப்புவிக்கும்படி கேட்பார்கள் என்று நினைத்து அவசரமாக அவற்றைச் செலவு செய்யக் கூடாது. மேலும் அனாதைகளைப் போஷிப்பவர் செல்வந்தராக இருந்தால் அனாதைகளது சொத்திலிருந்து எதையும் தங்களது சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். ஏழையாக இருந்தால் இஸ்லாமிய ஷரீஅத்தில் கூறப்பட்ட சட்டப்படி தனக்குப் போதுமான அளவு எடுத்துக் கொள்ளலாம். அனாதைகள் பெரியவர்களான பிறகு அவர்களிடம் அவர்களது பொருள்களை ஒப்படைத்தால் அதற்காகச் சாட்சிகளையும் ஏற்படுத்த வேண்டும் என்பன இந்த ஆயத்திற் கூறப்பட்ட விதிகளாகும்.

وَلَا تَأْكُلُوْهَا إِسْرَافًا இன்னும் அவற்றை வீணாக **உண்ணாதீர்கள்** என்பதற்கு அனாதைகளின் முதல்களைப் புசிப்பது வீணான காரியம் என்பது கருத்து. மேலும், அந்தப் பொருள் களிலிருந்து சொற்பமாகப் புசிப்பது குற்றமில்லை என்பதும் அதிகமாக வீணாகப் புசிப்பதுதான் குற்றமென்பதும் கருத்தல்ல.

அறிந்துகொள்:- பொதுவாக பிறருடைய உரிமையை விட்டு விலகி இருப்பதும், முக்கியமாக அனாதைகளது உரிமையை விட்டு விலகி இருப்பதும் அறிவுடையோரின் செய்கையாகும். ஏனெனில், பிறரது உரிமையை அபகரிப்பதானது நரகத்தின்பால் அவரை இழுத்துச் செல்லும். மேலும், பிறரது உரிமையைப் புசிப்பது பெரும் பாவங்களிலொன்றாகும். ஆகவே, அடியார்களது உரிமைகளிலிருந்து ஒன்றை அபகரித்த குற்றத்தைச் செய்தவர் கேள்வி கணக்குக் கேட்கப்படுகிற உலகிற்கு செல்வதற்கு முன் அதனைக் குறித்து பொருத்தம் தேடிக் கொள்வது அவசியமாகும். ஏனெனில் “எவர் தனது சகோதரருக்கு அநீதி செய்திருக்கிறாரோ அல்லது அவருடைய ஒரு பொருளை வைத்துக் கொண்டிருக்கிறாரோ அவர் தீனாரும் திர்ஹமும் இல்லாமற் போவதற்கு முன்னதாக இன்றைய தினமே அந்தச் சகோதரரிடம் பொருத்தந் தேடிக் கொள்ள வேண்டும். அவ்வாறு பொருத்தம் தேடிக் கொள்ளாமலிருந்தால் அவருடைய நற்செயல் களிலிருந்து அவ்வநீதிக்குத் தக்கவாறு பரிகாரம் செய்யப்படும்.

அவருக்கு நற்செயல்கள் இல்லையானால் அநீதி செய்யப்பட்டவரது தீமைகளிலிருந்து அநீதி செய்தவருக்குச் சிலவற்றைக் கொடுத்துப் பரிகாரம் செய்யப்படும். ஆனால், ஒருவர் தனது பாவங்களுக்காகத் தவ்பாச் செய்து பல அநீதிகளைச் செய்தவராக இருந்து அநீதி செய்யப்பட்டவர்கள் இன்னின்னார் என்று தேடிக் கண்டுபிடித்து அவர்களிடம் பொருத்தம் தேடிக் கொள்வது சிரமமாக இருக்குமாயின், அவர் கியாமத்து நாளில் தனக்கு உதவியாக இருப்பதற்காக ஏராளமான நன்மைகளைச் செய்து கொள்ள வேண்டும். இன்னும் அநேகம் நன்மைகளைக் கலப்பற்ற இக்லாஸுடனே அல்லாஹு தஆலாவிற்கும் தனக்கும் மட்டும் தெரியும் வண்ணமாக அவ்வளவு இரகசியமாகவும் செய்ய வேண்டும். இந்த வணக்கங்கள் அவனை அல்லாஹ்விடத்தில் நெருங்கியவனாக ஆக்கக்கூடும். இதனைக் கொண்டு ஈமான் கொண்டவர்கள் தங்களால் அநீதி செய்யப்பட்ட அடியார்களை சமாதானம் செய்து கொள்வதற்கு இறைவனது உள்ளன்பு ஏற்படக் கூடும்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஆகவே, அநீதி செய்தவர்கள் தங்களது அநீதியை விட்டுத் தவ்பாச் செய்வதுடன் அநீதி செய்யப்பட்டவரை இவ்வுலகிலேயே சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்து கொள்ள இயலவில்லையானால், அவ்வநீதி செய்யப்பட்டவருக்குப் பிழை பொறுக்கும்படி இறைவனிடம் துஆச் செய்ய வேண்டும்.

“திருக்குர்ஆனிலிருந்து ஒரு ஆயத்தை ஓதி அதன்படி நடப்பதானது பத்து லட்சம் முறை திருக்குர்ஆனை சுத்தம் செய்வதைப் பார்க்கினும் எனக்கு அதிகப் பிரியமானது, மூமின்களைச் சந்தோஷப் படுத்துவதும் அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதும் வயது முழுவதிலும் வணக்கம் புரிவதைப் பார்க்கினும் எனக்கு அதிகப் பிரியமானது, உலகத்தைத் துறந்து உதறித் தள்ளுவதானது வானங் களிலும் பூமியிலுமுள்ளவர்கள் புரியும் வணக்கங்களைப் போல் வணங்குவதைப் பார்க்கினும் எனக்கு அதிகப் பிரியமானது” என்று ஃபுலைலுப்னு இயால் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

"இஸ்லாம் மார்க்கத்திலிருப்பதைக் குறித்து நன்றி செலுத்தாமலிருத்தல், இஸ்லாம் மார்க்கத்தை விட்டு விலகி விடுவோமே என்று பயப்படாதிருத்தல், இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியவர்களுக்கு அநீதி செலுத்தல் ஆகிய மூன்று காரியங்களும் ஈமானைப் போக்கி விடும்'' என்று அபுல்கலாமில் ஹக்கீம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறி இருக்கிறார்கள்.

لِلرِّجَالِ نَصِيبٌ مِّمَّا تَرَكَ الْوَالِدَانِ وَالْأَقْرَبُونَ
وَلِلنِّسَاءِ نَصِيبٌ مِّمَّا تَرَكَ الْوَالِدَانِ وَالْأَقْرَبُونَ
مِمَّا قَلَّ مِنْهُ أَوْ كَثُرَ ۚ نَصِيبًا مَّفْرُوضًا ۝

7. பெற்றோர்களும், உறவினர்களும் விட்டுப்போனதிலிருந்து ஆண்களுக்குப் பாகமிருக்கிறது; இன்னும், (இது போலவே) பெற்றோர்களும் உறவினர்களும் விட்டுப்போனதிலிருந்து அது குறைந்திருந்தாலும் கூடுதலாக இருந்தாலும் பெண்களுக்கும் பங்கிருக்கிறது. (இதை அல்லாஹ்) விதிக்கப்பட்ட பாகமாக (ஏற்படுத்தியுள்ளான்).

ரிவாயத்து:- அவ்ஸுப்னுஸாமித்தில் அன்ஸாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஒரு மனைவியையும் மூன்று பெண் மக்களையும் விட்டு விட்டு இறந்து போனார்கள். அவரது சிறிய தந்தையின் புதல்வர்கள் வந்து மானத்தைக் காத்து யுத்தத்திற்குச் செல்பவர்கள்தான் அனந்தரபாத்தியமடையத் தகுதியுள்ளவர்கள், குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் அனந்தரபாத்தியமில்லை என்று கூறி அவ்ஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்களைக் கைப்பற்ற வாரம்பித்தார்கள். இஸ்லாம் மார்க்கம் தோன்றுவதற்கு முன்னருள்ள ஜாஹிலியத்தான அறியாமைக் காலத்தில் இவ்வாறு கைப்பற்றிக் கொள்வது வழக்கம். ஆனால், அவ்ஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது மனைவி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து இதனைக்

குறித்து முறையிட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இது சம்மந்தமாக அல்லாஹுதஆலா கூறுவது என்னவென்பதைக் கவனிப்போம்'' என்று கூறி அனுப்பி விட்டார்கள்.அப்பொழுது இந்த ஆயத்து அருளப்பட்டது. உடனே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களை அழைத்து "பெண்களுக்கும் பங்கிருப்பதாக அல்லாஹு தஆலா கூறி இருக்கிறான். ஆனால், பங்கின் விபரம் தெரியவில்லை. ஆதலால், அனந்தரச் சொத்தை எடுத்தவர்கள் அதனைப் பிரித்துக் கொள்ளலாகாது'' என்று கூறி அனுப்பினார்கள். பிறகு இந்த அத்தியாயத்திலுள்ள 11 வது ஆயத்தாகிய **அல்லாஹ் உங்களுக்கு வஸிய்யத்துச் செய்கிறான்** என்ற ஆயத்து அருளப்பட்டது. அப்பொழுது அவ்ஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களது மனைவிக்கு எட்டிலொரு பாகமும், அவரது பெண்மக்களுக்கு மூன்றிலிரண்டு பாகமும், பாக்கியுள்ளவை அவரது சிறிய தந்தையின் மக்களுக்கும் கொடுக்கப்பட்டது.

الْأَقْرَبُونَ **அல்அக்ரபூன** என்பதற்கு நெருங்கிய உறவினர்கள். அதாவது அனந்தரப்பாத்திய மடையக் கூடிய உறவினர்கள் என்பது கருத்து. ஆகவே, பெற்றோர்கள், மனைவியர், மக்கள், கணவன் முதலியவர்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்.

وَإِذَا حَضَرَ الْقِسْمَةَ أُولُو الْقُرْبَىٰ وَالْيَتَامَىٰ وَالْمَسَاكِينُ
فَارْزُقُوهُم مِّنْهُ وَقُولُوا لَهُمْ قَوْلًا مَّعْرُوفًا ۝

8. மேலும், (வாரிசு உரிமை பெறாத) உறவினர்களும், (பாகஸ்தர்களாக இல்லாத) அனாதைகளும், ஏழைகளும் (இறந்து விட்டவரின் சொத்தைப்) பாகம் செய்யும்போது வந்தால் அதிலிருந்து (பாகம் செய்வதற்கு முன்) அவர்களுக்கும் கொடுங்கள்; இன்னும், அவர்களுக்கு நல்ல வார்த்தையைக் கூறுங்கள்.

இறந்துபோனவரது சொத்தை அனந்தர பாத்தியக்காரர்கள் பாகம் பிரித்துக் கொண்டிருக்கையில் அனந்தரப் பாத்தியத்தை

அடையத்தகுதி இல்லாத உறவினர்கள், அந்நிய அனாதைகள், ஏழைகள் அந்த இடத்திற்கு வந்தால் அந்தச் சொத்திலிருந்து சொற்பத்தை அவர்களுக்குக் கொடுத்து "அல்லாஹு தஆலா உங்களுக்கு பரக்கத்தைச் செய்வானாக" என்று நல்ல வார்த்தை சொல்ல வேண்டும். இப்படிச் செய்வது முஸ்தஹப்பு. முற்காலத்திலுள்ள முஃமின்கள் இவ்விதஞ் செய்து கொண்டிருந்தனர். இது ஃபர்லல்ல. இதனை இறைவன் ஃபர்லாக ஏற்படுத்தி இருந்தால் இத்தனையில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும் என்று வரையறை செய்திருப்பான்.

இந்த ஆயத்து மன்ஸூகாக்க (ரத்து செய்ய) ப்பட்டு விட்டதென்று சிலர் கூறி இருக்கிறார்கள். வேறு சிலர் இது மன்ஸூகாக்க (ரத்து செய்ய)ப் படவில்லை, ஆனால், இதன்படி நடப்பதில் மனிதர்கள் அலட்சியமாக இருக்கிறார்கள் என்றுங் கூறி இருக்கிறார்கள்.

وَلْيَخْشَ الَّذِينَ لَوْ تَرَكُوا مِنْ خَلْفِهِمْ ذُرِّيَّةً ضِعَافًا
خَافُوا عَلَيْهِمْ فَلْيَتَّقُوا اللَّهَ وَلْيَقُولُوا قَوْلًا سَدِيدًا ۝

9. இன்னும், எவர்கள் தங்களுக்குப் பின் இயலாத மக்களை விட்டுச் சென்றால் அவர்களை(க் குறித்து) பயப்படுகிறவர்கள் (அனாதைகள் விஷயத்திலும்) பயந்து கொள்ளவும். எனவே, அவர்கள் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ள வேண்டும். இன்னும், நேர்மையான வார்த்தையைச் சொல்ல வேண்டும்.

இந்த ஆயத்து அனாதைக் குழந்தைகளைக் குறித்து அருளப்பட்டதாகும். அதாவது சிறு குழந்தைகள் உள்ளவர்கள் தங்களுக்கு மரணம் வருவதை மிகவும் பயப்படுவார்கள். ஏனெனில், தங்களது மரணத்திற்குப் பிறகு அந்தச் சிறு குழந்தைகளது நிலை எவ்வாறு இருக்குமோ என்று பயப்படுவார்கள். இதுபோல தங்கள் போஷணையின் கீழ் இருக்கிற அனாதைகளைக் குறித்தும் இவ்விதமாக அச்சங் கொள்ள வேண்டும். அனாதைகள் விஷயத்தில் அல்லாஹுத் தஆலாவைப் பயப்பட வேண்டும். தங்கள் மரணத்திற்குப்

பிறகு தங்களது சிறு குழந்தைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புவார்களோ அவ்வாறு தங்கள் போஷணையின் கீழுள்ள அனாதைகளும் இருக்க வேண்டும் என்று விரும்பவேண்டும். மரணத்தருவாயில் இருப்பவர் வஸிய்யத்துச் செய்ய விரும்பினால் அவருக்கு நேர்மையான சொல்லையே கூறவேண்டும். அதாவது அவரது சொத்தில் மூன்றிலொரு பங்குக்குக் குறைவாகவே வஸிய்யத்து செய்யும்படியும், பாக்கியுள்ளதை அனந்தர பாத்தியக்காரர் களுக்குச் சேர்க்கும்படியும் கூற வேண்டும் என்பன இந்த ஆயத்தில் கூறப்பட்டுள்ள விதிகள்.

ஹதீஸ்:- "அனாதைகளைப் போஷிப்பதாகப்பொறுப்பேற்றுக் கொண்டவர்களும் நானும் இப்படி இருப்போம்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி தங்களது இரு விரல்களையும் சேர்த்துக் காண்பித்தார்கள்.

ஹதீஸ்:- "ஒருவர் அறுபது வருடகாலம் நன்மையைச் செய்து கொண்டிருப்பார். இந்நிலையில் அவருக்கு மரணம் வரும். அவர் தமது வஸிய்யத்தில் அநீதி செய்வார். அதன் காரணமாக அவருக்கு நரகம் வாஜிபாகிவிடும்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

إِنَّ الَّذِينَ يَأْكُلُونَ أَمْوَالَ الْيَتَامَىٰ ظُلْمًا إِنَّمَا
يَأْكُلُونَ فِي بُطُونِهِمْ نَارًا ۖ وَسَيَصْلَوْنَ سَعِيرًا ۝

10. நிச்சயமாக எவர்கள் அனாதைகளின் பொருள்களை அநீதியாகப் புசிக்கின்றனரோ தங்களுடைய வயிறுகளில் நெருப்பைத்தான் அவர்கள் தின்னுகின்றனர். மேலும், அவர்கள் ஜ்வாலைவிட்டு எரியும்படியான நெருப்பில் விரைவில் சேருவார்கள்.

رُوِيَ أَنَّ آكِلَ مَالِ الْيَتِيمِ يُبْعَثُ يَوْمَ الْقِيَامَةِ وَالدُّخَانُ يَخْرُجُ
مِنْ قَبْرِهِ وَمِنْ فِيهِ وَأَنْفِهِ وَأُذُنَيْهِ وَعَيْنَيْهِ وَيَعْرِفُ النَّاسُ أَنَّهُ

كَانَ يَاْكُلُ مَالَ الْيَتِيْمِ فِي الدُّنْيَا

ரிவாயத்து:- அனாதைகளது பொருள்களைப் புசிப்பவர்கள் கியாமத்து நாளில் எழுப்பப் படுவார்கள். அப்போது அவர்களுடைய கப்ருகள், வாய்கள், மூக்குகள், செவிகள், கண்கள் ஆகியவற்றிலிருந்து புகை வெளியேறிக் கொண்டிருக்கும். அவர்கள் உலகிலிருந்த போது அனாதைகளின் பொருள்களைப் புசித்தார்கள் என்று மனிதர்கள் அறிந்து கொள்வார்கள்.

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّي اللهُ عَلَيْهِ وَسَلَّمَ رَاَيْتُ لَيْلَةَ اُسْرِيَ
بِيْ قَوْمًا لَهُمْ مَشَافِرُ كَمَشَافِرِ الْاِبِلِ اِحْدَاهُمَا قَالِصَةٌ
عَلَى مَنْخَرَيْهِ وَالْاُخْرَيْ عَلَى بَطْنِهِ وَخَزَنَةُ جَهَنَّمَ يَلْقِمُوْنَهُ
جَمْرَ جَهَنَّمَ وَصَخْرَهَا فَقُلْتُ يَاجِبْرِيْلُ مَنْ هٰؤُلَاءِ قَالَ الَّذِيْنَ
يَاْكُلُوْنَ اَمْوَالَ الْيَتَامَي ظُلْمًا

ரிவாயத்து:- "நான் மிஃராஜுக்கு சென்றிருந்த இரவில் சில மனிதர்களைக் கண்டேன். அவர்களது உதடுகள் ஒட்டகையின் உதடுகளைப் போலிருந்தன. ஒரு உதடு மூக்குத் துவாரத்தையும் மற்றொரு உதடு வயிற்றையும் தொட்டுக் கொண்டு சுருண்டிருந்தன. நரகத்தில் ஊழியம் செய்து கொண்டிருக்கிற ஜபானிய்யா என்னும் மலக்குகள் நரகத்திலுள்ள பெருங்கற்களையும் நெருப்புக் கட்டிகளையும் அவர்களது வாய்களில் பிடித்து ஊட்டிக் கொண்டிருந்தனர். இவர்கள் யார் என நான் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கேட்டேன். அநீதியாக அனாதைகளது பொருள்களைப் புசித்தவர்கள் என்று பதிற் கூறினார்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

يُوْصِيْكُمُ اللّٰهُ فِيْٓ اَوْلَادِكُمْ ۗ لِلذَّكَرِ مِثْلُ حَظِّ
الْاُنْثَيَيْنِ ۚ فَاِنْ كُنَّ نِسَاۤءً فَوْقَ اثْنَتَيْنِ فَلَهُنَّ

ثُلُثَا مَا تَرَكَ ۚ وَاِنْ كَانَتْ وَاحِدَةً فَلَهَا النِّصْفُ ۗ
وَلِاَبَوَيْهِ لِكُلِّ وَاحِدٍ مِّنْهُمَا السُّدُسُ مِمَّا تَرَكَ
اِنْ كَانَ لَهٗ وَلَدٌ ۚ فَاِنْ لَّمْ يَكُنْ لَّهٗ وَلَدٌ وَّوَرِثَهٗٓ
اَبَوٰهُ فَلِاُمِّهِ الثُّلُثُ ۚ فَاِنْ كَانَ لَهٗٓ اِخْوَةٌ فَلِاُمِّهِ
السُّدُسُ مِنْۢ بَعْدِ وَصِيَّةٍ يُّوْصِيْ بِهَآ اَوْ دَيْنٍ ۗ
اٰبَاۤؤُكُمْ وَاَبْنَاۤؤُكُمْ لَا تَدْرُوْنَ اَيُّهُمْ اَقْرَبُ لَكُمْ
نَفْعًا ۚ فَرِيْضَةً مِّنَ اللّٰهِ ۗ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا
حَكِيْمًا ۝

11. உங்களது பிள்ளைகள் விஷயத்தில் உங்களுக்கு அல்லாஹ் உபதேசிக்கின்றான்; (அதாவது) இரண்டு பெண்களுக் குள்ள பாகத்தைப் போல் ஒரு ஆணுக்கு (ப் பாகம்) இருக்கிறது. எனினும், அவர்கள் (யாவரும்) இரண்டிற்கு மேற்பட்ட பெண்களாக இருந்தால், அப்பெண்களுக்கு அவன் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகம் உரியதே. இன்னும் ஒரே பெண் மாத்திரமிருந்தால் அவளுக்குப் பாதியிருக்கிறது. (இறந்து போன) அவனுக்குப் பிள்ளை இருந்தால் அவனுடைய தாய் தந்தையர்கள் ஒவ்வொருவருக்கும் அவன் விட்டுப்போன (சொத்)தில் ஆறில் ஒருபாகம் இருக்கிறது; அவனுக்குப் பிள்ளையில்லாதிருந்து அவனது தாய் தந்தையர்கள் (மட்டும்) அவனின் பாத்தியஸ்தர்களாக இருந்தால் அவனுடைய தாய்க்கு மூன்றில் ஒரு பாகம் உண்டு. (மீதி யாவும் தந்தைக்கே). எனவே, (இறந்துபோன) அவனுக்குச் சகோதரர்களிருந்தால் அவனது தாய்க்கு ஆறில் ஒரு பாகம் உண்டு; (மேற்கூறிய பாகங்களெல்லாம் மரணித்தவன் மரணிப்பதற்கு முன்பு) அவன் செய்துள்ள வஸியத்

(மரண உபதேசத்)திற்கும், கடனுக்கும் (கொடுத்து முடிந்த) பின்னர்தான். உங்களது தந்தையர்களும் தனையர்களும் - இவர்களில் எவர் உங்களுக்கு நன்மை பயக்குவதில் அதிகம் நெருங்கியவர் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்; (இவைகள்) அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்டவை. நிச்சயமாக அல்லாஹ் மிகவும் அறிபவன்; விவேகமுள்ளவன்.

இந்த ஆயத்தில் அல்லாஹுத் தஆலா இறந்து போனவர்களது மக்கள்,தாய், தந்தையர்களுக்குக் கிடைக்கிற அனந்தர பாத்தியத்தைப் பற்றிய விபரத்தைக் கூறியுள்ளான். அதன் விபரம் வருமாறு.

இறந்துபோன ஒருவருக்கு ஆண் பெண் ஆகிய இரண்டு வகுப்பிலும் மக்கள் இருந்தால் ஆணுக்கு இரண்டு பங்கும் பெண்ணுக்கு ஒரு பங்குமாகப் பாகமுண்டு. இறந்தவருக்கு ஒரே ஒரு புதல்வி மட்டுமிருந்தால் அவளுக்கு அச்சொத்தில் சரிபாதி. ஒன்றுக்கு மேல் இரண்டு அல்லது இரண்டிற்கு அதிகமாகப் பெண்மக்கள் மட்டும் இருந்தால் அவர்கள் அனைவருக்கும் மூன்றிலிரண்டு பாகம்.

இறந்துபோனவருக்கு மக்கள் இருந்தால் அவருடைய தாய் தந்தை ஆகிய ஒவ்வொருவருக்கும் ஆறிலொரு பங்குண்டு. அவருக்கு மக்களில்லாவிடில் தாய் தந்தை ஆகிய இருவருமே அந்தச் சொத்தை அனந்தர பாத்தியமாக அடைவர். இவ்விருவரிலும் தாய்க்கு மட்டும் மூன்றிலொன்றும் பாக்கி தந்தைக்கும் சேரும். தவிர இறந்தவருக்கு உடன் பிறந்தவர்களிருந்தால் தாய்க்கு ஆறிலொன்றும், பாக்கி தந்தைக்குச் சேரும். உடன் பிறந்தவர்களுக்கு பாகமில்லை. இவ்விதமாக இறந்தவர்களது சொத்தைப் பங்குபோடுவதற்கு முன் அவருக்குக் கடனிருந்தால் அந்தக் கடனைக் கொடுத்துவிட வேண்டும், வஸியத்துச் செய்திருந்தால் அந்த வஸிய்யத்தை நிறைவேற்றிவிட வேண்டும்.

இறந்துபோனவரது சொத்துக்களை அடைய பாத்தியம் உள்ளவர்கள் இவர்களைத் தவிர வேறு சிலருமுளர். அவர்களைப் பற்றிய விபரம் இந்த ஆயத்திற் கூறப்படவில்லை. ஆயினும், தாய்

தந்தையரையும் மக்களையும் பற்றி மட்டுமே இந்த ஆயத்தில் கூறப்பட்டிருப்பதால் இவர்களில் எவர் அதிகப் பிரயோஜன முள்ளவர் என்பதைத் தெரிந்து கொள்வது முடியாது. ஆதலின், அல்லாஹு தஆலா ஏற்படுத்திய இவ்விதியின்படி நடந்து கொள்வது அவசியமாகும் என்ற விபரம் **"உங்களது தந்தையர்களும் தனையர்களும் இவர்களில் எவர் உங்களுக்கு நன்மை பயக்குவதில் அதிகம் நெருங்கியவர் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்"** என்ற வசனத்திலிருந்து கூறப்பட்டிருக்கிறது.

فِيْ الخَبَرِ يُسْاَلُ الوَلَدُ عَنِ الصَلاَةِ ثُمَّ عَنْ حَقِّ الْوَالِدِيْنَ
وَتُسْأَلُ المَرْأَةُ عَنِ الصَّلاَةِ ثُمَّ عَنْ حَقِّ زَوْجَهَا وَيُسْأَلُ الْعَبْدُ
عَنِ الصَّلوَةِ ثُمَّ عَنْ حَقِّ المَوْلَي ثُمَّ اِنَّ الحَقَّ الْوَالِدَةِ اَعْظَمُ
مِنْ اَلْوَالِدِ لِكَوْنِهَا اَكْثَرَ زَحْمَةً وَرَحْمَةً

ரிவாயத்து:- மக்கள் முதலாவதாகத் தொழுகையைப் பற்றியும், பின்னர் தாய் தந்தையருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றியதைப் பற்றியும் விசாரிக்கப்படுவார்கள். பெண்கள் தொழுகையைப் பற்றி முதலிலும் பின்னர் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றியதைக் குறித்தும் விசாரிக்கப் படுவார்கள். அடிமை முதலாவதாகத் தொழுகையைப் பற்றியும் பின்னர் எஜமானனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியும் விசாரிக்கப் படுவான். பின்னர் தாய்க்குச் செய்ய வேண்டிய கடமை தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமையைப் பார்க்கினும் பெரிதாகும். ஏனெனில், தந்தையைப் பார்க்கினும் தாய்தான் அதிகக் கஷ்டத்தை அனுபவிப் பவளாகவும் மக்கள்பால் அதிகக் கிருபை யுள்ளவளாகவும் இருக்கிறாள்.

؛ وَجَاءَ رَجُلٌ اِلَيْ النَبِى صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ لِيَسْتَشِيْرُهُ فِيْ
الغَزْوِ فَقَالَ أَلَكَ وَالَدَةٌ قَالَ نَعْمَ قَالَ عَلَيْهِ السَّلاَمُ فَالْزِ
مْهُ فَاِنَّ الْجَنَّةَ تَحْتَ رِجْلَيْهَا

ரிவாயத்து:- மார்க்க யுத்தத்திற்குச் செல்வத்தைக் குறித்து ஆலோசனை செய்ய ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரை நோக்கி "உமக்குத் தாய் இருக்கிறாளா?" என்று வினவினார்கள். அதற்கவர் "ஆம்" என்று கூறினார். அப்பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அப்படியானால், அவளிடம் இருந்து கொள்ளும். சுவர்க்கம் அவளது இரண்டு கால்களுக்குக் கீழ் இருக்கிறது" என்று கூறினார்கள்.

தாய் தந்தைக்கு பணிவிடை செய்வதைக் குறித்து இவ்வாறான ஹதீஸ்களும் ரிவாயத்துகளும் வந்திருந்தாலும் இஸ்லாம் மார்க்கத்தில் விலக்கப்படாத காரியங்களிலேயே அவர்களுக்குக் கீழ்படிய வேண்டும். ஆனால், அவர்கள் ஷிர்க்கு வைக்கவோ பாவம் செய்யவோ கூறுவார்களாயின் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை. ஏனெனில், இவ்விஷயத்தில் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டிய தில்லை என்பதைக் குறித்து இறைவன் தனது திருமறையில் மற்றொரு இடத்தில் "**மேலும், எதில் உனக்கு அறிவில்லையோ அத்தகையதை எனக்கு இணை வைப்பதற்கு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால், அப்போது அவ்விருவருக்கும் நீ கீழ்ப்படிய வேண்டாம்**" (சூரத்துல்அன்கபூத் 8) என்று கூறியுள்ளான்.

وَلَكُمْ نِصْفُ مَا تَرَكَ أَزْوَاجُكُمْ إِنْ لَمْ يَكُنْ لَهُنَّ وَلَدٌ ۚ
فَإِنْ كَانَ لَهُنَّ وَلَدٌ فَلَكُمُ الرُّبُعُ مِمَّا تَرَكْنَ مِنْ
بَعْدِ وَصِيَّةٍ يُوصِينَ بِهَا أَوْ دَيْنٍ ۚ وَلَهُنَّ الرُّبُعُ مِمَّا
تَرَكْتُمْ إِنْ لَمْ يَكُنْ لَكُمْ وَلَدٌ ۚ فَإِنْ كَانَ لَكُمْ وَلَدٌ
فَلَهُنَّ الثُّمُنُ مِمَّا تَرَكْتُمْ مِنْ بَعْدِ وَصِيَّةٍ تُوصُونَ

بِهَا أَوْ دَيْنٍ ۗ وَإِنْ كَانَ رَجُلٌ يُورَثُ كَلَالَةً أَوِ امْرَأَةٌ
وَلَهُ أَخٌ أَوْ أُخْتٌ فَلِكُلِّ وَاحِدٍ مِنْهُمَا السُّدُسُ ۚ
فَإِنْ كَانُوا أَكْثَرَ مِنْ ذَٰلِكَ فَهُمْ شُرَكَاءُ فِي الثُّلُثِ
مِنْ بَعْدِ وَصِيَّةٍ يُوصَىٰ بِهَا أَوْ دَيْنٍ غَيْرَ مُضَارٍّ ۚ
وَصِيَّةً مِنَ اللَّهِ ۗ وَاللَّهُ عَلِيمٌ حَلِيمٌ ۝

12. இன்னும், உங்களது மனைவியர்கள் – அவர்களுக்குச் சந்ததியில்லையாயின் (அவர்கள்) விட்டுச் சென்றதில் உங்களுக்குப் பாதி இருக்கிறது; எனினும், அப்பெண்களுக்குச் சந்ததியிருந்தால் அப்பெண்கள் விட்டுப் போனதில் வஸியத் (மரண உபதேசத்)திற்கோ அல்லது கடனுக்கோ (கொடுத்து முடிந்த) பின்பு (மிகுதியாவதில்) உங்களுக்குக் கால்பாகந்தானுண்டு. உங்களுக்குச் சந்ததியில்லை யானால் நீங்கள் விட்டுச் செல்வதில் (உங்கள் மனைவியர்களான) அப்பெண்களுக்கு கால்பாகம் உண்டு. உங்களுக்குச் சந்ததியிருந்தால் நீங்கள் விட்டுப் போனதில் நீங்கள் செய்திருக்கும் வஸீயத் (மரண உபதேசத்)திற்கு அல்லது கடனுக்குப் பின்னர் (மனைவியர்களான) அவர்களுக்கு அரைக்கால் பாகமுண்டு. தந்தையும் சந்ததியுமற்றவராக இருக்கிற நிலையில் (மரணித்து) ஓர் ஆண் அல்லது ஓர் பெண்(ணின் சொத்துக்கள்) கலாலாவாக இருந்தால் (இறந்தவருக்குத் தன் தாய் பெற்ற) ஒரு சகோதரனும் ஒரு சகோதரியுமிருந்தால் அவ்விருவரில் ஒவ்வொருவருக்கும் (அச் சொத்தில்) ஆறில் ஒரு பாகம் உண்டு. இதை (இரண்டை) விட (ச் சகோதர சகோதரிகள்) அதிகமாக இருந்தால் தீதில்லா வஸியத் (மரண உபதேசத்)திற்கோ அல்லது கடனுக்கோ (கொடுத்துப்) பிறகு (மீதியாவதில்) மூன்றில் ஒரு பாகத்தில் அவர்கள் (யாவரும்) கூட்டாளிகளே. (இது) அல்லாஹ்வில் நின்றுமுள்ள உபதேசக்

கட்டளையாகும்; மேலும், அல்லாஹ் மிக அறிபவன், பொறுமை யாளன்.

இந்த ஆயத்தில் கணவன், மனைவி, தாய் பெற்ற சகோதர சகோதரிகளுக்கு ஏற்பட்ட அனந்தரபாத்தியத்தைப் பற்றிய விபரம் கூறப்பட்டிருக்கிறது.

மனைவியருக்குப் பிள்ளை இல்லாமலிருந்தால் கணவனுக்கு அவளுடைய சொத்தில் பாதி பாத்தியமுண்டு. பிள்ளை யிருந்தால் கால் பாகமுண்டு. கணவனுக்குப் பிள்ளை இல்லாதிருந்தால் மனைவிக்கு அவனது சொத்தில் கால்பாக முண்டு. பிள்ளை இருந்தால் அரைக்கால் பாகமுண்டு. பெற்றோர்களும், பிள்ளைகளும் இல்லாத ஒருவர் இறந்து, அவருக்கு அவரது தாய் பெற்ற மக்கள் அதாவது அவரது தாய் வேறு கணவனுக்குப் பெற்ற மக்கள் ஒன்றுக்கு மேல் இருந்தால் எல்லோருக்கும் மூன்றிலொரு பாகமுண்டு. ஒருவர் மட்டுமிருந்தால் ஆறிலொரு பாகமுண்டு. இவர்களில் ஆணுக்கு இரண்டு பாகம் பெண்ணுக்கு ஒரு பாகம் என்ற பாகுபாடில்லை. ஆணும் பெண்ணும் சமபாகஸ்தர்களே யாவர். ஏனெனில், இவர்கள் பெண் வாரிசுகளாக இருப்பதால் இவர்களில் ஆண் பெண் என்ற பாகுபாடில்லை. இவ்விதமான பாகங்கள்இறந்து போனவருக்கிருக்கிற கடனைக் கொடுத்து, வஸிய்யத்துச் செய்திருந்தால் வஸிய்யத்தை நிறைவேற்றிய பிறகுதான்.

அனந்தர பாத்தியத்தை அல்லாஹு தஆலா தனது கட்டளையாக அமைத்திருக்கிறான் என்பதையும் அதனைக் கொடுக்காமல் அபகரித்துக் கொள்ளலாகாது என்பதையும் அறிவுறுத்து வதற்காகவே وَصِيَّةً مِّنَ اللَّهِ அல்லாஹ்வில் நின்றுமுள்ள உபதேசக் கட்டளையாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள அனந்தர பாத்தியத்தைத் துண்டித்து விட்டவருக்கு, சுவர்க்கத்தில் அவருக்கிருக்கிற அனந்தர பாத்தியத்தை அல்லாஹ் துண்டித்து விடுவான்” என்று கூறி இருக்கிறார்கள். தாய், தந்தை, புதல்வன், புதல்வி ஆகியவர்கள் இல்லாதவர்களுக்கு **கலாலா** என்று பெயர்.

تِلْكَ حُدُودُ اللَّهِ ۚ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ يُدْخِلْهُ جَنَّاتٍ
تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ خَالِدِينَ فِيهَا ۚ وَذَٰلِكَ
الْفَوْزُ الْعَظِيمُ ﴿١٣﴾

13. இவை அல்லாஹ்வின் திட்டங்கள். ஆனால், எவன் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப்படுகின்றானோ அவனைச் (சுவர்க்கத்தின்) சோலைகளில் பிரவேசிக்கச் செய்கின்றான். அவற்றிற்குக் கீழ் அருவிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் அவர்கள் என்னாளும் இருப்பார்கள். மேலும், இதுவே மகத்தான வெற்றியாகும்.

இவை என்ற பதம் இந்த ஆயத்திற்கு முன்னர் அனாதைகள் வஸிய்யத்து, அனந்தரப் பாத்தியம் ஆகியவற்றைப் பற்றிக் கூறப்பட்டுள்ள எல்லாக் கட்டளைகளையும் குறிக்கும்.

وَمَنْ يَعْصِ اللَّهَ وَرَسُولَهُ وَيَتَعَدَّ حُدُودَهُ
يُدْخِلْهُ نَارًا خَالِدًا فِيهَا وَلَهُ عَذَابٌ مُهِينٌ ﴿١٤﴾

14. மேலும், எவன் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்து அவனுடைய திட்டங்களை மீறி விடுகின்றானோ அவனை நரகத்தில் புகுத்துவான். அதில் அவர்கள் என்னாளுமிருப்பார்கள். இன்னும், அவனுக்கு இழிவைத்தரும் வேதனையும் இருக்கிறது.

இதற்கு முந்திய ஆயத்தில் அல்லாஹுதஆலாவிற்கும் அவனது ரசூலுக்கும் கீழ்ப்படிந்து அவனேற்படுத்திய சட்டங்களை மீறாமல் இருப்பவர்கள் அடையும் மறுமைப் பேற்றையும், இந்த ஆயத்தில் அல்லாஹுதஆலாவிற்கும் அவனது ரசூலுக்கும் கீழ்ப் படியாமல் அவன் ஏற்படுத்தியுள்ள சட்டங்களை மீறியவர்கள்

மறுமையில் அடையும் வேதனைகளையும் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றன.

يُدْخِلْهُ نَارًا **அவரை (நரக) நெருப்பில் புகுத்துவான்** என்ற வசனம் மறுமையில் நரகவாதிகளுக்குக் கிடைக்கிற உடல் வேதனையையும் وَلَهُ عَذَابٌ مُّهِينٌ **இன்னும் அவருக்கு இழிவைத் தரும் வேதனை இருக்கிறது** என்ற வசனம் நரகவாதிகளுக்கு மறுமையில் கிடைக்கிற ஆத்ம வேதனையையும் பற்றி அறிவிக்கின்றன.

وَالّٰتِي يَأْتِينَ الْفَاحِشَةَ مِن نِّسَائِكُمْ فَاسْتَشْهِدُوا
عَلَيْهِنَّ أَرْبَعَةً مِّنكُمْ ۚ فَإِن شَهِدُوا فَأَمْسِكُوهُنَّ
فِي الْبُيُوتِ حَتَّىٰ يَتَوَفَّاهُنَّ الْمَوْتُ أَوْ يَجْعَلَ اللَّهُ
لَهُنَّ سَبِيلًا ۝

15. இன்னும், உங்களுடைய பெண்களில் எவர்கள் விபச்சாரத்தைச் செய்கின்றார்களோ அவர்கள் மீது (விசுவாசிகளாகிய) உங்களிலிருந்து நான்கு பேரை சாட்சிகளாகக் கொண்டு வாருங்கள்; அவர்கள் சாட்சியம் கூறிவிட்டால், அப்பெண்களுக்கு மரணம் வரும்வரையில் அல்லது அவர்களுக்கு அல்லாஹ் (வேறு விதச் சட்டத்தை ஏற்படுத்தி ஒரு வழியை ஏற்படுத்தும் வரையில் அப்பெண்களை வீடுகளில் தடுத்து வையுங்கள்.

பெண்கள் விபச்சாரம் செய்ததாக நான்கு பேர் சாட்சியங் கூறினால் அவர்களை வெளியில் செல்லவிடாமல் வீடுகளில் தடுத்து வைக்க வேண்டும் அப்புறம் அவர்களை திருமணம் செய்வதற்குத் தக்க வசதி கிடைத்தால் திருமணம் செய்து கொடுத்து விட வேண்டும், அதற்கு வழியில்லா விட்டால் அவர்களை மரணிக்கும் வரை வீட்டிலேயே தடுத்து நிறுத்திவிட வேண்டும் என்பது இந்த ஆயத்திற் சொல்லப்பட்ட கட்டளையாகும்.

فَاسْتَشْهِدُوا عَلَيْهِنَّ أَرْبَعَةً مِّنكُمْ **உங்களிலிருந்து நால்வரை அவர்கள் மீது சாட்சிகளாகக் கொண்டு வாருங்கள்** என்ற வாக்கியத்திலிருந்து சாட்சி சொல்ல வருபவர்கள் முஸ்லிமாகவும், அடிமையாக இல்லாமலும், ஆடவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது வெளியாகிறது.

وَالَّذَانِ يَأْتِيَانِهَا مِنكُمْ فَآذُوهُمَا ۖ فَإِن تَابَا وَأَصْلَحَا
فَأَعْرِضُوا عَنْهُمَا ۗ إِنَّ اللَّهَ كَانَ تَوَّابًا رَّحِيمًا ۝

16. இன்னும், உங்களிலிருந்து இருவர் அதைச் செய்தால் அவ்விருவரையும் (ஏசுவது, அடிப்பது ஆகியவற்றால்) நோவினை செய்யுங்கள்; எனவே, அவ்விருவரும் (அதை விட்டுத்) திரும்பி அவர்களிருவரும் நல்ல காரியங்களைச் செய்தால் அவ்விருவரையும் விட்டு விடுங்கள். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ் பாவ மன்னிப்புப் பிரார்த்தனையை ஒப்புக் கொள்ளுபவன் (இன்னும்) பேரன்புடையோன்.

விபச்சாரம் செய்தது சாட்சிகள் மூலமாக நிரூபிக்கப்பட்ட பின்னர் அவ்விருவரையும் வருத்தப்படுத்த வேண்டும். தங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவமானத்தைக் குறித்து அவ்விருவரும் வருந்தி இனிமேல் அதனைச் செய்வதில்லை என்று தவ்பாச் செய்து, நற்செயல்களைச் செய்வதன்பால் தங்களை இணக்கப்படுத்திக் கொள்வார்களாயின் அவ்விருவரையும் நோவினை செய்தல், வருத்தப்படுத்துதல் முதலிய காரியங்களைச் செய்யாமல் விட்டு விட வேண்டும் என்பது இந்த ஆயத்தில் கூறப்பட்ட விதிகளாகும்.

அறிந்துகொள்:- ஒரு ஆடவர் ஒரு பெண்ணை விபச்சாரம் செய்தால் அவ்விருவரும் முஹ்ஸினாக இருந்தால் அவ்விருவரையும் கல்லாலெறிந்து கொல்வதுதான் அவர்களுக்குரிய (ஹத்து என்னும்) தண்டனை. அவ்விருவரும் முஹ்ஸினாக இல்லாதிருந்தால் அவ்விருவரையும் (ஜில்து என்னும்) கசையடி அடிப்பதுதான் (ஹத்து